பக்கங்கள் : பதினெட்டு

உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 மாசி 11 வியாழக்கிழமை (23.02.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :88

ஐந்து தமிழ் துணைப் படைகளினால் யுத்தநிறுத்தத்துக்கு பெரும் ஆபத்து!

அவற்றின் ஆயுதங்கள் களையப்பட வேண்டும் ஜெனீவா மாநாட்டில் பாலசிங்கம் வலியுறுத்து

- ஜெனீவாவிலிருந்து ந.வித்தியாதரன் -

ஜெனீவா, பெப்ரவரி 23

வடக்கு - கிழக்கிலும், கொழும்பிலும் ஐந்து பிரதான இராணுவத் துணைப்படைகள் செயற்படுகின்றன. அவை கருணா குழு, ஈ.பி.டி.பி.குழு, புளொட் குழு, ஈ.பி.ஆர்.எல்.எவ்.(வரதர்) குழு, ஜிகாத் குழு என்று அழைக்கப்படுகின்றன. இந்தக் குழுக்களால் எமது பல தலைவர்கள், எமது இயக்க உறுப்பினர்கள் மற்றும் முக்கியமான நாடாளுமன்ற உறுப்பினர்கள், கல்விமான்கள், மக்கள் ஆதரவாளர்கள் போன்றோர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். துணைப்படைகளை நிராயுதபாணிகளாக்கி வன்முறை நடவடிக்கைகளை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும்.

- இவ்வாறு நேற்று ஜெனீவாவில் ஆரம்பமான போர் நிறுத்த உடன்படிக்கை அமுலாக்கம் குறித்த பேச்சுக்களில் ஆரம்ப உரை நிகழ்த்திய புலிகளின் பேச்சுக் குழுத் தலைவர் அன்ரன் பாலசிங்கம் வலியுறுத்தினார்.

அன்ரன் பாலசிங்கம் ஆற்றிய உரையின் விவரம் வருமாறு:-

நோர்வேயின் அனுசரணையோடு முன்னெடுக்கப்பட்ட அமைதி முயற்சிகளின் ஆக்கபூர்வமான பெறுபேறு, இன்றைக்குச் சரியாக நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கைச்சாத்தான யுத்தநிறுத்த உடன்பாடாகும். அந்த நிகழ்வு இரண்டு தசாப்தகாலத் துக்கும் அதிகமாக பெரிய அளவிலான உயிரிழப்புகளுக்கும் அழிவுகளுக்கும் காரணமான - இரத்த ஆறு பெருக்கெடுத்த - இனப் போருக்கு ஒரு முடிவைக் கொண்டுவந்தது.

இந்த யுத்தநிறுத்த உடன்பாடு - குறிப்பாக 2005ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் - பெரிய அளவில் நெருக்கடிக்கு உள்ளாகி வந்துள்ள போதிலும், சம்பந்தப்பட்ட தரப்புகளைப் பெரும் ஆயுத மோதலில் இறங்க விடாமல் இன்னும் நீடித்துவருகிறது.

(03 ஆம் பக்கம் பார்க்க)

ஜெனீவாப் பேச்சுகளின் ஆரம்பத்தில் கைலாகு கொடுத்துக்கொள்ளும் அன்ரன் பாலசிங்கம் மற்றும் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா. பின்னால் நோர்வே முன்னாள் பிரதியமைச்சர் விடார் ஹெல்கிஸன், சுவிஸ் வெளிவிவகார அமைச்சு அதிகாரி மார்ஸ்வெல், அனுசரணைக் குழுத்தலைவரும் நோர்வேயின் சர்வதேச அபிவிருத்தி அமைச்சருமான சொல்ஹெய்ம் ஆகியோர் நிற்கின்றனர்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு சுவிஸ் பாரபட்சமற்ற ஆதரவு

அந்நாட்டு அதிகாரி நேற்றுத் தெரிவிப்பு

ஜெனீவா, பெப். 23

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயத்தில் பாரபட்சமற்ற ஆதரவை வழங்குவதற்குத் தயாராக இருக்கின்றது என்று சுவிற்ஸர்லாந்து தெரிவித்துள்ளது.

ஜெனீவாவில் நேற்று ஆரம்பமான பேச்சுகளில் முன்னதாக உரையாற்றிய சுவிற்ஸர்லாந்தின் வெளிவிவகார அமைச்சு சமஷ்டித் திணைக்களத்தின் அரசியல்

(18ஆம் பக்கம் பார்க்க)

உடன்படிக்கை அமுலாக்கம் பற்றி மட்டும் பேச அரச குழு இணக்கம்

ஜெனீவா, பெப்.23

ஜெனீவாப் பேச்சில் யுத்தநிறுத்த உடன்படிக்கையை நடைமுறைப்படுத்துவது குறித்து மட்டும் பேசுவதற்கு அரச தரப்புப் பேச்சுக் குழுவினர் இணங்கியுள்ளனர். நேற்று மதிய உணவுக்குப் பின்னர் இது பற்றிய பேச்சுகள் இடம்பெறவிருந்தன.

முன்னதாக காலை 9 மணிக்குப் பின்னர் பேச்சு ஆரம்பமானதும் நோர்வே அனுசரணைக் குழுவின் தலைவரும் அந்நாட்டு சர்வதேச அபிவிருத்தித் துறை அமைச்சருமான எரிக் சொல்ஹெய்ம் முதலில் உரை

(18ஆம் பக்கம் பார்க்க)

உள்ளே.....

கல்விச்சுடர்

எதிர்வரும் ஏப்ரல் மாதம் நடைபெறவுள்ள ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் நலன் கருதி வெளியாகும் வினாத்தாள்களை வரிசையில் 'உயிரியல்' வினாத்தாள் இன்று பிரசுரமாகின்றது. மாணவர்களே! உங்கள் பிரதியை பெற்றுக்கொள்வதை உறுதி செய்யுங்கள்.

ஜெனீவாப் பேச்சுகள் நேற்று ஆரம்பம்

உடன்படிக்கை அமுலாக்கத்தை ஸ்திரப்படுத்துவது தொடர்பாகவே அரசு-புலிகள் பேச்சில் ஆராயப்படும்

- ஜெனீவாவிலிருந்து ந.வித்தியாதரன் -

ஜெனீவா, பெப்.23

யுத்த நிறுத்த உடன்படிக்கையின் அமுலாக்கத்தை ஸ்திரப்படுத்துவது குறித்தே ஜெனீவா பேச்சுகளில் ஆராயப்படும் என்று தெரிவித்தார் நோர்வே அனுசரணைக் குழுவின் தலைவரும் அந்நாட்டு சர்வதேச அபிவிருத்தி அமைச்சருமான எரிக் சொல்ஹெய்ம். என்றாலும் இந்தப் பேச்சுகள் மூலம் பெரும் திருப்பங்கள் நிகழும் என்று எவரும் எதிர்பார்க்கக்கூடாது என்றும் கூறிய அவர், யதார்த்தத்தை அனைவரும் புரிந்துகொள்ளவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

ஜெனீவா பேச்சு ஆரம்பிப்பதற்கு முன்னதாக - நடந்த செய்தியாளர் மாநாட்டில் சொல்ஹெய்ம் உரையாற்றினார்.

பேச்சு ஆரம்பம்

ஜெனிவாவில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் ஸ்ரீலங்கா அரசுக்கும் இடையிலான பேச்சு சுவிஸ் நாட்டு நேரப்படி நேற்றுக் காலை 9 மணிக்குப் பின்னர் (இலங்கை நேரப்படி பிற்பகல் ஒரு மணி) தொடங்

(18ஆம் பக்கம் பார்க்க)

விட்டுக்கொடுக்கும் போக்குடன் சந்தர்ப்பத்தை அணுகுங்கள்!

அரசு, புலிகளுக்கு இணைத் தலைமை கோரிக்கை

கொழும்பு, பெப்.23

சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு கிடைத்துள்ள சந்தர்ப்பத்தை அரசு, புலிகள் இருதரப்பும் திறந்த மனதுடனும் விட்டுக் கொடுக்கும் போக்குடனும் அணுகவேண்டும் என்று சமாதான முயற்சிகளுக்கான இணைத்தலைமை நாடுகள் கேட்டுக்கொண்டுள்ளன.

ஜெனீவாவில் நேற்று ஆரம்பமான அரசு - புலிகள் இடையிலான பேச்சுகளை இணைத் தலைமைகள் வரவேற்றுள்ளன. அது குறித்து நேற்று அறிக்கை ஒன்றையும் விடுத்துள்ளன. ''இந்தச் சந்தர்ப்பம் போர்நிறுத்த விடயத்திலும் சமாதானத்துக்கான எதிர்காலத்தை முன்னெடுப்பதிலும் நம்பிக்கையைக் கட்டியெழுப்பும்'' - என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

ஜெனீவாப் பேச்சுகளுக்கு இரு

(18ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜெனீவாவில் நடந்த முதல்நாள் பேச்சுகளின்போது.....

பதுங்கித் தாக்குதலில் விடுதலைப் புலிகளின் துணைப்படை வீரர் பலி!

மட்டக்களப்பு மாவட்டம் கிரானில் ஸ்ரீலங்காப் படையினரும், ஒட்டுக்குழுவினரும் இணைந்து நடத்திய பதுங்கித் தாக்குதலில் விடுதலைப் புலிகளின் துணைப் படைவீரர் ஒருவர் வீரச்சாவடைந்துள்ளார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை 10.15 மணியளவில் கிரான் ஸ்ரீலங்காப் படை முகாமிலிருந்து வந்த ஸ்ரீலங்காப் படையினரும், ஒட்டுக்குழுவினருமே இத் தாக்குதலை நடத்தியுள்ளனர் என்று புலிகள் தரப்புச் செய்திகள் தெரிவித்தன. இத்தாக்குதலில் மட்டக்களப்பு, சந்திவெளி, திகிலிவெட்டையைச் சேந்த 28 வயதுடைய வரான நாராயணபிள்ளை சாந்தகுமார் என்ற துணைப்படை வீரரே வீரச்சாவடைந்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், அரச பிரதிநிதிகளுக்கும் இடையில் சுவிற்ஸர்லாந்தின் ஜெனீவாவில் போர் நிறுத்த உடன்பாட்டு அமுலாக்கம் பற்றிய பேச்சு ஆரம்பமாவதற்கு சுமார் 3 மணித்தியாலங்களுக்கு முன்னர் இத் தாக்குதல் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, மன்னார் மாவட்டம், பேசாலை யூட்ஸ் வீதி யில் உள்ள தமிழர் ஒருவரின் வீட்டின் மீது அடையாளம் தெரியாத நபர்களினால் நேற்று பகல் 12.45 மணியளவில் கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதனால் எவரும் பாதிப்படையாதபோதும், குறித்த வீட்டின் முன் பகுதி கடுமையாகச் சேதமடைந்துள்ளது.

தாக்குதல் நடந்தவேளை வீட்டின் உரிமையாளரான கிறிஸ்ரி குலாஸ் வீட்டோடு இணைந்திருக்கும் அவரது தொலைத்தொடர்பு நிலையத்திலும், அவரது மகள் வீட்டின் பின்புறத்திலும் இருந்ததனால் எதுவித பாதிப்புகளுமின்றித் தப்பித்துக் கொண்டனர் என்று பொலீஸார் கூறினர். (எ-க)

நெடுந்தீவில் மருத்துவமுகாம்

யாழ்ப்பாணம் லயன்ஸ் கழகம், சுண்டுக்குழி சென்.ஜோன்ஸ் பாடசாலை லியோக்கழகத்தினருடன் இணைந்து நடத்தும் இலவச மருத்துவமுகாம், எதிர்வரும் 25ஆம் திகதி சனிக்கிழமை நெடுந்தீவில் நடைபெறும். யாழ். போதனாவைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரி, வைத்திய கலாநிதி பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த மருத்துவமுகாமில் இலவச கண்ணாடி வழங்கலும் இலவச மருத்துவ பரிசோதனைகளும் மருத்துவ விழிப்புணர்வுக் கருத்தரங்களும் இடம்பெறும். அனைத்து நெடுந்தீவு மக்களையும் இதில் கலந்கொண்டு பயனடையுமாறு லயன்ஸ்கழகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.(த-15)

கற்றல் செயற்பாடுகளை மீள ஆரம்பிப்பது தொடர்பாக துணைவேந்தர், மாணவர் பிரதிநிதிகள் நேற்றுச் சந்திப்பு

யாழ்ப்பாணம்,பெப்.23

யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தருக்கும் பல்கலைக்கழக மாணவப் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்றுப் பிற்பகல் 3.30 மணியளவில் துணைவேந்தர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இச்சந்திப்பில் கடந்த 17ஆம் திகதி பல்கலைக்கழக உத்தியோகத்தர்களுக்கும் கல்வி அமைச்சருக்கும் இடையில் நடந்த சந்திப்புத் தொடர்பாக துணைவேந்தரால் மாணவர்களுக்கு எடுத்து விளக்கப்பட்டது.

தற்போது நடைபெற்றுவரும் சமாதானப் பேச்சுக்கள் வெற்றிபெறும் இடத்து எதிர்வரும் மார்ச் மாதம் 6ஆம் திகதி யாழ். பல்கலைக் கழகச் செயற்பாடுகள் மீண்டும் ஆரம்பிக்கப் படலாம் என்று இந்தக் கூட்டத்தில் துணை வேந்தர் தெரிவித்தார். அதற்காகத் தாம் பிரார்த்தனை செய்வதாகவும் துணைவேந்தர் குறிப்பிட்டார்.

அதற்குப் பதிலளித்த மாணவர் பிரதிநிதிகள், துணைவேந்தரின் பிரார்த்தனை நிறைவேறினால், தம்மீதான நெருக்கடிகள் குறைக்கப் படும் என நம்பிக்கை தெரிவித்தனர்.

இதேவேளை - அடுத்தமாதம் முதலாம் திகதி பிற்பகல் 3 மணிக்கு துணைவேந்தருக்கும் பல்கலைக்கழக மாணவர் பிரதிநிதிகளுக்கும் இடையில் முக்கிய சந்திப்பு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதில் முக்கிய முடிவுகள் வெளியிடப் படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.(எ-12)

கோரிக்கை நிறைவேறவில்லையேல் காலவரையறையற்ற பணிநிறுத்தம்

மின்சாரசபை ஊழியர்கள் எச்சரிக்கை

கொழும்பு, பெப்.23

சம்பள உயர்வு கோரி இலங்கை மின்சார சபை ஊழியர்கள் நேற்று சுகவீன விடுமுறைப் போராட்டத்தில் ஈடுபட்டனர். கொழும்பில் உள்ள இலங்கை மின்சாரசபையின் தலைமைக் காரியாலத்திற்கு முன்பாக நேற்று நண்பகலில் ஆர்ப்பாட்டம் ஒன்றிலும் அவர்கள் ஈடுபட்டனர். அரசின் சாதகமான பதில் கிடைக்காத பட்சத்தில் வெள்ளிக்கிழமை முதல் காலவரையறையற்ற வேலைநிறுத்தப் போராட்டம் தொடரும் எனவும் -

15ஆம் திகதி சம்பள உயர்வு வழங்கப்படும் என மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் ஜோன் செனிவிரட்ன தெரிவித்திருப்பது தமது போராட்டத்தை நிறுத்துவதற்கான தந்திரம் எனவும்- மின்சாரசபை ஊழியர்கள் தெரிவித்தனர். எழுத்துமூலம் மின்சாரசபையின் பொதுமுகாமையாளருக்கு அமைச்சர் அறிவித்தால் மட்டுமே போராட்டம் கைவிடப்படும் என வும் அவர்கள் தெரிவித்தனர். (எ-க)

ஐ. தே. கட்சி வேட்பு மனு நிராகரிப்பு: வாக்களிப்பு உரிமையை மீறும் செயல்

நீதிமன்றில் மற்றொரு மனுவும் தாக்கல்

கொழும்பு,பெப்.23

கொழும்பு மாநகர சபைக்கான ஐ.தே.க. தேர்தல் வேட்பு மனு நிராகரிக்கப்பட்டதை ஆட்சேபித்து நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மற்றுமொரு மனுவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஐ.தே.க. கட்சியின் பிரபல ஆதரவாளரான கொழும்பைச் சேர்ந்த திருமதி ரோஷி சேனாநாயக்க தாக்கல் செய்துள்ள இந்த மனுவில், தேர்தல்கள் ஆணையாளர் உட்பட இருபது பேர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

கட்சியின் தீவிர ஆதரவாளரான தாம் கடந்த காலங்களில் தொடர்ச்சியாக அக்கட்சிக்கு வாக்களித்து வந்துள்ளார் எனவும், ஐ.தே.க. கட்சியின் வேட்பு மனு ஏற்றுக் கொள்ளப்படாத காரணத்தினால் இம்முறை தமக்குள்ள வாக்களிக்கும் உரிமை மீறப்பட்டிருக்கிறது எனவும் திருமதி ரோஷி சேனாநாயக்க தமது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் ஐ.தே.கவின் கொழும்பு மாநகர சபைக்கான வேட்புமனுவை ஏற்றுக்கொள்ளுமாறு கொழும்பு மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரியினால் உத்தரவு பிறப்பிக்குமாறும், அது ஏற்றுக்கொள்ளப்படும்வரை தேர்தலை ஒத்திவைக்கும் உத்தரவைப் பிறப்பிக்குமாறும் திருமதி ரோஷி சேனாநாயக்க தமது மனுவில் மேலும் குறிப்பிட்டுள்ளார் எனவும் -

தனிமையில் இருந்தவர் மீது வெட்டுக்காயம் அணிந்திருந்த நகைகளும் அபகரிப்பு!

யாழ். கில்னர் ஒழுங்கையில் நேற்றுப் பட்டப்பகலில் சம்பவம்

யாழ்ப்பாணம்,பெப்.23

வீட்டில் தனிமையில் வசித்துவந்த பெண் ஒருவர் வெட்டுக்காயங்களுக்கு இலக்காகிய நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார். குறிப்பிட்ட பெண் வசித்த வீட்டினுள் புகுந்த மற்றொரு பெண்மணி இவரை கண்மூடித்தனமாகக் கூரிய ஆயுதம் ஒன்றினால் வெட்டிக்காயத்தை ஏற்படுத்திவிட்டு அவர் அணிந்திருந்த சங்கிலி,காப்பு போன்ற தங்க நகைகளை அபகரித்துச் சென்றுவிட்டார் எனக் கூறப்பட்டது.

இந்தச் சம்பவம் நேற்றுமுற்பகல் 11.30 மணியளவில் யாழ். கில்னர் ஒழுங்கைப் பகுதியில் உள்ள வீடொன்றில் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்தில் தில்லையம்பலம் தில்லைநாயகி (வயது-55) என்ற பெண்ணே படுகாயமடைந்தவர் ஆவார்.

சம்பவம்பற்றி மேலும் தெரியவருவதாவது:-

சம்பவத்தில் காயமடைந்த பெண், வீட்டில் சமையல் வேலையில் ஈடுபட்டுக்கொண்டிருந்தார் என்றும் -

அவ்வேளை அங்குவந்த பிரஸ்தாப பெண்மணி, கூரிய ஆயுதம் ஒன்றினால் கண்மூடித்

இதனால் தலை, கை போன்ற பகுதிகளில் அவர் பாரிய வெட்டுக்காயங்களுக்கு இலக்கானதாகவும் - தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, இரத்தம் தோய்ந்த ஆடையுடன் சம்பவம் நடைபெற்ற வீட்டில் இருந்து பெண் ஒருவர் ஓடியதை அவதானித்த அயலவர்கள் அவரைப் பின்தொடர்ந்தனர் என்றும்-

எனினும் அவர் ஓடி மறைந்துவிட்டார் என்றும் கூறப்பட்டது. சம்பவத்தில் படுகாயமடைந்த பெண் யாழ். போதனா வைத்திய சாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார். (எ-15-12)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்து தமிழ் துணைப் படை..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முழு அளவிலான யுத்தம் வெடிக்காமல் தவிர்க்கச்செய்து, யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கில் அமைதி நிலையையும் இயல்புச் சூழலையும் மேம்படுத்துவது குறித்து இரு தரப்புகளும் பேசக்கூடியதான தற்போதைய சூழ்நிலையை இந்த யுத்த நிறுத்த உடன்பாடே தந்துள்ளது என்பதை நான் கூறி யாக வேண்டும்.

சில விமர்சகர்கள் கூறுவது போல யுத்த நிறுத்த உடன்பாடு ஒரு தரப்புக்குச் சாதகமான தாக அவசர அவசரமாக உருவாக்கப்பட்ட தல்ல. மாறாக, நோர்வே அனுசரணையாளர் களின் நுட்பம் நிறைந்த உதவியுடன் - ஏற் பாடுகள், நிபந்தனைகள், கடப்பாடுகள் சம்பந் தமான - சகல அம்சங்கள் குறித்தும் இரு தரப்புகளினதும் கவனமான, நுணுக்கமான பரிசீலனையின் பின்னரே அது உருவகம் பெற்றது.

மோதல்களை முடிவுக்குக் கொண்டுவந்து, அர்த்தமுள்ள பேச்சுக்கு உகந்த சாதகமான சூழ்நிலையை உருவாக்கும் நோக்குடன் சமாதானத்துக்கான கருவியாக யுத்த நிறுத்த உடன்பாடு செம்மையாக வனையப்பெற்றது. ஆகவே, அமைதி முயற்சிகளை மேம்படுத் துவதற்கு உதவும் வலிமையான பொறிமுறை யாக யுத்த நிறுத்த உடன்பாடு நோக்கப்பட வேண்டும்.

யுத்த நிறுத்த உடன்பாட்டை அத்திபாரமா கக் கொண்டே அமைதி முயற்சிகள் கட்டி எழுப் பப்படவேண்டும் என நாம் கருதுகின்றோம்.

அண்மைக் காலத்தில் - குறிப்பாகக் கடந்த வருடத்தின் இறுதிக் காலத்திலும், இந்த வரு டத்தின் ஜனவரியிலும் - வடக்கு - கிழக்கில் துரிதமாக வெடித்த வன்முறைகள் நிழல்யுத்த மாகவும் மறைமுகப் போராகவும் குரூர வடி வெடுத்தபோது யுத்த நிறுத்த உடன்பாடு பெரி தும் பின்னடைவு கண்டது என்பது உண்மையே. வடக்குக் கிழக்கில் தமிழ்ப் பொதுமக்கள் கண்டபடி கொலை செய்யப்படுதல், கடத்தப் படுதல், காணாமற்போதல் போன்ற வடிவங் களை இந்த வன்முறைத் தோற்றப்பாடு வெளிப்படுத்தியது. ஆதாரபூர்வமான பதி வுகளின்படி, தமிழ்த் துணைப் படைகளின் உதவியுடன் இலங்கை ஆயுதப் படைகளினால் 100 தமிழ்ப் பொது மக்கள் இவ்வாறு கண் மூடித்தனமாகக் கொலை செய்யப்பட்டனர். இலங்கை இராணுவத்தினால் கைதுசெய்யப் பட்ட பின்னர் அல்லது கடத்தப்பட்ட பின்னர் 48 பொதுமக்கள் காணாமற்போயினர்.

தமிழ்ச் சமுதாயத்தைப் பயமுறுத்திப் பணிய வைக்கும் கபட எண்ணத்தோடு தமிழ் மக்க ளுக்கு எதிராக - குறிப்பாக யாழ்ப்பாணத்தில் - இந்தப் பயங்கர வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டன.

மறைமுக யுத்தத்தில் பல சிப்பாய்கள் கொல் லப்பட்டமைக்காகத் தமிழ்ச் சமூகத்தின் மீது கூட்டுப் பொறுப்புத் தண்டனையை விதிக்கும் விதத்தில் இத்தகைய பயங்கரம் கட்டவிழ்த்து விடப்பட்டது.

2005 நவம்பர் 19இல் புதிய அரசு பொறுப் பேற்றது முதல் தமிழ்ப் பொதுமக்களுக்கு எதிராக இலங்கைப் படைகள் புரிந்த வன் முறை நடவடிக்கைகள் பற்றிய விரிவான தக வல்கள் அடங்கிய விவரமான அறிக்கைகளை எமது தூதுக்குழு உங்களின் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கும். அத்தோடு கடந்த நான்கு வருட யுத்த நிறுத்த காலத்தில் இலங்கை ஆயுதப் படைகளினாலும், தமிழ்த் துணைப் படை களினாலும் கொலை செய்யப்பட்ட மற்றும் காயப்படுத்தப்பட்ட பொது மக்கள் பற்றிய விவரமான அறிக்கையையும் நாங்கள் சமர்ப் பிப்போம்.

அதேபோன்று, விடுதலைப் புலிகளால் இழைக்கப்பட்டவை எனக் கூறப்படும் யுத்த நிறுத்த மீறல்கள் பற்றிய விவரமான அறிக்கை களை உங்கள் அரசும் சமர்ப்பிக்கக்கூடும். உங்கள் அரசு ஏற்கனவே, கடந்த நான்கு வருட காலத்தில் விடுதலைப் புலிகள் அமைப்பு 5,464 யுத்த நிறுத்த மீறல்களில் ஈடுபட்ட தாகக் குற்றம் சுமத்தும் புள்ளிவிவரங்களை வெளியிட்டிருக்கின்றது. அந்தப் புள்ளி விவ ரங்களில் மிக அதிக எண்ணிக்கையானவை ஆட்திரட்டலுடன் தொடர்புபடுத்தப்பட்டுள் ளன. இவை, வயது குறைந்த இளவட்டங் கள் விடுதலைப் புலிகளுடன் இணைந்தன எனக் கூறப்படுவதுடன் சம்பந்தப்பட்டவை யாகும்.

வடக்கு - கிழக்கில் சிறுவர் உரிமைகள் தொடர்பாக உள்ள சிக்கலான விடயங்களை யும், யுத்தத்தால் பாதிக்கப்பட்ட சிறுவர்களை யும், யுத்தத்தால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக் காக யுனிசெவ்வுடன் சேர்ந்து முன்னெடுக்கப் படும் செயற்றிட்டத்தின் கீழ் விடுதலைப் புலி கள் அமைப்பால் விடுவிக்கப்பட்ட சிறுவர்க ளின் எண்ணிக்கையையும் கவனத்தில் கொள் ளாது உங்கள் அரசும், இலங்கை யுத்த நிறுத் தக் கண்காணிப்புக் குழுவும் வயது குறைந் தோரை ஆள்திரட்டுவதாகப் புலிகள் மீது குற்றம் சுமத்துகின்றன. வடக்குக் கிழக்கில் சிறுவர் உரிமை நிலைவரம் தொடர்பாகத் திரு.தமிழ்ச்செல்வன் பின்னர் உங்களுக்கு விளக்குவார்.

இந்தப் பின்னணியில் -

பொதுமக்களைக் கண்மூடித்தனமாகக் கொல்லுதல், அரசியல் படுகொலைகள், கடத் தல், தொல்லைப்படுத்துதல், அச்சுறுத்தி அப கரித்தல், மிரட்டிப் பணியவைத்தல், தாக்கு தல்கள், சித்திரவதை, சிறுவர்களைப் பலவந்த மாக ஆள்சேர்த்தல் என்ற வடிவங்களில் தமிழ்த் துணைப் படைகளினால் புரியப்பட்ட - பெரிய எண்ணிக்கையிலான - யுத்த நிறுத்த மீறல் களை அரசும், யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரும் தமக்கு வசதியான வகையில் உதாசீனம் செய்துவிட்டனர் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். துணைப் படைகளால் புரியப்பட்ட பெரும்பாலான இக் குற்றங்களுக்கான பழி விடுதலைப்புலிகள் மீது சுமத்தப்பட்டுள்ளது.

தமிழ்த் துணைப் படைகளினால் புரியப் படும் வன்முறைகளின் பாதகமான விளைவு களை கண்காணிப்புக் குழு மிக அண்மை யில்தான் புரிந்துகொண்டு, அத்தகைய 'ஆயு தம் தாங்கிய சக்திகளினால்' அமைதிக்கு மோசமான ஆபத்து உள்ளதாக ஆழ்ந்த சிரத்தை வெளியிடப்பட்டிருப்பதை வருத்தத்துடன் சுட்டிக்காட்டுகிறேன்.

யுத்த நிறுத்த உடன்பாட்டை அமுல்படுத் தும் நடைமுறையில் தமிழ்த் துணைப்படை களின் கிரிமினல் வன்முறைகள் மோசமான பாதிப்பை ஏற்படுத்தியிருப்பதால், அமைதி நிலையை ஸ்திரப்படுத்துவதற்காக அத்தகைய படைகளைக் கட்டுப்படுத்துவது குறித்து அரசு ஆழமான கரிசனையைக் கொள்ளவேண்டி யிருப்பது அவசியமாகியுள்ளது.

இந்தப் பேச்சுமேசையில் கலந்துரையாட லுக்கான பிரதான விடயப் பொருளாக இருப் பது யுத்த நிறுத்த உடன்பாடாகும்.

பிணக்கில் தரப்புகளாக இருந்து இந்த சமாதான உடன்பாட்டில் சேர்ந்திருக்கும் நாங் கள், அர்த்தமுள்ளதாகவும், பயனுள்ளதாகவும், ஆக்கபூர்வமானதாகவும் அமையத்தக்க விதத் தில் இந்த யுத்தநிறுத்த உடன்பாடு நடைமுறைச் சாத்தியமான வழிகளில் வலுவாகச் செயற் படுத்தப்படுவதற்கான மார்க்கங்களை நாடு வதற்கு அதிகப் பிரயத்தனம் காட்டவேண்டும்.

ஒரு முழு அளவிலான போரின் விளிம்புக்கு இரு தரப்பையும் இட்டுச் சென்ற அண்மைக் கால வன்முறைகளின் வெடிப்புக்கு, இந்த உடன்பாட்டின் கடப்பாடுகள் நடைமுறைப் படுத்தப்படாமையே அடிப்படைக் காரணம் என நாம் கருதுகின்றோம்.

நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் நட வடிக்கைகள் என யுத்த நிறுத்த உடன்பாட்டி னால் சுட்டிக்காட்டப்பட்ட அம்சங்கள் நடை முறைப்படுத்தப்படுவது மோதல் நிலையைத் தணித்து இயல்பு நிலையை ஏற்படுத்தும் செயன்முறைப் போக்கில் மிகவும் முக்கிய மான அம்சமாகும்.

வடக்கு - கிழக்கில் இயல்பு நிலையைத் தோற்றுவிப்பதில் முக்கியமானவை என்ற ரீதியில் யுத்த நிறுத்த உடன்பாட்டில் குறிப் பிடப்பட்டுள்ள நம்பிக்கையைக் கட்டியெழுப் புவது தொடர்பான அடிப்படை அம்சங்கள் பின்வருமாறு:-

- பிரிவு 1.2 - எந்தத் தரப்பும் இராணுவத் தாக்குதல் நடவடிக்கையில் ஈடுபடக்கூடாது.
- பிரிவு 1.8 - ஒப்பந்த நாளிலிருந்து முப் பது நாள்களுக்குள் தமிழ்த் துணைப்படைகள் அரசினால் நிராயுதபாணிகளாக்கப்பட வேண் டும். இந்தப் பிரிவிலிருந்து இலங்கை அரசுப் படைகளின் கட்டளைக்கும் ஒழுங்குக் கட் டமைப்பிற்குள்ளும் இணைய விரும்பும் தனி ஆள்களை வடக்கு - கிழக்கு மாகாணத்திற்கு வெளியே சேவையில் அரசு இணைத்துக்கொள் ளலாம்.
- பிரிவு 1.13 - ஒப்பந்த நாளிலிருந்து 90 நாள்களின் பின்னர் ஆயுதம் தாங்காத எல் லாப் புலி உறுப்பினர்களும் வடக்கு - கிழக் கில் சுதந்திரமாக நடமாட அனுமதிக்கப்படுவர்.
- பிரிவு 2.1 - தரப்புகள் சர்வதேச சட் டங்களுக்கு அமைவாக, மக்கள் கூட்டத்துக்கு எதிரான மோதல்களைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.
- பிரிவு 2.2, 2.3, 2.4 - இரு தரப்பினரா லும் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள வழிபாட்டிடங் கள், பாடசாலைப் பகுதிகள், பொதுக்கட்ட டங்கள் ஆகியவற்றை விட்டுத் தரப்புகள் வெளியேறி அவற்றின் பாவனைக்கு அவற்றை ஒப்படைக்கவேண்டும்.
- பிரிவு 2.5 - மக்கள் செறிந்து வாழும் நகரங்கள் மற்றும் ஊர்களில் மக்களுக்குத் தொந்தரவாக அமையும் பாதுகாப்பு ஏற்பாடு கள், சோதனைச் சாவடிகள் போன்றவற்றை அகற்றுவது குறித்து இரு தரப்பினரும் மீள் பரிசீலனை செய்யவேண்டும்.
- பிரிவு 2.11 - ஒப்பந்த நாள் முதல் மீன்பிடிக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்படவேண் டும். ஒப்பந்தம் செய்யப்பட்டு 90 நாள்களுக் குள் இரவு, பகல் மீன்பிடித் தொழிலுக்கான சகல கடப்பாடுகளும் நீக்கப்படவேண்டும். - ஒரு சில மட்டுப்படுத்தல்களைத் தவிர.
- பிரிவு 2.12 - தேடுதல் மற்றும் பயங் கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழான கைதுகள் இடம்பெறாது எனத் தரப்புகள் இணங்குகின் றன.

யுத்த நிறுத்த உடன்பாடு கைச்சாத்தானது முதல் இந்த [illegible] நடைமுறைப்படுத்துவதில் இலங்கை அரசு தவறிவந்துள்ளது. சமாதான ஒப்பந்தத்தின் கீழான தனது இந்தக் கடப்பாடுகளை நிறைவு செய்யும்படி இலங்கை அரசைப் புலிகள் அமைப்பு மீண்டும் மீண்டும் கோரி வந்துள் ளது. ரணில் விக்கிரமசிங்க அரசுடன் இடம் பெற்ற சமாதானப் பேச்சுகளின் போதும்கூட, யுத்த நிறுத்த உடன்பாட்டு விதிகளின் ஏற் பாடுகளும் நிபந்தனைகளும் நடைமுறைப் படுத்தப்படாமல் இருக்கும் விடயத்தை எழுப்பி வந்துள்ளோம். உடன்பாட்டின் மூல அம்சங்களை முழு அளவில் நடைமுறைப் படுத்திச் செய்வதற்கு நேர்மையான முறை யில் நாம் எடுத்த அனைத்து முயற்சிகளும் பயனற்றுப் போயின. ரணில் விக்கிரமசிங்க அரசுக்கும் ஜனாதிபதி குமாரதுங்கவுக்கும் இடையில் நிலவி வந்த - இணைந்து செயற் படுவதிலான பிணக்கு அல்லது அதிகாரப் போட்டி - அமைதி நடவடிக்கைகளை முன் னெடுப்பதிலும், யுத்தநிறுத்தத்தை செம்மை யாக நடைமுறைப்படுத்துவதிலும் பெரும் தடையாக அமைந்தது. அமைதிப் பேச்சு களின் நிறுத்தத்தோடு வடக்கு - கிழக்கின் பாது காப்பு நிலைமை மோசமடையத் தொடங் கியது. தமிழ்த் துணைப்படைகளின் வன் முறைகள், எங்கள் உறுப்பினர்களுக்கும், ஆதரவாளர்களுக்கும் எதிரான அசிங்கமான மறைமுக யுத்தத்தின் வடிவத்தில் தீவிரப்படுத் தப்பட்டது. இந்த நிழல் யுத்தத்தில் இலங்கை ஆயுதப்படைகள் தமிழ் ஆயுதக் குழுக்களு டன் இணைந்து மறைமுகமாக மும்முரமாகச் செயற்பட்டன.

வடக்கு - கிழக்கிலும் கொழும்பிலும் செயற்படும் தமிழ்த் துணைப் படைகள் பற் றிய விரிவான அறிக்கையை உங்களின் ஆராய்வுக்கு நாங்கள் சமர்ப்பிப்போம். அந்த அறிக்கை, பிரதான துணைப்படைக் குழுக் களின் பிரசன்னம், அவற்றின் தலைமைத்து வம், கட்டளைக் கட்டமைப்பு, அவற்றின் முகாம்கள் அமைந்துள்ள இடங்கள், அவற் றுக்கும் இலங்கைப் படைகளுக்கும் - குறிப் பாக இலங்கை இராணுவப் புலனாய்வுப் பிரிவுக்கும் - இடையிலான நெருங்கிய உற வுகள் போன்றவற்றுக்கு மிக முக்கிய சாட்சி யங்களைத் தரும்.

தமிழ்த் துணைப்படைக் குழுக்கள் இருக் கின்றன என்பது சர்ச்சைக்கு அப்பாற்பட்ட உண்மை. இந்தத் தமிழ் ஆயுதக் குழுக்களை நிலைநிறுத்தி, உதவியளித்து, வழிநடத்து வது இலங்கை இராணுவம் என்பதால் அவற்றை நாம் துணை இராணுவப் படைகள் என வகைப்படுத்துகின்றோம். சிலர் கருதுவது போல, இவர்கள் ஏதோ ஓர் அரசியல் வெற் றிடத்தில் சுயாதீனமாகச் செயற்படும் வெறும் 'ஆயுத மூலங்கள்' அல்ல. அவர்கள் நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட சண்டையிடும் படை கள், மறைமுக யுத்தத்தில் சீராகப் பயிற்சியளிக் கப்பட்டு ஆயுதபாணிகளாக்கப்பட்டவர்கள். இலங்கை ஆயுதப் படைகளின் ஒத்தாசையு டன் மறைமுகமாக இயக்கப்படுகின்றவர்கள். சில ஆயுத அமைப்புகள் இரண்டு தசாப்த காலத்துக்கும் மேற்பட்ட நீண்ட சரித்திரம் கொண்டவை. முதலில் ஓர் அரசியல் இலட்சி யத்துக்காக அவர்கள் ஆயுதம் தூக்கினார்கள். ஆனால், பின்னர் இலங்கையில் இந்தியா வின் தலையீட்டுடன் அவர்கள் தங்களின் அரசியல் சித்தாந்தங்களைக் கைவிட்டு, புலி களுக்கு எதிராகப் போராட இந்திய அமைதிப் படையின் கீழ் ஆயுதம் தாங்கிய கூலிப்படைக் குழுக்களாகினர். இந்திய அமைதிப்படையின் வாபஸோடு, இந்த ஆயுதக் குழுக்கள் பின்னர் இலங்கை அரசு மற்றும் அதன் இராணுவம், புலனாய்வுப் பிரிவுகள் போன்ற தமது புதிய எஜமானர்களுக்குத் தங்களின் விசுவாசத்தை யும் பணிவையும் மாற்றிக் கொண்டு, அந்த எஜமானர்களுக்காகப் புலிகளுக்கு எதிரான போரில் ஈடுபட்டன.

இந்த ஆயுதக் குழுக்கள், தங்களை அர சியல் கட்சிகளாகப் பதிவுசெய்து, தாங்கள் ஜனநாயக அரசியல் நீரோட்டத்துக்குள் பிர வேசித்துவிட்டதாகக் கூறிவந்தாலும் அவை தமது இராணுவப் பிரிவுகளைக் கலைக்கவோ அல்லது ஆயுத வன்முறைகளைக் கைவிடவோ இல்லை.

நாங்கள் எமது அறிக்கையில் இந்த இரா ணுவத் துணைப்படைக் குழுக்களால் எமது பல தலைவர்கள், எமது இயக்க உறுப்பினர்கள் மற்றும் முக்கியமான நாடாளுமன்ற உறுப்பி னர்கள், ஊடகவியலாளர்கள், கல்விமான் கள், மக்கள் ஆதரவாளர்கள் போன்றோர் படு கொலை செய்யப்பட்டமை தொடர்பாகப் பட்டியலிட்டிருக்கின்றோம். இலங்கை இராணு வத்தின் முகாம்கள் மற்றும் பொலீஸ் நிலை யங்களுக்கு மிக அருகில் ஈ.பி.டி.பி. மற்றும் ஏனைய குழுக்கள் அடங்கிய துணை இராணு வப் படைகளின் முகாம்கள் இருப்பதைச் சுட் டிக்காட்டும் வரைபடங்களை எமது அறிக்கை யில் சேர்த்து வழங்குகின்றோம்.

யுத்த நிறுத்த உடன்பாட்டின் 1.8ஆம் பிரிவு, தமிழ்த் துணை இராணுவப் படைகள் இலங்கை அரசினால் நிராயுதபாணிகளாக்கப்பட வேண் டும் என்று தெளிவாக எடுத்தியம்புவது உங் களுக்கு நன்கு தெரியும்.

[illegible] மற்றும் இயல்பு நிலையை ஸ்தி ரப்படுத்துவதற்கு மிக அவசியமான இந்த விடயத்தில் தனது முக்கியமான கடப்பாட்டை நிறைவுசெய்வதில் இலங்கை அரசு இன்று வரை தவறியிருக்கின்றது.

யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுவும் இந்தத் தமிழ் ஆயுதக் குழுக்களின் வன்முறை களினால் அமைதிச் சூழல் பெரும் ஆபத்துக் குள்ளாகியிருப்பதாக எச்சரித்திருக்கின்றது.

இணைத் தலைமைகள் மூலம் பிரதிநிதித் துவப்படுத்தப்படும் சர்வதேச சமூகமும்கூட, துணை இராணுவப் படைகளை நிராயுதபாணி களாக்கி வன்முறை நடவடிக்கைகளை முடி வுக்குக் கொண்டுவரும்படி உங்கள் அரசைக் கோரும் அறிக்கைகளை வெளியிட்டிருக் கின்றது.

அண்மையில் தாம் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, தாம் தமிழ் ஆயுதக் குழுக்களை அடக்குவதோடு, அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் அவை செயற் பட அனுமதிக்கப்போவதில்லை என்றும் தெரிவித்திருந்தார்.

வடக்கு - கிழக்கிலும், கொழும்பிலும் ஐந்து பிரதான இராணுவத் துணைப்படை கள் செயற்படுகின்றன. அவை:- கருணா குழு, ஈ.பி.டி.பி. குழு, புளொட் குழு, ஈ.பி.ஆர். எல்.எவ் (வரதர்) குழு, ஜிகாத் குழு என அழைக் கப்படும் முஸ்லிம் துணை இராணுவக் குழு. எங்கள் அறிக்கையில் நாம் ஒவ்வொரு குழு பற்றியும் விரிவான தகவல்கள், தலைவர் களின் பெயர்கள், கொழும்பிலு[illegible] மாவட்டங்களிலும் செயற்படும் பிரதேசத தளபதிகளின் பெயர்கள் போன்றவற்றைத் தந்துள்ளோம்.

இலங்கை இராணுவத் தலைமை - குறிப் பாக இலங்கை இராணுவப் புலனாய்வுப் பிரிவு - தமிழ் ஆயுதக் குழுக்கள் இருப்பது பற்றியும் அவற்றின் செயற்பாடு பற்றியும் நிச்சயம் அறிந்து வைத்துள்ளது என்பது எமக் குத் தெரியும். என்றாலும், எமது வாதத்தின் வலிமையை மேலும் ஸ்திரப்படுத்துவதற்காக அவை பற்றிய மேலும் பல உண்மைத் தகவல் களை நாங்கள் உங்களுக்குத் தருகின்றோம்.

தமிழ்த் துணை இராணுவப் படைகளின் ஆயுத வன்முறை தமிழ்ப் பிரதேசங்களின் அமைதிக்கும், ஸ்திரத்தன்மைக்கும் பெரும் அச்சுறுத்தல் என்றும், யுத்த நிறுத்த உடன்பாட் டுக்குப் பெரும் ஆபத்து என்றும் எமது விடு தலை இயக்கம் கருதுகின்றது. தமிழ் மக்களின் பொதுவான கருத்தும் அதுவே. எனவே, இந் தத் தமிழ்த் துணைப் படைகளின் ஆயுதங்க ளைக் களைந்து, யுத்த நிறுத்த உடன்பாட்டின் கீழான தனது முக்கிய கடப்பாட்டை நிறைவு செய்யும்படி இலங்கை அரசை நாம் கோருகின் றோம்.

சர்வதேசச் சட்டங்களின் பிரகாரம், குடி மக்களுக்கு எதிரான மோதல் நடவடிக்கை களை தரப்புக்கள் தவிர்த்துக் கொள்ளவேண் டும் என்பது யுத்த நிறுத்த உடன்படிக்கையி னால் வலியுறுத்தப்பட்டுள்ள - மிக முக்கிய மான - நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் நடவடிக்கையாகும்.

பிரிவு 2.2, 2.3 மற்றும் 2.4 ஆகியன இலங்கை ஆயுதப் படைகள் ஒரு குறிப்பிட்ட கால வரையறைக்குள் வழிபாட்டிடங்கள், பாட சாலைகள், பொதுக் கட்டடங்களிலிருந்து வெளியேறவேண்டுமென வலியுறுத்துகின்றது.

யுத்த நிறுத்த உடன்பாட்டின் கீழான இந்தக் கடப்பாட்டையும், சர்வதேச மனிதாபிமானச் சட்டங்களையும் மீறி அரச பாதுகாப்புப் படை கள் கடந்த ஒரு தசாப்த காலத்துக்கும் மேலா கத் தமிழ் குடிமக்கள் செல்ல முடியாதவாறு அவர்களின் பாடசாலைகள், பொதுக் கட்ட டங்கள், வழிபாட்டிடங்கள் போன்றவற்றை ஆக்கிரமித்து நிற்கின்றன. செல்ல முடியா மல் மறிக்கப்பட்டுள்ள வழிபாட்டு இடங்க ளில் இந்து மக்களின் அதிக ஈடுபாட்டுக் குரிய சரித்திர, கலாசார முக்கியத்துவமு டைய புனித ஸ்தலங்கள் பல அடங்குகின் றன. யாழ்ப்பாணத்தில் மட்டும் 35 பிரபல பாடசாலைகள் இவ்வாறு பலவந்தமாக மூடப் பட்டுள்ளன. இந்துக்களினதும், கிறிஸ்தவர் களினதும் 201 வழிபாட்டிடங்களுக்கு மக் கள் செல்ல முடியாதுள்ளனர். இத்தகைய விஷமத்தனப் போக்குடைய இராணுவ ஆக்கிரமிப் பானது தமிழ் மக்களின் கலாசார, மத உணர் வுகளை மிக மோசமாகப் பாதித்துள்ளது. யுத்த நிறுத்த உடன்பாட்டினால் விசேடமாக விளக் கப்பட்டுள்ள ஒரு செயற்பாடு இதுவாகும்.

இராணுவ ஆக்கிரமிப்புக்கு உள்ளாகி யுள்ள வடக்கு - கிழக்கில் - குறிப்பாக மக்கள் செறிந்து வாழும் யாழ். குடாநாட்டில் - இலங்கை ஆயுதப் படைகளினால் உருவாக் கப்பட்டுள்ள உயர் பாதுகாப்பு வலயம் தமிழ் குடிமக்களுக்குச் சொல்லொணாக் கஷ்டங் களை ஏற்படுத்தியுள்ளது.

சுமார் ஐம்பதாயிரம் எண்ணிக்கையுடைய மிகப் பெரிய அளவு துருப்புக்களின் ஆக்கிர மிப்புக்கு இடமளிப்பதற்காகப் பல்லாயிரக் கணக்கான தமிழ்க் குடும்பங்கள் அவர்களது வீடுகளிலிருந்து பலவந்தமாக வெளியேற்றப் பட்டு மேற்படி உயர் பாதுகாப்பு வலயம் என்று கூறப்படும் ஆக்கிரமிப்பு வலயம் உரு வாக்கப்பட்டது. இதனால் அதிகம் பாதிக்

(17ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

J/SKANDAVARODAYA COLLEGE
CHUNNAKAM

நினைவுப்பேருரை அழைப்பு

ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் முன்னாள் அதிபர் அறிஞர்
அமரர் வி.சிவசுப்பிரமணியம் (வைசர்) J.P., B.A.,B.sc. PGT, FRGS
அவர்களின் 10 ஆவது

ஞாபகார்த்த நினைவுப்பேருரை

காலம்: நாளை (24.02.2006) வெள்ளிக்கிழமை பி.ப. 2 மணி.
இடம்: வித்துவான் மண்டபம்
தலைவர்: திரு. க. சிவாஜி அவர்கள் (முதல்வர், ஸ்கந்தவரோதயக் கல்லூரி)

நிகழ்ச்சி நிரல்

மங்கள விளக்கேற்றல்: அமரரின் மைந்தன்
Dr. சி. சிவானந்தராஜா அவர்கள்
(பேரவை உறுப்பினர், யாழ். பல்கலைக்கழகம்)
நினைவுப் பாமாலை: திரு.சி.சிவஞானராஜா (இசை ஆசிரியர்)
கௌரவ விருந்தினர் உரை: ஸ்கந்தாவின் மைந்தன், திரு.இரா.சுந்தரலிங்கம் அவர்கள்
(B.A.Bsc, Dip., in Ed., S.L.E.S-1, இளைப்பாறிய வடமாநில கல்விப் பணிப்பாளர்)
நினைவுப் பேருரை: ஸ்கந்தாவின் மைந்தன் பேராசிரியர் K.கந்தசாமி
B.sc. (Hons), Ph D (University of Keels - England)
(ரிடாதிபதி, பட்டப்பின் படிப்புத்துறை, யாழ். பல்கலைக்கழகம்)
விடயம்: 'கல்வியும் எமது தேவையும்'
நிறைவுரை: திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரம் (முதல்வர், இராமநாதன் கல்லூரி)

தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

கந்தரோடை, சுன்னாகம். (தி-48026) (54-30-16-49)
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

ஓராண்டு நினைவஞ்சலி

மண்ணில் 13 ★ 03 ★ 1963
விண்ணில் 05 ★ 03 ★ 2005

அமரர்
கார்த்திகேசு சிவபாதம்
(அப்பன்)

அன்பாலே அரவணைத்து அறிவாலே வழிகாட்டி
எமை ஆளாக்கி வாழ வைத்த அன்புத் தெய்வமே!
ஆண்டொன்று ஆனாலும் ஆறவில்லை எம்துயரம்
உமது ஆத்ம சாந்திக்காய் என்றும் பிரார்த்திப்போம்

தகவல்:
ஆனந்தகுமாரி (மனைவி),
விட்சாரன் (மகன்)

சரவணை வடக்கு, வேலணை. (47144) (54-30-16-49)

யாழ்.ஆஸ்பத்திரியில் எயிட்ஸ் நோயாளி

எச்.ஐ.வி. தொற்றுக்கு உள்ளானவர் எனச் சந்தேகிக்கப்படும் நோயாளி ஒருவர் யாழ். போதனா மருத்துவமனையில் அடையாளம் காணப்பட்டிருக்கிறார். சுகயீனம் காரணமாக ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காகப் சேர்க்கப் பட்ட 46 வயதான இந்நபர் எச்.ஐ.வி. தொற்றுக்கு உள்ளாகி இருப்பது ஆரம்ப பரிசோதனை மூலம் கண்டறியப்பட்டிருப்பதாக யாழ். ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன. மத்திய கிழக்கு நாடு ஒன்றில் தொழில் புரிந்துவந்த இவர் கடந்த ஐந்து வருடங்களாக யாழ்ப்பாணத்தில் வசித்து வருகிறார் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-149)

மெய்வன்மைப்போட்டி

யாழ். மத்தியகல்லூரி ஆரம்பப்பிரிவின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் ஆரம்பப் பிரிவு பகுதித்தலைவர் செல்வி த.இராமலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக யா/ஆனைப்பந்தி மெ.மி.மகாவித்தியாலய அதிபர் சி. சோமேஸ் வரபிள்ளை கலந்துகொள்வார். (த-13)

நாதன்ஸ் சினிமா யாழ்ப்பாணம்
அக்ஷன் கிங் அர்ஜூன், கஜாலா, விவேக் நடித்த
மதராஸி
புதியநேரம்: 10.00, 1.00, 4.00

நாகம்ஸ் சுன்னாகம்
விஜய், திரிஷா நடித்த
ஆதி
காட்சிநேரம்: பு.நே. 11.00, 3.00.7.00

ராஜா யாழ்ப்பாணம்
சிம்பு, ஜோதிகா, பிரகாஷ்ராஜ் நடித்த
சரவணா

நேரம்: பு.நே. 10.30, 2.15,மட்டும்
24 முதல் சத்தியராஜ், சிபிராஜ், நமீதா.
கோவை பீரதர்ஸ்
பு.நே. 10.30, 1.30,4.30

45ஆம் நாள் நினைவஞ்சலியும்
வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 09 ★ 10 ★ 1976
மறைவு 10 ★ 01 ★ 2006

இராமலிங்கம் உமாசங்கர்
(சங்கர்)

கடந்த 10.01.2006 அன்று இறைபதம் எய்திய எங்கள் அன்புத் தெய்வத்தின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும் தொலைபேசி, தந்தி மூலம் மற்றும் நேரில்வந்து அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதுடன், அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (23.02.2006) வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெறும்.

அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

(47153) (54-30-16-49)
கட்டுவன் மேற்கு, தெல்லிப்பழை. அம்மா, அப்பா, தம்பி.

31ஆம் நாள் நினைவஞ்சலியும்
வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 17 ★ 04 ★ 1934
மறைவு 22 ★ 01 ★ 2006

அமரர்
கதிரவேலு அருளம்பலம்

இன்று (23.02.2006) வியாழக்கிழமை காலை 9 மணிமுதல் அவரின் இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டி, வீட்டுக்கிருத்தியக் கிரியைகளிலும், ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(47138) (54-30-16-49)
துணவி, வட்டுக்கோட்டை. மனைவி, மக்கள், குடும்பத்தினர்.

அறிவித்தல்

2005 சனாதிபதித் தேர்தலின் பின்பு யாழ். தீபகற்பத்தில் நடைபெற்ற சம்பவங்கள் தொடர்பாக விசாரணை செய்வதற்கான சனாதிபதி ஆணைக்குழு

ஸ்ரீலங்கா சனநாயக சோஷலிசக் குடியரசின் அதியுத்தம சனாதிபதி திரு. மஹிந்த ராஜபக்ஷ அவர்களினால், ஓய்வு பெற்ற மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி திரு. தர்மசிறி ஜயவிக்கிரம அவர்களை மேற்குறித்த ஆணைக்குழுவின் உறுப்பினராகவும், தலைவராகவும், சட்டத்தரணி ஜனாப் ஏ.ஜே.யூசுப் அவர்களை ஏனைய உறுப்பினராகவும் கொண்ட ஒரு குழுவை பின்வரும் விடயங்கள் தொடர்பாக விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக நியமிக்கப்பட்டுள்ளபடியால் அக்குழு, பொதுமக்களிடமிருந்து தகவல்களைப் பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கின்றது.

(அ) 2005 நவம்பர் 17 ஆம் திகதி நடைபெற்ற சனாதிபதித் தேர்தலின் பின்னர் அதாவது 2005 நவம்பர் 18 ஆம் திகதிக்கும் 2006 சனவரி 31 ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலத்துக்குள், யாழ். தீபகற்பத்தில் சட்டத்தையும், ஒழுங்கையும், சமாதானத்தையும் நிலைநாட்டிச் செல்வதில் அனர்த்தத்தை ஏற்படுத்திய நிகழ்வுகள் எவை என்றும்,
(ஆ) அந்த நிகழ்வுகளுக்குப் பொறுப்பாளிகள் யார் என்றும்,
(இ) அத்தகைய நிகழ்வுகளைத் தவிர்த்துக்கொள்வதற்கு எத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும்

இவை தொடர்பான தகவல்களை வழங்குவதற்கு விருப்பங்கொண்ட நபர்கள் அல்லது அமைப்புக்கள் அத்தகவல்களை எழுத்துருவில், குழுவுக்கு 2006.03.16 ஆம் திகதிக்கு முன்னர், பின்வரும் முகவரிக்குப் பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்து ஒத்துழைப்பு வழங்கலாம்.

மேற்படி விடயங்கள் தொடர்பான தகவல்களை இரகசியமாக வழங்கவேண்டும் என்று எவரேனும் எதிர்பார்ப்பதாயின் அதைப்பற்றி குழுவின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். இக்குழுவிற்கு அனுப்பும் சகல கடிதங்களும் ஆவணங்களும் கீழே கையொப்பம் இடுகின்ற உத்தியோகத்தருக்கு அனுப்ப வேண்டும் என்பதைக் கவனத்திற்கொள்ளுதல் வேண்டும்.

குழுவின் ஆணைப்படி,

ஆர்.எம்.ஏ.பி.ரத்நாயக்க
குழுவின் செயலாளர்
அரச எழுதுநர் சேவைச் சங்கக் கட்டிடம் (03 ஆம் மாடி)
இல. 90, சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை
கொழும்பு - 02.

2006 பெப்ரவரி 22 ஆம் திகதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெடுந்தீவுக் கோட்டத்துக்கு வாகனம் தரக் கோரிக்கை

நெடுந்தீவு கல்விக் கோட்டத்திற்கென வாகனம் ஒன்று வழங்கப்படவேண்டும். என நெடுந்தீவு கோட்டக்கல்வி அதிகாரி க. அரசரத்தினம் வேலணை கல்விவலயப் பணிப்பாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

34 சதுரமைல் சுற்றுவட்டத்தில் உள்ள நெடுந்தீவு பாடசாலைகளைப் பார்வையிட வருகை தந்த கல்விப்பணிப்பாளர் எஸ். இராசேந்திரம், பிரிவுக் கல்விப் பணிப்பாளர் எஸ். இராதாகிருஷ்ணன், அனைத்துப் பாடங்களுக்குமான உதவிக்கல்விப் பணிப்பாளர்கள், திட்டமிடல் கல்வி விருத்திசார் பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள் கொண்ட குழு நெடுந்தீவில் மூன்று தினங்கள் தங்கி அங்குள்ள பாடசாலைகளின் நிலைமைகளை நேரில் அவதானித்தது.

பாடசாலை அதிபர்கள் ஆசிரியர்களைச் சந்தித்து கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் தொடர்பான கலந்துரையாடல்களையும் நடத்தியதுடன் பாடசாலை மட்டக் கணிப்பீடு, தர உள்ளீடு, உணவு வழங்கல் போன்ற விடயங்களில் பாடசாலை சமூகத்திற்கு வேண்டிய வழிகாட்டல் செயற்பாடுகளையும் மேற்கொண்டனர்.

பாடசாலைகளுக்கு நடந்தும் இரவல் பெறப்பட்ட துவிச்சக்கர வண்டிகளிலுமே குழுவினர் செல்ல வேண்டியிருந்தது.

இதனையடுத்தே கோட்டக்கல்வி அதிகாரி தமது கோட்டத்துக்கு வாகனம் ஒன்றை வழங்குமாறு கேட்டுக்கொண்டார். (த-111)

வடக்கிலிருந்து தென்னிலங்கைக்கு வெங்காயப் பூ

யாழ்.குடாநாட்டில் தற்போது அறுவடை செய்யப்பட்டு வரும் வெங்காயப்பூ கொழும்பு உட்பட தென்பகுதிச் சந்தைகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டு சந்தைப்படுத்தப்பட்டு வருகின்றது.

ஒரு கிலோ 20 ரூபாவாக குடாநாட்டுச் சந்தைகளில் விற்பனை செய்யப்படும் வெங்காயப் பூவை வெளியிடங்களுக்கு சந்தைப் படுத்த எடுத்துச் செல்லும் வியாபாரிகள் கிலோ 15 ரூபா வீதம் கொள்வனவு செய்து வருகின்றனர். (த-173)

சாயி சிந்தனை

ஆனந்தம் நமக்குள்ளேதான் உள்ளது!

இந்த ஆத்மானந்தத்தின் அம்சமாக நாம்இருப்பினும் உள்நோக்கமின்றி வெளியிலே இதைத்தேடி அலைகிறோம். கஸ்தூரி மான் கானகமெங்கும் சுற்றித்திரிந்து அந்தக் கஸ்தூரி வாசனை எங்கிருந்து வருகிறது என்று தேடிக் கொண்டிருந்தது. களைப்பு மிகுதியால் ஒரு மரத்தினடியில் படுத்து உறங்கியது. அது விழித்துக் கொண்டதும் இந்தக் கஸ்தூரி வாசனை அங்கும் இருப்பதை உணர்ந்து இது எங்கே இருந்து வருகிறது என்று தேட அது கடைசியில் தன்னிடமே இருப்பதை உணர்ந்தது. இதேபோல் தான் மனிதன் தன்னிடமே உள்ள ஆத்மானந்தத்தை வெளியே தேடிக்கொண்டு காலத்தை வீணடிக்கிறான். (ஆதாரம்:சனாதன சாரதி)

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் – 222 2030, 222 2083, 222 3837.

ஐந்தாவது ஆண்டில் அரிச்சுவடியிலிருந்து....

இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாகி நான்கு வருடங்கள் ஓடி மறைந்து நேற்றுடன் அந்த ஒப்பந்தம் ஐந்தாவது ஆண்டில் நகர்ந்திருக்கிறது.

சரியாக நான்கு ஆண்டுகள் வெறுமனே கழிந்துவிட்ட நிலையில் மீண்டும் அந்த அமைதி ஒப்பந்தம் அதன் ஆரம்பப் புள்ளிக்கே வந்துநிற்கின்றது.

சமாதான முயற்சிகளுக்கு அடிப்படையாக அமைந்த புரிந்துணர்வு உடன்படிக்கையை செவ்வனே நடைமுறைப்படுத்துவது பற்றி இரண்டு தரப்புகளும் நான்கு ஆண்டுகளுக்குப் பின்னர் மீண்டும் பேச்சு மேசைக்கு வந்து விவாதித்துக்கொண்டிருக்கின்ற நிலைமை.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான சமாதானப் பேச்சுக்களை முன்னெடுப்பதற்கு வசதியாகவே நோர்வேயின் நேரடிப் பங்களிப்புடனும் – சர்வதேச சமூகத்தின் ஆதரவுடனும் – புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. ஆனால் அந்த சமாதான முயற்சிகள் குறிப்பிடத்தக்க அளவுக்கேனும் முன்நகரவில்லை. மாறாக – நான்கு ஆண்டுகள் கழிந்துவிட்ட பின்னரும் சமாதான முயற்சிகளை முன்நகர்த்துவதற்கான யுத்த நிறுத்த ஏற்பாடுகளை எவ்வாறு நடைமுறைப்படுத்துவது என்பது பற்றியே இரண்டு தரப்புகளும் ஜெனீவாவில் கூடி விவாதித்துக்கொண்டிருக்கின்றன.

இக்காலப்பகுதியில் தென்னிலங்கையின் அதிகாரத்தைத் தக்கவைத்திருந்தோரில் கடைசியாகப் பொறுப்புக்குவந்த மஹிந்த ராஜபக்ஷவின் அரசுடன் விடுதலைப் புலிகள் மிக முக்கியமான – தீர்க்கமான – இலங்கைத் தீவின் தலைவிதியை தீர்மானிக்கப்போகின்ற – நேரடிப் பேச்சு ஒன்றில் இப்போது பங்குபற்றிக்கொண்டிருக்கின்றனர்.

இரண்டு தரப்புகளுமே போர்க் களத்துக்குப் போவதற்கு முந்திய பேச்சுக்களம் என்று வர்ணிக்கப்படுகிறது ஜெனீவாப் பேச்சு மேசை. இந்த மேசையில் நேற்று ஆரம்பமான பேச்சுக்கள் பற்றிய விவரங்கள் இந்தப் பத்தியைவரையும் போது தெரியவரவில்லை.

கடந்த நவம்பரில் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் பெரும்பான்மை மக்களின் விருப்பத்துக்குரிய நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக உருவெடுத்த மஹிந்த ராஜபக்ஷ, அவருக்கு முந்திய ரணில் நிர்வாகத்தின் காலத்தில் விடுதலைப் புலிகளோடு எட்டப்பட்டிருந்த கொஞ்ச நஞ்ச ஆக்கபூர்வமான முடிவுகளையும் அடியோடு நிராகரித்துவிட்டு 'எல்லாம் புதிதாக' என்ற கோஷத்துடன் சமாதான முயற்சிகளைப் புதிதாக ஆரம்பிக்கப்போவதாக அறிவித்தார்.

மஹிந்த ராஜபக்ஷ அதிகாரத்துக்கு வந்த கையோடே அனுசரணைப் பணியை வகிக்கும் நோர்வேத் தரப்புடன் முரண்பட்டார். தனது கூட்டணிக் கட்சிகளான இனவாத சக்திகளின் வெற்றுக்கோஷங்களை நிறைவேற்றுவதற்காக – கள யதார்த்த நிலைமைகளைப் புரியாமல் – தப்பான பாதை ஒன்றில் நகர முற்பட்டார்.

யுத்தநிறுத்த உடன்பாட்டின்படி தாம் நிறைவேற்ற வேண்டிய கடப்பாடுகளை மேற்கொள்ளாமல் – அதற்காகச் சிறிதும் முயற்சிக்காமல் – நோர்வேத் தரப்புடனும் சர்வதேச சமூகத்துடனும் முரண்படத்தக்கவாறு நகர்வுகளை மேற்கொண்டார் மஹிந்தர்.

யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைமைப் பொறுப்பை நோர்வேயிடம் இருந்து பிடுங்கி 'சார்க்' நாடு ஒன்றிடம் அந்தப் பணியைக் கையளிப்பது உட்பட அவர் பல புதிய கணைகளை எடுத்துவிட்டார்.

இராணுவ ரீதியாகவும் கள நிலைமையின் அடிப்படையிலும் புறச்சூழ்நிலைகளைக் கருத்தில் எடுத்து அதனடிப்படையில் தீர்மானங்களை முன்னெடுக்கத் தவறிய மஹிந்த அரசு, அதனை ஒதுக்கிவிட்டு தென்னிலங்கை அரசியல் அரங்குக்கு ஏற்ற வகையில் தப்பான – தவறான – புதிய வழி ஒன்றைத் திறந்தது.

தமிழர் தாயகப் பிரதேசம் உட்பட நாடு முழுவதும் கொந்தளிப்பான நிலைமையையும் யுத்தபீதியையும் மஹிந்தவின் நகர்வுகள் ஏற்படுத்தின. கொலைகள் மலிந்தன; தமிழ் மக்கள் மீதான இராணுவக் கெடுபிடிகள் பெருகின.

ஆனால், ஆட்சி அதிகாரத்துக்கு வந்து மூன்றே மாதகாலத்துக்குள் தனது வியூகங்களை மாற்றிக்கொண்டு சர்வதேச சமூகத்தினது கண்டிப்புகளோடு புலிகள் தரப்பின் முன்பாக பேச்சு மேசையில் போய் குந்த வேண்டிய கட்டாயம் அவரது அரசுக்கு நேர்ந்திருக்கிறது.

சமாதான முயற்சிகளையும் போர்நிறுத்த நடைமுறைகளையும் செவ்வனே மதித்து முன்னெடுத்து வந்த விடுதலைப் புலிகளின் தலைமை வெட்டு ஒன்று துண்டு இரண்டாக விதித்த காலக்கெடுவினால் மீண்டும் அனுசரணையாளர்களான நோர்வேயின் காலில் போய் வீழவேண்டிய நிலை மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஏற்பட்டது.

அதன்படி, ஏணியில் ஏறாது பாம்பில் வீழ்ந்த கதையாக சமாதான முயற்சிகளை மீண்டும் அரிச்சுவடியில் இருந்து ஆரம்பிக்கவேண்டிய இக்கட்டுடன் பேச்சு மேசைக்குப் போயிருக்கிறது அரசுக் குழு.

மிகக் குறுகிய காலத்துக்குள் மஹிந்தவின் அரசு வகுத்த வியூகங்கள் தோற்றுப்போயின. அந்த வகையில் தென்னிலங்கை அரசியலில் தோற்றுப்போன களம் ஒன்றில் இருந்தே அரசுக் குழுவினர் புதிய களமான பேச்சு மேசைக்குப் போயிருக்கிறார்கள்.

தங்கள் கொள்கையில் – நிலைப்பாட்டில் – கோரிக்கைகளில் – பற்றுறுதியுடன் நிற்கும் விடுதலைப் புலிகள், தமக்குச் சாதகமான சர்வதேச நிலைப்பாட்டுடன் கூடிய ஓர் அரங்கில் தமிழர் பிரச்சினையின் இன்றைய யதார்த்தத்தைத் தெளிவாக உணர்த்தக்கூடிய – வாய்ப்பான – களத்திற்கு வந்திருக்கிறார்கள்.

ஜெனீவா பேச்சு மேசையை 'போர்க்களம்' என்று ஹாஸ்யமாக வர்ணித்திருக்கிறார் அரசுப் பேச்சுக்குழுவின் தலைவரான அமைச்சர் நிமால் ஸ்ரீபால டி சில்வா.

புலிகளின் மதியுரைஞரும் பேச்சுக் குழுவின் தலைவருமாகிய அன்ரன் பாலசிங்கத்துடன் சிநேகபூர்வமான முறையில் உரையாடியபோது 'களத்தில் சந்திப்போம்' என்று பாலசிங்கத்தைப் பார்த்துக் கூறிய நிமால் ஸ்ரீபால டி சில்வா, தோற்றுப்போன களம் ஒன்றில் இருந்துதான் ஜெனீவா பேச்சுக்களத்துக்கு அரசுத் தரப்பு வந்திருக்கிறது என்ற யதார்த்தத்தை உணர்ந்திருப்பாரோ என்னமோ?

பறவைக் காய்ச்சல் நோய் குடாநாட்டிலும் பரவலாம்!

விழிப்புடன் இருக்க மக்களுக்கு அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,பெப்.23

யாழ்ப்பாணத்துக்கும் பறவைக் காய்ச்சல் பரவக்கூடிய அபாயம் தோன்றியிருப்பதாக பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆர்.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

எனவே பொதுமக்கள் இதுவிடயத்தில் எச்சரிக்கையுடனும் விழிப்புடனும் இருக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுள்ளார். பறவைக்காய்ச்சலின் தீவிர பரவல் தொடர்பாக அவரிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்தியாவில் பறவைக்காய்ச்சலின் பரவல் அதிகரித்து வருகின்றது. இந்நிலையில் அங்கிருந்து கோழிகள் குடாநாட்டுக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

இந்த நிலையில் குடாநாட்டிற்கும் பறவைக் காய்ச்சல் பரவும் அபாயம் காணப்படுகின்றது.

கோழிப் பண்ணையாளர்கள் தமது பண்ணையில் கோழிகள் நோய்த்தாக்கத்துக்கு இலக்காகி உயிரிழந்தால் அதனை உடனடியாக அருகில் உள்ள கால் நடை வைத்திய அதிகாரியிடமோ அல்லது சுகாதார வைத்திய அதிகாரியிடமோ தெரியப்படுத்தி கோழி இறந்ததற்கான காரணத்தைக் கண்டறிய வேண்டும்.

இது விடயத்தில் பொது மக்களும் விழிப்பாக இருக்கவேண்டும் என்று அவர் கேட்டுள்ளார். (த-13)

நெடுந்தீவில் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்குக

அரச அதிபரிடம் வேண்டுகோள்

நல்லூர்,பெப்.23

யாழ்.மாவட்டத்தின் பின்தங்கிய பிரதேசமான நெடுந்தீவில் முக்கிய பல அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்ளப்பட வேண்டிய தேவையுள்ளது. அவற்றை வெகுவிரைவில் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு நெடுந்தீவிலுள்ள பொது நிறுவனங்கள் யாழ். அரச அதிபர் கே.கணேஷிடம் கோரிக்கை விடுத்துள்ளன.

நெடுந்தீவுத் துறைமுகத்தை ஆழமாக்கல், குடிதண்ணீர் விநியோகத்துக்கென புதிய தண்ணீர்த் தாங்கி அமைத்தல், நெடுந்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு நிரந்தர வைத்திய அதிகாரியை நியமித்தல், சுப்பிரமணியம் வித்தியாசாலை, மங்கையர்க்கரசி வித்தியாலயம், மாவிலித்துறை றோ.க.த.க. பாடசாலை ஆகியவற்றிற்கு புதிய கட்டடங்கள் அமைத்தல், நெடுந்தீவு மேற்குப் பகுதியின் சில வீதிகளுக்கு மின் விநியோகித்தல், மீனவர் குடியிருப்புகளுக்கு மின்சார வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல், உணவுக் களஞ்சிய நிலையத்தைத் திருத்தல் போன்ற அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அரச அதிபரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அண்மையில் நெடுந்தீவிற்கு உத்தியோக பூர்வவிஜயத்தை மேற்கொண்ட அரச அதிபர் அங்குள்ள பொது அமைப்புகளின் பிரதிநிதிகளுடன் அத்தியாவசிய தேவைகள் தொடர்பாகக் கலந்துரையாடியுள்ளார்.

நெடுந்தீவு உதவி அரச அதிபர் ஆ.பற்றிக்டிறஞ்சன் தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் நெடுந்தீவுப் பிரதேச பாடசாலைகளின் அதிபர்கள், பிரதேச சபைச் செயலாளர், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கப் பொது முகாமையாளர், விவசாய சங்கங்களின் பிரதிநிதிகள், மீனவர் சங்கங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

முன்னதாக உதவி அரச அதிபர் அண்மையில் புதிதாக அமைக்கப்பட்ட மாநாட்டு மண்டபம், சமூர்த்திச் சங்கக் கட்டடம் ஆகியவற்றை அரச அதிபர் சம் பிரதாய பூர்வமாகத் திறந்து வைத்தார்.

காரைப்பிட்டி, கோட்டைக்காடு, செல்வ நாயகபுரம் குடியிருப்புத் திட்டங்களையும் அரச அதிபர் பார்வையிட்டார். (த-111-202)

அனுமதி இன்றி சாராயம் விற்ற ஒன்பது பேருக்கு அபராதம்

யாழ்ப்பாணம்,பெப்.23

அனுமதிப்பத்திரம் இன்றி சாராயம் விற்றமைக்காக ஒன்பது பேருக்கு யாழ். நீதிமன்றம் நேற்றுமுன்தினம் அபராதம் விதித்துள்ளது.

யாழ்.நகரப் பகுதி மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் அனுமதிப்பத்திரம் இன்றி அரசாங்க சாராயம் விற்றார்கள் எனத் தெரிவித்து அவர்களுக்கு எதிராக யாழ்.மதுவரிப் பரிசோதகரால் யாழ்.நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

நேற்றுமுன்தினம் யாழ்.மாவட்ட நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா முன்னிலையில் வழக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது இந்த 9 பேருக்கும் நீதிவான் அபராதம் விதித்தார்.

ஏழுபேருக்குத் தலா ஐயாயிரம் ரூபா வீதம் தண்டப்பணமாகவும் தலா மூவீராயிரம் ரூபா தர்மப்பணமாகவும் விதிக்கப்பட்டது. மற்றைய இருவருக்கும் தலா மூவாயிரம் ரூபா தண்டப் பணமாகவும் தர்மப்பணமாக தலா இரண்டாயிரம் ரூபாவும் அபராதமாக விதிக்கப்பட்டது. (த-7)

கோண்டாவில் டிப்போவில் 11 பஸ்கள் பழுதடைந்த நிலையில் தவம் கிடப்பு

யாழ்ப்பாணம்,பெப்.23

இலங்கை போக்குவரத்துச் சபையின் வட பிராந்திய சபைக்குச் சொந்தமான கோண்டாவில் டிப்போவில் 11 பஸ்கள் பழுதடைந்து திருத்தமுடியாத நிலையில் நீண்ட காலமாகத் தவம் கிடக்கின்றன.

இத்தகவலை யாழ்.சாலையின் பொது முகாமையாளர் கே.கணேசபிள்ளை விசனத்துடன் தெரிவித்தார்.

யாழ்.சாலையில் போக்குவரத்துச் சேவைக்கென போதிய அளவு பஸ்கள் இல்லை. இதனால், யாழ்.மக்களுக்கு திருப்திகரமான சேவையைச் செய்ய முடியாமல் உள்ளது.

13 பஸ்கள் சுமார் 13 வருடங்களாக பழுதடைந்த நிலையில் காணப்படுகின்றன.

இதில் இரண்டு பஸ்கள் யாழ்.சாலையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களின் அயராத முயற்சியால் திருத்தியமைத்து சேவையிலீடுபடுத்த முடிந்தது.

இருப்பினும் இன்னும் 11 பஸ்கள் திருத்த முடியாத நிலையில் 13 வருடங்களாகத் தவம் கிடக்கின்றன.

இந்த பஸ்களுக்குரிய உதிரிப்பாகங்கள் இங்கு கிடைக்காததே இதற்கு காரணம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (த-13)

அறநெறிப் பாடசாலைக்கு ஆன்மீக நூல்கள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.23

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தின் அறநெறிப் பாடசாலைக்கு ஒரு தொகுதி ஆன்மீக நூல்கள் அன்பளிப் பாக வழங்கப்பட்டுள்ளன.

அகில இலங்கை திருமுறைமன்றத் தினரும் தயா அச்சகத்தின் தொழில் அதிபரும் இந்த நூல்களை அன்பளிப் பாக வழங்கியுள்ளனர்.

சிவராத்திரி தினத்தன்று முற்பகல் 10 மணிமுதல் நிரந்தர சமாதானம் வேண்டி கூட்டுப்பிரார்த்தனை இடம் பெறவுள்ளது.

இந்தப் பிரார்த்தனையில் ஈடுபடும் மாணவர்களுக்கு இந்த நூல்கள் இலவசமாக வழங்கப்படவுள்ளன என்று அறநெறிப் பாடசாலையின் அதிபர் கா.கணேசதாசன் தெரிவித்தார்.

இதில் அகில இலங்கைத் திருமுறை மன்றத் தலைவர் பண்டிதர் வ.பேரின்பநாயகம் 'சிவராத்திரி மகிமை' என்ற தலைப்பில் ஆன்மீக உரையாற்றவுள்ளார். (த-13)

உலக உணவுத் திட்டத்தின் கீழ் விவசாயக் குளங்கள் புனரமைப்பு

யாழ்ப்பாணம்,பெப்.23

யாழ்.மாவட்டத்தில் விவசாய நடவடிக்கைகளுக்குப் பயன்படக்கூடிய குளங்கள் இவ்வருடமும் உலக உணவுத் திட்டத்தின் கீழ் புனரமைக்கப்படவுள்ளன.

இந்தத் திட்டத்தின் கீழ் மாவட்ட கமநல சேவைத் திணைக்களத்தினூடாக குளங்கள் புனரமைக்கும்பணி நடைபெறவுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு வருடமும் குளங்கள் புனரமைக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (த-14-202)

யாழ்ப்பாணத்தில் தாக்கலான வேட்புமனுக்கள் கொழும்புக்கு

யாழ்ப்பாணம்,பெப்.23

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்காக யாழ்.செயலகத்தில் தாக்கல் செய்யப்பட்ட வேட்பு மனு படிவங்கள் கொழும்பு தேர்தல் திணைக்களத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டுள்ளன.

இந்தத் தேர்தலுக்காக யாழ்.மாவட்ட உள்ளூராட்சி சபைகளில் 4 கட்சிகள் போட்டியிடுகின்றன.

இந்தக் கட்சிகளுக்கான இலக்கங்களைப் பெற்றுக்கொடுப்பதற்காகவும் வாக்குச் சீட்டுக்களை தேர்தல் ஆணையாளரிடம் கையளிப்பதற்காகவும், வேட்பாளர் பட்டியல்கள் தயாரிக்கப்பட்டு தேர்தலுக்கான ஒழுங்கு நடவடிக்கைகள் மேற்கொள்வதற்காகவுமே இந்த வேட்பு மனுக்கள் எடுத்துச்செல்லப்பட்டுள்ளன. (த-203-204)

நாளை

மாசி 12
வெள்ளிக்கிழமை
24.02.2006
திதி: ஏகாதசி
மாலை: 4.07 வரை
நட்சத்திரம் : பூராடம்
முன்னிரவு : 08.59
சுபநேரம் : 06.30 - 08.00
ராகுகாலம் : 10.30 - 12.00

உதவாக்கு

வெற்றியின்போதை உன் தலைக்கு ஏறாமலும் தோல்வியின் தாக்கம் உன் மனதைப் பாதிக்காமலும் பார்த்துக் கொள.

- ஓர் அறிஞர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கு - கிழக்கு மாகாண பொதுச்சேவையின் உள்ளூராட்சித் திணைக்கள நூலகப் பொறுப்பாளர் தரம் II பதவிக்கு ஆள்சேர்ப்பு செய்வதற்கான திறந்த/மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2006

வடக்கு - கிழக்கு மாகாண பொதுச் சேவையின் உள்ளூராட்சித் திணைக்களத்தில் வெற்றிடமாகவுள்ள நூலகப் பொறுப்பாளர் தரம்II பதவிக்கு ஆள்சேர்ப்பு செய்வதற்காக திறந்த / மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்குக் கீழ் குறிப்பிடப்பட்ட தகைமையுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வடக்கு - கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி 2006.03.20 ஆகும்.

02. சேவை நிபந்தனைகள்:

I. அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்ட விதிகளுக்கு அமைய சேவை நிபந்தனைகள் தீர்மானிக்கப்படும். இப்பதவி நிரந்தரமானது. பங்களிப்பு ஓய்வூதிய நிதியத்தின் கீழ் தங்களுக்கு பங்களிப்பு ஓய்வூதியம் பெற உரிமை உண்டு. ஏற்கனவே ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவி ஒன்றினை வகிக்கும் உத்தியோகத்தர் தெரிவுசெய்யும் பட்சத்தில் அவர் ஓய்வூதிய பிரமாண குறிப்பின் கீழ் ஓய்வூதியம் பெறுவதற்கு உரிமை இருப்பதோடு, விதவைகள்/தபுதாரர், அநாதைகள் ஓய்வூதிய நிதியத்துக்கு தொடர்ந்து பங்களிப்புத் தொகையினைச் செலுத்த வேண்டும்.

II. இது ஓர் இடமாற்று சேவையாகும். இந்நியமனம் பெறுபவர்கள் வடக்கு - கிழக்கு மாகாணத்தின் எப்பாகத்திலும்சேவையாற்றத் தயாராக இருத்தல் வேண்டும். அத்துடன் நியமனம் வழங்கப்படும் நிலையத்தில் கட்டாயமாக 05 வருடங்கள் சேவையாற்ற வேண்டும்.

03. சம்பள அளவுத் திட்டம்:

பொதுநிர்வாக சுற்றறிக்கை 9/2004 இற்கமைவாக
ரூபா 127,560 - 5x1,560 - 1x2,220 - 9x3,480 - 168,900/= **(TB-11-2)**

04. தகைமைகள்:

4.1. திறந்த போட்டிப்பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான தகைமைகள்:

அ. விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

ஆ. சிறந்த தேகாரோக்கியமும் நன்னடத்தையும் உள்ளவராக இருத்தல் வேண்டும்.

இ. விண்ணப்பதாரி விண்ணப்ப முடிவுத் திகதியன்று 18 வயதிற்கு குறையாதவராகவும், 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரசாங்க சேவையில்/மாகாண அரச சேவையில் இருப்பவர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல)

ஈ. வடக்கு - கிழக்கு மாகாணத்தில் நிரந்தரமாக வதிபவராக இருத்தல் வேண்டும். அதாவது, இவ் விண்ணப்ப முடிவு திகதிக்கு முன்னர் உள்ள 06 ஆண்டு காலப் பகுதியில் ஆகக் குறைந்தது 03 ஆண்டுகளாயினும் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் வசித்திருத்தல் வேண்டும்.

குறிப்பு:

வடக்கு - கிழக்கு மாகாணத்தைப் பிறப்பிடமாக அல்லது நிரந்தர வதிவிடமாகக் கொண்டிருந்த போதிலும் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் தற்போது நிலவும் அசாதாரண சூழ்நிலை காரணமாக இடம்பெயர்ந்து வேறு மாகாணங்களிலே தற்காலிகமாக வதிவோரும் இப்பதவிக்கு விண்ணப்பிக்கலாம். எனினும் அவர்கள் தமது தற்போதைய தற்காலிக வதிவிடத்தை நிரந்தர வதிவிடமெனக் காண்பித்து வேறு பதவிகளுக்கு விண்ணப்பித்திருத்தல் கூடாது. அவ்வாறெனில் அதனை அத்தாட்சிப்படுத்தும் ஆவணமும் இடம்பெயர்ந்து தற்காலிகமாக வசிப்பதை உறுதிப்படுத்தும் ஆவணமும் நேர்முகப்பரீட்சையின் போது சமர்ப்பித்தல் வேண்டும்.

உ. **கல்வித்தகைமைகள்** (கல்விச்சான்றிதழ் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்.

க.பொ.த (சா/த) அல்லது அதற்கு சமமான ஒரு பரீட்சையில் சிங்களம் / தமிழ் மொழியுடன் எண்கணிதம்/ ஆரம்ப கணிதம்/ தூயகணிதம்/கணிதம் அடங்கலாக ஐந்து பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஆறு பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இவற்றில் ஒரே அமர்வில் ஐந்து பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அத்துடன்

இலங்கையிலுள்ள அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் நூலகவியல் பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

நூலகவியலை ஒரு பாடமாகக் கொண்டு இலங்கையிலுள்ள அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

இலங்கை நூலகச் சங்கத்தின் இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அல்லது

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் கலைமாணிப் பட்டம் பெற்றிருப்பதுடன் இலங்கை நூலகச் சங்கத்தின் மத்திய பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

4.2. மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான **தகைமைகள்:**

இலங்கை நூலகர் சேவை சங்கத்தின் மத்திய பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அல்லது

இலங்கையிலுள்ள அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் நூலகவியல் மற்றும் எழுத்துத் துறை சார்ந்த இரண்டாம் தரச் சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

கனிஷ்ட பல்கலைக்கழக நூலகவியல் டிப்ளோமாச் சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.

அத்துடன்

தேசிய நூலகர் சேவைகள் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட நூலகம் ஒன்றில் நூலகர் சேவை தரம் III இல் உறுதிப்படுத்தப்பட்டிருப்பதுடன் 3 வருடங்கள் திருப்திகர சேவையைப் பூர்த்தி செய்திருத்தல்வேண்டும்.

குறிப்பு:

விண்ணப்ப முடிவு திகதிக்கு முன் உரிய பரீட்சையின் பெறுபேறுகள் உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்டிருத்தல்வேண்டும். பெறுபேறுகளை எதிர்பார்த்து சமர்ப்பிக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். அத்துடன் உரிய கல்விச் சான்றிதழின் பிரதிகள் இணைக்கப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

05. ஆட்சேர்ப்பு முறை:

அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டம், அரச சுற்று நிருபங்கள் ஆகியவற்றிற்கு அமைவாக எழுத்துப்பரீட்சைப் பெறுபேற்றின் திறமை அடிப்படையில் விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு, அவர்களிடம் இவ்வறிவித்தலில் கோரப்பட்ட தகைமைகள் பரிசீலிக்கப்படும். தேவையான தகைமைகளைக் கொண்டிருக்காதவர் எனத் தெரியவந்தால் தெரிவுக்கான உரிமை இரத்துச்செய்யப்படும். எழுத்துப் பரீட்சை நடத்துவது கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களின் எண்ணிக்கையைப் பொறுத்துத் தீர்மானிக்கப்படும்.

06. எழுத்துப் பரீட்சை

இப்பரீட்சை சிங்களம்/தமிழ் ஆகிய இரு மொழிகள் மூலமும் நடத்தப்படும் இவ்வெழுத்துப் பரீட்சை கீழ்க் குறிப்பிடப்பட்ட இரு வினாப்பத்திரங்களைக் கொண்டதாக அமையும்.

1. நூலகவியல் தொடர்பான பொது அறிவு - மூன்று மணித்தியாலம்
2. தாய்மொழி தவிர்ந்த இரண்டாம் மொழிப் பரீட்சை (சிங்களம்/தமிழ்/ஆங்கிலம்) - இரண்டு மணித்தியாலம்.

குறிப்பு:

திறந்த போட்டிப் பரீட்சை மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்காக ஒரே பரீட்சையை நடத்தி நியமனம் வழங்கப்படும்.

07. பரீட்சைக் கட்டணம்:

விண்ணப்பதாரி வதியும் வடக்கு -கிழக்கு மாகாணத்தில் அமைந்துள்ள பிரதேச செயலகம் ஒன்றில் ரூபா 250/= ஐச் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டினை விண்ணப்பப் படிவத்தில் உரிய கூட்டில் கழறாதவாறு ஒட்டி அனுப்புதல்வேண்டும். அத்தகைய பற்றுச்சீட்டு இன்றி அனுப்பப்படும் எந்த ஒரு விண்ணப்பமும் நிராகரிக்கப்படும். அத்துடன் எக்காரணம் கொண்டும் செலுத்திய பரீட்சைக் கட்டணம் மீளச் செலுத்தப்படமாட்டாது என்பதையும் கவனத்திற் கொள்ளுதல் வேண்டும்.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் நிலவும் அசாதாரண சூழ்நிலை காரணமாக வேறு மாகாணங்களுக்குத் தற்காலிகமாக இடம்பெயர்ந்து உள்ளவர்கள் மட்டும் பரீட்சைக் கட்டணமான ரூபா 250/= ***ஐச் செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு - கிழக்கு மாகாணம், திருகோணமலை*** என்ற பெயருக்குக் காசுக் கட்டளையாகப் பெற்று விண்ணப்பத்துடன் இணைத்தல்வேண்டும்.

08. விண்ணப்பிக்கும் முறை:

இவ்வறிவித்தலின் இ பகுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவங்களுக்கமைவாக திறந்த போட்டிப் பரீட்சைக்கும் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கும் வெவ்வேறான விண்ணப்பப் படிவங்கள் **A4** அளவிலான **(21cmx29cm)** தாளின் இரு பக்கங்களையும் உபயோகித்து விண்ணப்பங்களை ஒழுங்குசெய்து கொள்ளல்வேண்டும். உரிய விண்ணப்பப் படிவங்களைப் பூர்த்திசெய்து 2006.03.20ஆம் திகதிக்கு முன் ***செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, இல.35, மக்கெய்சர் வீதி, உவர்மலை, திருகோணமலை*** என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்பிவைக்கும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''வடக்கு - கிழக்கு மாகாண பொதுச்சேவையின் உள்ளூராட்சித் திணைக்கள நூலகப் பொறுப்பாளர் தரம் II பதவிக்கு ஆள்சேர்ப்பு செய்வதற்கான திறந்த/மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2006''எனப் பரீட்சையின் பெயரைக் குறிப்பிடல் வேண்டும். (மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரி தங்கள் விண்ணப்பங்களைத் திணைக்களத் தலைவரின் ஊடாக அனுப்புதல்வேண்டும்)

விண்ணப்பதாரர் ஒருவருக்கு அவரது அனுமதி அட்டை எழுத்துப் பரீட்சைக்கு குறைந்த பட்சம் ஏழு நாள்களுக்கு முன்பாகக் கிடைக்கப்பெறாவிடின் அது பற்றிப் பரீட்சார்த்தி உடனடியாக மேலே தரப்பட்ட முகவரியுடன் தொடர்பு கொள்ள வேண்டும்.

09. பரீட்சை நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்ட பரீட்சை நகரங்களும் அவற்றின் எண்களும் பின்வருமாறு:-

நகரம்	நகர எண்	நகரம்	நகர எண்
யாழ்ப்பாணம்	1	திருகோணமலை	6
வவுனியா	3	மட்டக்களப்பு	7
கிளிநொச்சி	4	அம்பாறை	8

ஒரு பரீட்சை நகரம் சார்பாகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களின் எண்ணிக்கை குறையுமிடத்து இப்பரீட்சை அண்மையிலுள்ள நகரத்தின் பரீட்சை நகரத்திற்கு மாற்றப்படலாம்.

இவ்வறிவித்தலில் குறிப்பிடப்படாத அல்லது விளக்கமற்ற விடயங்கள் தொடர்பில் வடக்கு - கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவினாலேயே இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்படும்.

வே.பொ.பாலசிங்கம்,
செயலாளர், மா.பொ.சே.ஆணைக்குழு,
வடக்கு - கிழக்கு மாகாணம்,
திருகோணமலை.

(11 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கரைதுறைப்பற்று உதவி அரச அதிபர் பணிமனைக்கு

கட்டடங்கள் போதாது: அதனால் காரியாலயப் பணிகள் மர நிழலில்!

புதுக்குடியிருப்பு,பெப்.23

கரைதுறைப்பற்று உதவி அரச அதிபர் பணிமனைக்குப் போதிய கட்டட வசதி இல்லாமையால் மர நிழலிலேயே காரியாலயப் பணிகள் இடம்பெறும் துர்ப்பாக்கிய நிலையைக் காணக்கூடியதாகவுள்ளது.

மேற்படி பணிமனைக்கு நிரந்தரக் கட்டடம் எதுவும் இல்லாமையால் முள்ளியவளை கமநல சேவை நிலையத்திற்குச் சொந்தமான கட்டடத்தின் ஒரு பகுதியிலேயே இயங்கிவருகின்றது. தொலைத்தொடர்பு, மின்சாரம் போன்ற எந்தவித அடிப்படை வசதிகளும் இந்தப் பணிமனைக்கு ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை.

கிராம சேவகர்கள் மற்றும் ஏனைய அதிகாரிகளுக்கான கூட்டங்கள் அனைத்தும் மர நிழலிலேயே நடத்தப்படுகின்றன.

முல்லைத்தீவில் இயங்கிவந்த இப்பணிமனை 2004ஆம் ஆண்டு ஏற்பட்ட ஆழிப் பேரலை அனர்த்தத்தினால் சொத்துகள் அனைத்தையும் இழந்தது.

அதன் பின்னர் அதன் அலுவலகப் பணிகள் முள்ளியவளைக் கமநல சேவைகள் நிலையத்தின் ஒரு பகுதியிலும் மாவட்ட செயலகத்தின் ஒருபகுதியிலும் பகுதிபகுதியாக இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. (த-353-202)

இலங்கை வங்கியின் முல்லைத்தீவுக் கிளையில் 02-01-2006இல் புதிய கணக்கினை ஆரம்பித்தவர்களுக்கு முல்லைத்தீவுக் கிளை விசேட பரிசில்களை வழங்கிக்கௌரவித்தது.

புதிய கணக்கை ஆரம்பித்த பாடசாலை மாணவன் ஒருவருக்கு கிளை முகாமையாளர் க.லட்சுமணசர்மா பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம். (படம்: புதுக்குடியிருப்புச் செய்தியாளர்)

பூநகரி வித்தியாலயத்துக்கு 'பாண்ட்' வாத்தியக் கருவிகள் அன்பளிப்பு

பூநகரி,பெப்.23

பூநகரி மகாவித்தியாலயத்திற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான 'பாண்ட்' வாத்தியக் கருவிகளை அன்பளிப்பாக வழங்கியுள்ளனர்.

இவ் வாத்தியக் கருவிகளைப் பயன்படுத்தி நடைபெறவுள்ள முதலாவது 'பாண்ட்' வாத்திய அணிவகுப்பு வித்தியாலயத்தின் வருடாந்த இல்லமெய்வன்மைப் போட்டி அன்று நடைபெறவுள்ளதாக வித்தியாலய அதிபர் பாலச்சந்திரன் தெரிவித்தார். (த-403)

பெண்கள் அபிவிருத்தி நிறுவனம் சுயதொழில் மேம்பாட்டுக் கடன்

புதுக்குடியிருப்பு,பெப்.23

முல்லைத்தீவு மாவட்டப் பெண்கள் அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறுவனத்தினரால் சுயதொழிலை மேற்கொள்வதற்கான கடன் உதவிகள் வழங்கப்பட்டுவருகின்றன.

இந்தவகையில் கடந்த 16ஆம் திகதி 36 பயனாளிகளுக்கு 5 லட்சத்து 50 ஆயிரம் ரூபா கடனாக வழங்கப்பட்டது.

திட்ட இணைப்பாளர் செல்வி ப.பாமினி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் திட்ட விளக்கத்தை செல்வி ம.சுகந்தா வழங்கினார்.

தொடர்ந்து சிறப்புரையைப் புதுக்குடியிருப்புப் பிரதேச அரசியல்துறையைச் சேர்ந்த எஸ்.பொன்னமுதன் நிகழ்த்தினார்.

தையல், மோட்டார்வாகனத் திருத்தம், சிறு வியாபாரம், சிறுகுடிசைக் கைத்தொழில் போன்ற வருமானமீட்டும் தொழில்களைச் செய்வதற்கென இக்கடனுதவி வழங்கப்பட்டு வருகின்றது.

பயனாளிகளுக்கான கடனைப் புதுக்குடியிருப்புப் பிரதேச அரசியல்துறையைச் சேர்ந்த எஸ்.பொன்னமுதனும் பெண்கள் அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறுவனத்தின் இணைப்பாளர் ம.சுகந்தாவும் வழங்கினர்.

யு.என்.டி.பி. நிறுவனம் இதற்கான நிதியை வழங்கியுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டப் பெண்கள் அபிவிருத்தி நிறுவனத்தினரால் முதற்தடவையாக 42 மீனவர்களுக்கு 6 லட்சத்து 14 ஆயிரத்து 500 ரூபாவும், 26 விவசாயிகளுக்கு 3 லட்சத்து 95 ஆயிரம் ரூபாவும், கால்நடை கோழி வளர்ப்புக்கென 27 பயனாளிகளுக்கு ஒரு லட்சத்து 95 ஆயிரம் ரூபாவும், ஏனைய சிறு கைத்தொழில்களுக்கென 36 பயனாளிகளுக்கு 5 லட்சத்து 5 ஆயிரம் ரூபாவும் வழங்கப்பட்டுள்ளது. (த-353-203)

முழங்காவில் ஆலய முன்றலில் பஸ் தரிப்பிடம் இன்றிச் சிரமம்!

வெள்ளாங்குளம்,பெப்.23

முழங்காவில் சித்தி விநாயகர் ஆலய முன்றலில் பஸ் தரிப்பிடமும் பொதுமலசல கூடமும் இல்லாமையால் பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

பிரதான வீதியூடாக மன்னாருக்குச் செல்லும் வாகனங்கள் அனைத்தும் மேற்படி ஆலய முன்றலில் தரித்துச் செல்வது வழமை.

இந்நிலையில் பயணிகள் நிற்பதற்குப் பஸ் தரிப்பிடம் இல்லை. இதனால், பயணிகள் மரநிழல்களிலேயே காத்துநிற்கின்றனர்.

மழைகாலங்களில் பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள நேரிடுகின்றது.

இங்கு பொதுமலசலகூடம் இல்லாமையாலும் பெரும் அசௌகரியங்கள் ஏற்படுகின்றன.

எனவே, இதனைக் கருத்திற்கொண்டு அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் பஸ் தரிப்பிடமும் பொதுமலசலகூடமும் அமைக்க முன்வரவேண்டும் எனப் பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (த-415-202)

பதிவாளர் அலுவலக நடமாடும் சேவை

கிளிநொச்சி,பெப்.23

வடக்கு - கிழக்கு மாகாணப் பதிவாளர் நாயகத் திணைக்களத்தால் வவுனியா, நெடுங்கேணி, வெங்கலச்செட்டிக்குளம் ஆகிய பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட மக்களுக்கு பிறப்பு பத்திரம் பெற்றுக்கொடுக்கும் நடமாடும் சேவை நடத்தப்பட்டது.

கடந்த 17ஆம், 18ஆம் திகதிகளில் நடைபெற்ற இந்தச் சேவையில் 350 இற்கும் மேற்பட்ட காலம் பிந்திய பிறப்புப் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டன.

நெடுங்கேணிப் பிரதேச செயலர் பிரிவில் 70 பிந்திய பிறப்புப் பதிவுகளும் வெங்கலச்செட்டிக்குளம் பிரதேச செயலர் பிரிவில் 240 பிந்திய பிறப்புப் பதிவுகளும் மேற்கொள்ளப்பட்டன.

அந்தந்தப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்டவர்களுக்கான பிறப்புப் பத்திரங்கள் உடனடியாக வழங்கப்பட்டதுடன், ஏனைய பகுதிகளைச் சேர்ந்தவர்களுக்கான பிறப்புப் பத்திரங்கள் வழங்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என வடக்கு - கிழக்கு மாகாண உதவிப் பதிவாளர் நாயகம் என்.சதாசிவஐயர் தெரிவித்தார். (த-204-203)

ஒட்டுசுட்டானில் தற்காப்புப் பயிற்சிகள்

ஒட்டுசுட்டான்,பெப்.23

ஒட்டுசுட்டான் பிரதேசத்தின் பல்வேறு இடங்களிலும் தற்காப்புப் பயிற்சி வழங்கும் நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன.

கற்சிலைமடு, ஒட்டுசுட்டான், பேராறு, முத்துஐயன்கட்டு, சின்னச்சாளம்பன் ஆகிய இடங்களில் மக்கள் கட்டுமான பயிற்சி ஆசிரியர் குடியரசன், பயிற்சி ஆசிரியர் கிருபன் ஆகியோர் பயிற்சிகளை வழங்கி வருகின்றனர். (த-341-203)

கிளிநொச்சி வன்னிச் செய்திகள் முல்

வசந்தபுரம் கிராமத்திலுள்ள பாடசாலை மாணவருக்கு உதவி

ஒட்டுசுட்டான்,பெப்.23

சர்வதேச பயிற்சி மன்ற நிறுவனத்தின் உறுதுணையுடன் வசந்தபுரம் கிராமத்திலுள்ள பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

கடந்த மாதம் 26ஆம் திகதி இடம்பெற்ற உபகரணங்கள் வழங்கும் நிகழ்விற்குப் பிரதேச பெண்கள் அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறுவன இணைப்பாளர் தலைமை வகித்தார்.

நிகழ்வில் வைத்து 121 மாணவர்களுக்கு உபகரணங்கள் வழங்கப்பட்டன.

இதேவேளை - பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனம் முள்ளிவளை கிழக்கைச் சேர்ந்த 138 மாணவர்களுக்குப் பாடசாலை உபகரணங்களை வழங்கியுள்ளது. (த-341-202)

ஒட்டுசுட்டானில் சுகாதாரக் கருத்தரங்கு

ஒட்டுசுட்டான்,பெப்.23

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் தியாக தீபம் திலீபன் மருத்துவமனையினர் சுகாதார விழிப்பூட்டல் கருத்தரங்குகளை நடத்தி வருகின்றனர்.

கடந்த 7ஆம் திகதி சின்னச்சாளம்பன் பொதுமண்டபத்தில் திலீபன் மருத்துவமனை சிறப்பு மருத்துவப் போராளி ஈழவாணி தலைமையில் விழிப்பூட்டல் கருத்தரங்கு இடம்பெற்றது.

இதில் சின்னச்சாளம்பன் கிராம மக்கள், பாடசாலை மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

கற்சிலைமடு தியாகதீபம் திலீபன் மருத்துவமனையினர் இம்மாதத்தைச் சுகாதார விழிப்புணர்வு மாதமாகப் பிரகடனப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-341-202)

முல்லைத்தீவு, பாண்டியன்குளம், வவுனிக்குளம் ஆகிய இடங்களில் நன்னீர் மீன்பிடித்தொழிலை மேற்கொண்டு வரும் 40 பேருக்கு ஐ.ஓ.எம். நிறுவனத்தினரால் மீன்பிடி வள்ளங்களும் அதற்கான உபகரணங்களும் கடந்த 17ஆம் திகதி வவுனிக்குளம் அம்பாள் பொதுநோக்கு மண்டபத்தில் வைத்து வழங்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

ஐ.ஓ.எம். நிறுவனத் தலைவர் சி.அமிர்தலிங்கம், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன முல்லைத்தீவு மாவட்ட மேற்குப் பொறுப்பாளர் சங்கர் ஆகியோர் பயனாளிகளுக்கான உபகரணங்களை வழங்குவதையும் -

நிகழ்வில் கலந்துகொண்ட மீனவர்களையும் ஐ.சி.ஆர்.சி. வன்னிப்பிராந்திய பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பசுமைப் புரட்சிக்கான நிறுவன உத்தியோகத்தர்கள்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உயிரியல் I

திரு. தம்பிராஜா, v.s குணசீலன், திரு.த.கெங்காதரன்

கடந்த 16.02.2006ஆம் திகதிய கல்விச்சுடரின் உயிரியல் I இன் வினாத்தாளின் தொடர்ச்சியும் உயிரியல் II இன் வினாத்தாளும் இன்று பிரசுரமாகின்றன.

51. களைகளின் பொதுவான சிறப்பியல்பு என கருதமுடியாதது எது / எவை?
A. மிக நீண்ட கால வாழ்க்கை வட்டம் B. துரிதமான வளர்ச்சி
C. அதிகளவு சேமிப்புணவைக் கொண்ட வேர்கள்
D. வினைத்திறனுடன் காற்றால் மகரந்த சேர்க்கை அடைவதற்கான பொறிமுறைகள்
E. உயர் இனப்பெருக்க வீதம்

52. அங்கிக் கூர்ப்பு பற்றிய பின்வரும் கூற்றுக்களில் எது / எவை சரியானது / சரியானவை?
A. மனித நடவடிக்கைகள் காரணமாக அங்கிக் கூர்ப்பு விரைவாக்கப்படுகிறது.
B. இலிங்கமுறையில் இனப்பெருகுகின்ற குடித்தொகையொன்றில் மாத்திரமே கூர்ப்பு நிகழ முடியும்.
C. ஹாடியினதும் வெயின்பேர்க்கினதும் சமனிலை நிலவும் குடித்தொகை யொன்றில் கூர்ப்பு நிகழ முடியாதிருக்கும்.
D. சில இனக்குடித்தொகைகளில் கூர்ப்பு விரைவாக நிகழும் அதேவேளை வேறு சிலவற்றில் இது மிக மந்தமாகவே நிகழுகிறது.
E. பூமியில் இன்று வாழ்ந்து வரும் மனித குலத்தின் அழிவுடன் கூர்ப்பு முற்றுப்பெற்றுவிடும்

53. பசிடியோமைசிற்றேசுக்கள் பற்றிய பின்வரும் கூற்றுக்களுள் எது / எவை உண்மையானவை.
A. துணைப்பூஞ்சண இழையில் பிடித்தொடுப்புக்கள் காணப்படும்.
B. வெற்றுக்கண்ணுக்கு தென்படக்கூடிய கனியுடலங்களைத் தோற்றுவிக்கும்.
C. இலிங்கமுறை இனப்பெருக்கத்தின் போது தூளிய வித்திகள் உருவாக்கப்படும்.
D. மிகக் குறுகிய கால இருமடிய அவத்தை ஒன்றைக் கொண்டிருக்கும்.
H. அனேகமானவை வைரம் செறிந்த மரங்களில் ஒட்டுண்ணியாக வாழும்.

54. மனிதனின் உடல் வெப்பநிலைச் சீராக்கம் பற்றிய பின்வரும் கூற்றுக்களில் எது / எவை உண்மையானது / உண்மையானவை.
A. உடல் வெப்பநிலைச் சீராக்கலுக்குரிய மையம், மூளையின் நீள்வளையமைய விழையத்தில் அமைந்துள்ளது.
B. உடல் வெப்பநிலை நியம வெப்பநிலையை விட குறைவடைகையில் உட் தோலில் கலன் விரிவு ஏற்படுகிறது.
C. உடல் வெப்பநிலை நியம வெப்பநிலையை விட குறைவடைகையில் அதி ரினவீன் ஓமோன் சுரக்கப்படுகின்றது.
D. உடல் வெப்பநிலை அதிகரிக்கையில் வியர்வை சுரத்தல் பரிவு நரம்புத் தூண்டல் காரணமாக அதிகரிக்கச் செய்யப்படுகிறது.
E. உடல் வெப்பநிலை நியம உடல் வெப்பநிலையை விட அதிகரிக்கையில் தோலில் உள்ள குரோசோவின் முனைக்குமிழ்கள் தூண்டப்படுகின்றன.

55. பின்வருவனவற்றுள் எது / எவை பொய்யானது / பொய்யானவையாகும்.
A. சேதனக் குளோரைட்டு வகைப் பீடை கொல்லிகள் தொகுதிப்பீடை கொல்லிகளாகவே அதிகளவில் உபயோகிக்கப்படுகின்றன.
B. காண்டாமிருகவண்டு என்னும் தென்னைப் பீடை வழமையாகக் தொகுதிப்பீடை கொல்லிகளாலேயே கட்டுப்படுத்துகின்றது.
C. *Bacillus thuringiensis* உயிர்ப் பீடைகொல்லியாகப் பயன்படுத்தப்படு கின்றது.
D. சேதன பொசுபேற்று வகை பீடை கொல்லிகள் சுற்றாடலில் மிகவிரைவாக உடைக்கப்படுகின்றன.
E. LD_{50} பெறுமானம் உயர்வாகவுள்ள ஒரு பீடை கொல்லியுடன் ஒப்பிடுகை யில் LD_{50} பெறுமானம் குறைவாக உள்ள ஒரு பீடை கொல்லி உயர் நச் சுத்தன்மையுடையதாகும்.

56. பின்வருவனவற்றுள் சரியானது / சரியானவை எது / எவை?
A. நைதரசன் பதிக்கும் அங்கிகள் அனைத்தும் புரோக்கரியோற்றாக்களாகும்.
B. பலகல விலங்குகள் அனைத்தும் Animalia இராச்சியத்தினுள் அடங்குவனவாகும்.
C. பச்சையுருமணிகளைக் கொண்டிருப்பவை அனைத்தும் Plantae இராச்சியத்தை சார்ந்தவை ஆகும்.
D. அகத்துறிஞ்சும் போசணையுடையவை அனைத்தும் பங்கசுக்களாகும்.
E. Protoctista இராச்சியத்துக்குரியவை அனைத்தும் தனிக்கலமுள்ள அங்கிகள் ஆகும்.

57. மனித தலையோடு பற்றிய பின்வரும் கூற்றுக்களில் எது / எவை உண்மை யானது / உண்மையானவை
Z. அது 14 என்புகளையுடையது.
A. அதனை பக்கநோக்கில் நோக்கும் போது எல்லா மண்டையோட்டு என்பு களையும் காணக்கூடியதாக உள்ளது.
B. அதிலுள்ள பிரதான உச்சிக்குழிவுகள் ஏறத்தாழ பத்து வயது வரை மூடப்படுவதில்லை.
C. அதன் பிற்பாகத்தையும் பின் அடித்தளத்தையும் அமைக்கின்ற பிடரென்பு கீழ் நோக்கிய பெருங்குடையத்தைக் கொண்டுள்ளது.
D. அதில் சிபுக என்பு மட்டுமே அசையக்கூடியது.

58. தென்னையிலுள்ள செந்நிற நீள்மூஞ்சிவண்டு பற்றிய பின்வரும் கூற்றுக்களில் எது / எவை உண்மையானது / உண்மையானவையாகும்.
A. அதன் வாழ்க்கை வட்டம் முழுவதும் தென்னை மரத்திலேயே நிகழ்கிறது.
B. அதன் குடம்பி அடிமரத்தின் கலன் இழையங்களுக்கு சேதத்தை விளைவிக்கிறது.
C. உயிரினவியல் கட்டுப்பாட்டின் மூலம் அது வெற்றிகரமாக கட்டுப்படுத்தப்படு கிறது.
D. தென்னையின் தண்டினுள் நார்களினால் ஆன புழுக்கூடுகளில் கூட்டுப்புழு வாழ்கிறது.
E. இப்பீடையினால் ஏற்படும் சேதத்தின் பிரதான அறிகுறி இலைகளில் வாட் பல் போன்ற தோற்றம் ஏற்படல்

59. பின்வரும் சமவாயங்களில் எது / எவை உயிரிகளைப் பாதுகாப்பதுடன் நேரடியாகத் தொடர்புடையவையாக விளங்குகின்றன.
A. பேசல் சமவாயம் (The Basel Convention)
B. வியன்னா சமவாயம் (The Vienna Convention)
C. பொன் சமவாயம் (Bonn Convention)
D. உயிர்ப்பல்வகைமை (Convention of Biological diversity)
E. உலக மரபுரிமைச் சமவாயம் (The World Heritage Convention)

60. இலங்கையிலே விரிவான, பகுதிவிரிவான, அடர்ந்த முறை நீர்வளர்ப்பு சம்பந்த மாக சரியானகூற்று / கூற்றுகள் எது / எவை?
A. அலங்கார மீன்வளர்ப்பு பெரும்பாலும் அடர்ந்த முறையில் மேற்கொள்ளப் படுகிறது.
B. நீர்வளர்ப்பு தடாகங்களில் விரிவான வளர்ப்பின்போது வழமையாக குறை நிரப்பி உணவூட்டல் வழங்கப்படுகிறது.
C. விரிவான முறை வளர்ப்பில் வீச்சுவலை, பூவலை ஆகியவற்றைப் பயன் படுத்தி அறுவடை மேற்கொள்ளப்படுகிறது.
D. நாட்டின் கரையோரப்புறங்களில் அமைக்கப்பட்ட இறால் பண்ணைகளில் பகுதி விரிவான, அடர்ந்த முறைகளில் இறால்கள் வெற்றிகரமாக வளர்க்கப் படுகின்றன.
E. அடர்ந்த முறை நீர் வளர்ப்பை விட விரிவான நீர்வளர்ப்பிலேயே வைப்புச் செய்யப்படும் மீனின் அடர்த்தி உயர்வாக இருக்கும்.

உயிரியல் II



1.A. i. மேலுள்ள வரிப்படத்தில் காணப்படுகின்ற கட்டமைப்பை இனங்கண்டு அது உற்பத்தியாகும் குறிப்பான இடத்தையும் பெயரிடவும்?
கட்டமைப்பு .....
உற்பத்தியாகும் இடம் .....

ii. வரிப்படத்திலே a, b, c, d ஆகிய பகுதிகளைப் பெயரிட்டு அவற்றினது தொழில் களையும் கூறவும்

பகுதி	தொழில்
a.	.....
b.	.....
c.	.....
d.	.....

iii. மனித ஆணினது இனப்பெருக்கத் தொகுதியில் விதையின் பிற்புறமாக அமைந் துள்ள கட்டமைப்பைப் பெயரிட்டு அதன் பிரதான தொழிலைக் குறிப்பிடவும்?

கட்டமைப்பு	தொழில்
.....	.....

iv. மனித ஆணின் இனப்பெருக்கத் தொகுதியுடன் சேர்ந்து காணப்படும் பின்வரும் சுரப்புக்கள் புரியும் பிரதான தொழிலைக் கூறுக.
a. சுக்கிலப்புடகத்தின் சுரப்பு .....
b. முன்னிற்கும் சுரப்பியின் சுரப்பு .....
c. கூப்பரின் சுரப்பியின் சுரப்பு.....

B. i. மனிதவர்க்கப் பெண்களிலே நிகழும் மாதவிடாய்ச் சக்கரம் என்னும் பதத்தை விபரிக்கவும்?
.....
.....
.....
.....

ii. இச்சக்கரத்தின் போது இடம்பெறும் சூலகச்சக்கரத்தின் இரு அவத்தைகளையும் பெயரிட்டு அவற்றை ஆரம்பித்து வைக்கும் ஓமோன்களைப் பெயரிடவும்?

அவத்தை	ஓமோன்
1.	.....
2.	.....

iii. மேற்கூறிய அவத்தைகள் ஒவ்வொன்றிலும் விருத்தியடையும் கட்டமைப்புகளைப் பெயரிடவும்
1. .....
2. .....

iv. இவ்விரு அவத்தைகளையும் பிரிக்கும் நிகழ்ச்சியைப் பெயரிட்டு, இந்நிகழ்ச்சியின் போது குருதியில் மிக அதிகளவில் காணப்படும் ஒரு ஓமோனையும் பெயரிடவும்?
1. நிகழ்வு .....
2. ஓமோன் .....



மாதவிடாய்ச்சக்கரத்தில் குருதியில் A, B ஆகிய ஓமோன்களின் அளவில் ஏற் படும் மாற்றம் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளது. இவ்விரு ஓமோன்களையும் பெய ரிட்டு அவை ஒவ்வொன்றும் கருப்பை அகத்தோலில் ஏற்படுத்தும் மாறுதல்களைக் குறிப்பிடவும்?

i. A யின் பெயர் .....
கருப்பை அகத்தோலில் ஏற்படுத்தும் மாற்றம் .....
.....
.....

ii. B யின் பெயர் .....
கருப்பை அகத்தோலில் ஏற்படுத்தும் மாற்றம் .....
.....
.....

iii. A, B ஆகிய ஓமோன்கள் குருதியில் வீழ்ச்சியடையும் போது நடைபெறும் நிகழ்வைக் குறிப்பிடுக?
.....

iv. எந்நிகழ்வினால் ஓமோன் A ஆனது X மட்டத்திலும், ஓமோன் B ஆனது Y மட்டத்திலும் பேணப்படுகின்றது.
.....

v. இரு ஓமோன்களையும் மேற்கூறிய மட்டத்தில் பேண உதவும் கட்டமைப்புக்களைப் பெயரிடவும்?
.....
.....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

D.

i. மனித சூல்வித்தகத்தின் உருவாக்கத்தில் பங்கேற்கும் கட்டமைப்புகளைப் பெயரிட்டு அது எவ்வகைக்குரிய சூல்வித்தகம் எனவும் குறிப்பிடுக?
கட்டமைப்புகள் .....
.....
வகை .....

ii. சூல்வித்தகத்தின் பிரதான தொழிலைக் குறிப்பிட்டு, அது எவ்வானற முறைகளில் அதனை நிறைவேற்றுகின்றது என்பதனையும் குறிப்பிடவும்.
தொழில்.....
.....
முறை.....

iii. கொலஸ்திரம் (Colostrum) என்றால் என்ன?
.....
.....

iv. தாய்ப்பால் கொண்டுள்ள புரதங்களைப் பெயரிடவும்?
.....

v. ஈனுதலின் பின் பால் சுரத்தலையும், வெளியேற்றலையும் சீராக்கும் ஓமோன்களைப் பெயரிடவும்
சுரத்தல் .....
வெளியேற்றல் .....

2. A. i.உயிர்ப்பல்வகைமைப் பரிணாமம் என்பதன் கருத்து யாது?
.....
.....
.....

ii. கூர்ப்பின் அலகைப் பெயரிட்டு அது அங்களின் எவ்வியல்பில் செயற்படுகின்றது எனக் கூறுக?
அலகு .....
இயல்பு .....

iii. அங்கிகளிலே மாறல்களுக்கு வழிவகுக்கும் பிரதான மூலங்களைப் பெயரிடவும்?
.....
.....

iv. அங்கிகளிலே சில அளவறிதலுக்குரிய இயல்புகள் தொடர்ச்சியான மாறலை காட்டுவதற்கு காரணமான பிறப்புரிமைத் தோற்றப்பாட்டைக் குறிப்பிடவும்?
.....
.....

v. தொடர்ச்சியற்ற மாறல் ஏற்படுவதற்கு காரணமாக பிறப்புரிமைத் தோற்றப்பாடுகள் இரண்டைக் குறிப்பிடவும்?
.....
.....

B. i. அங்கிகளின் கூர்ப்பைப் பற்றி முதன் முதலில் முன்வைக்கப்பட்ட கொள்கையைக் குறிப்பிட்டு அதில் காணப்பட்ட பிரதான குறைபாட்டைக் கூறுக?
கொள்கை .....
.....
குறைபாடு .....
.....

ii. ஹாடார்வினினது கூர்ப்புக்கொள்கையில் அவர் அவதானித்த இரு உண்மைகள் எவை?
1. .....
2 .....

iii. ஹாடார்வின் அவதானித்த உண்மைகளில் இருந்து அவர் ஊகித்தறிந்த கருத்துக்கள் மூன்றும் எவை?
1. ..... 2. ..... 3. .....

iv. டார்வினின் கொள்கையில் காணப்பட்ட எவ்விரு குறைபாடுகள் புதிய டார்வின் கொள்கையில் விளக்கப்பட்டுள்ளன.
1. .....
2. .....

v. இயற்கைத் தேர்வினால் புதிய இனங்கள் தோன்றுகின்றன என்னும் டார்வினின் கூர்ப்புக் கொள்கையில் புதிய இனங்கள் எவ்வாறு உருவாகின்றன என்பதனைக் கூறவும்?
.....
.....

C. கீழ்க்காணும் பதங்களை விளக்கவும்
i. விரிகைக்கூர்ப்பு அல்லது இசைபுவிரிகை
.....
.....
.....

ii. சமாந்தரக்கூர்ப்பு
.....
.....
.....

iii. ஒரு வகையான அங்கியில் அதிக பயன்விளைவிக்கக்கூடிய அடிப்படை இயல்பு ஒன்று கூர்ப்பின் மூலம் தோன்றி அவ்வினம் துரிதமாக கூர்ப்புக்குள்ளாகி பல இனங்கள் தோன்றின. கீழ்க்காணும் பிரிவுகளில் தோன்றிய அதிக பயன்விளைவிக்கத்தக்க இயல்புகள் எவை,
1. Pterophyta.....
2. Reptilia .....
3. Aves .....

iv. மனிதனின் கூர்ப்பின் போது அவனை மற்றைய விலங்குகளில் இருந்து திட்டமாக பிரித்து வைக்கும் அண்மைக் காலத்தில் தோன்றிய இரு இயல்புகளைக் குறிப்பிடுக.
1. .....
2. .....

v. மனிதனின் கூர்ப்புப் பாதையில் முதன்முதலில் தோன்றிய பாகுபாட்டுப் பிரிவின் பொதுப் பெயரைக் குறிப்பிடுக.
.....
.....

D. i. பரம்பரை அலகுக் குட்டை(gene pool), எதிருரு அதிர்வெண் ஆகிய பதங்களை விளக்குக.

1. எதிருரு அதிர்வெண்
.....
.....
.....

2. பரம்பரை அலகுக் குட்டை
.....
.....
.....

ii. ஹார்டியினதும் உவைன்பேர்க்கினதும் (Hardy & Weinberg Equilibrium) சமநிலை பேணப்படுவதற்குரிய மூன்று பிரதான நிபந்தனைகளைத் தருக.
1. .....
2. .....A
.....
3. .....
.....

iii. ஹார்டியினதும் உவைன்பேர்க்கினதும் சமன்பாட்டைத்தந்து, அதில் உள்ள ஒவ்வொன்றும் எதனைக் குறிக்கின்றது எனக்கூறுக.
.....
.....
.....
.....

iv. மனிதனில் நீலக்கண் பின்னடைவான எதிருருவினால் ஏற்படுகிறது. Hardy Weinberg சமநிலை நிலவும் குடித்தொகையில் நீலக்கண்ணை உடையவர்கள் 16% ஆயின் ஆட்சியான எதிருருவின் அதிவெண்ணைக் காண்க.
.....
.....
.....
.....

3. A. i.தொற்றுநோய் என்றால் என்ன?
.....
.....
.....
.....

ii. தொற்றுநோய் ஏற்படுவதைத் தீர்மானிக்கும் காரணிகள் நான்கினைத் தருக?
.....
.....
.....
.....

iii. நோயாக்கிகள் எமது உடலினுள் உட்புகும் பிரதான வாயில்கள் எவை?
.....
.....
.....
.....

iv. நோயாக்கிகள் விருந்து வழங்கிக் கலத்தினுள் உட்புகுவதற்காக அவற்றின் உடலின் புறத்தே பிறப்பிக்கப்படும் நொதியங்கள் மூன்றினைத் தருக.
.....
.....
.....

B.i.பெற்ற நீர்ப்பீடனம் என்றால் என்ன?
.....
.....
.....

ii. மனிதனில் பெற்ற நிர்ப்பீடனக் குறைபாட்டு நோயை விளைவிக்கின்ற நுண்ணங்கியையும் அது ஒட்டுண்ணியாக வாழும் கலத்தையும் குறிப்பிடுக?
நுண்ணங்கி : .....
வாழும் கலம் : .....

iii. உயிர்ப்பான நிர்ப்பீடன முறைக்கும் மந்தமான நிர்ப்பீடன முறைக்கும் இடையிலான அடிப்படை வேறுபாடு யாது?
.....
.....
.....

iv. இலங்கையில் குழந்தைகளுக்கு வழங்கப்படும் பின்வரும் தடுப்பு மருந்துகள் (Vaccine) அவை எந்த நோய்களுக்கு எதிராக செயற்படுகிறது.

	நோய்கள்
1. BCG Vaccine	.....
2. Sabin Vaccine	.....

(உயிரியல் வினாத்தாள் II இன் தொடர்ச்சியும் உயிரியல் வினாத்தாள் I, II இன் விடைக்குறிப்புகளும் 02.03.2006ஆம் திகதிய கல்விச்சுடரில் வெளிவரும்)

அன்பு மாணவர்களே!

கல்விச்சுடர் தொடர்பான கருத்துக்களும் அபிப்பிராயங்களும் உங்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன. உங்கள் கருத்துக்களை கீழ்வரும் முகவரிக்கு எழுதி அனுப்பவும்.

கல்விச் சுடர்,
361, கஸ்தூரியார் வீதி,
உதயன் பணிமனை,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எஸ்.பி. மீதான ஊழல் குற்றச்சாட்டு; லஞ்ச ஆணைக்குழு உயர் நீதிமன்றில் மனு!

கொழும்பு, பெப்.23

ஐக்கியதேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளர் எஸ்.பி. திஸநாயக்கவை,லஞ்ச, ஊழல் குற்றச்சாட்டுகளிலிருந்து கொழும்பு மேல்நீதிமன்றம் விடுதலை செய்தமையை எதிர்த்து லஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக் குழு நேற்றுமுன்தினம் உயர்நீதி மன்றத்தில் விசேட மேன்முறையீட்டு மனுவொன்றைத் தாக்கல் செய்திருக்கிறது.

முன்னதாக மேல்நீதிமன்றத்தினால் வழங் கப்பட்ட தீர்ப்பை ஆட்சேபித்து லஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுவொன்றைத் தாக்கல் செய்திருந்தது.ஆனாலும், மேல் நீதிமன்றத் தின் தீர்ப்பினை மேன்முறையீட்டு நீதிமன்றம் ஊர்ஜிதம் செய்து தீர்ப்பு வழங்கியிருந்தது.

இந்த நிலையில் நேற்றுமுன்தினம் உயர்நீதிமன்றத்தில் விசேட மனுவொன் றைத் தாக்கல் செய்தி ருக்கும் லஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக் குழு, எஸ்.பி.திஸ நாயக்க மீதான லஞ்ச, ஊழல் விசார ணைக ளைத் தொடர்ந்து நடத்த தமக்கு அனு மதி வழங்குமாறு கேட்டிருக்கிறது.

எஸ்.பி. மீதான லஞ்ச, ஊழல் வழ க்கு விடயங்கள் ஏனைய நீதிமன்றங் களால் முறையாகக் கவனத்திற் கொள் ளப்படவில்லை யென்று குறிப்பிட் டுள்ள லஞ்ச, ஊழல் விசாரணை ஆணை க்குழு, இந்த விட யத்தில் முன்னர் வழங்கப்பட்ட தீர்ப் புகளைத் தள்ளுபடி செய் யுமாறும் உய ர் நீதி ம ன் ற த் தி ட ம் கோரியிருக்கிறது.

(க-3)

யா/ சென் மேரீஸ் றோ.க.த.க. பாடசாலை (O.L.R.)
பகுதித்தலைவர்
செல்வி றோஸ்மேரி சவரிமுத்து
அவர்களின்
சேவைநலன் பாராட்டு வாழ்த்து
23.02.2006

எமது பாடசாலையில் 01.09.1984 ஆம் ஆண்டு தொடக்கம் 22.02.2006 வரை ஆரம்பப்பிரிவு பகுதித் தலைவராகவும் செய்திறன் மிக்க பண்பாளராகவும் கடமை யாற்றிய செல்வி றோஸ்மேரி அவர்கள் ஓய்வுபெறும் இவ் வேளையில், அவர் நோய் நொடியின்றி நீடுழிகாலம் வாழ, அடைக்கல அன்னையின் ஆசியை வேண்டி வாழ்த்துகிறோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
(46926)(45-49-18)

தெய்வீக சமாதான கூட்டங்கள்
வாருங்கள்
தெய்வீக சமாதானத்தைப் பெறுங்கள்

பிரசங்கித்து ஜெபிப்பவர்கள்
பாஸ்ரர்:
கிம்ரோப்
(ஜரோப்பா)
சகோதரி:
டெபிலார்சன்

காலம்
மாசி மாதம் 24 ஆம், 25 ஆம், 26 ஆம் திகதிகளில்
யாழ். வீரசிங்கம் மண்டபத்தில்

★23 ஆம் திகதி முற்பகல் 10 மணி - 12மணிவரை பெண்களுக்கான கருத்தரங்கு
(எக்காளத்தொனி சபை மண்டபம் 21, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்)
★24 ஆம் திகதி முற்பகல் 10 மணி - 12 மணிவரை
சகல கிறிஸ்தவ ஊழியர்களுக்கான கருத்தரங்கு
★24 ஆம் திகதி பி.ப 3மணி - 6 மணிவரை
அனைவருக்குமான விசேஷித்த கூட்டம்.
★25 ஆம் திகதி முற்பகல் 10மணி - 12 மணிவரை பெண்களுக்கான கருத்தரங்கு
★25 ஆம் திகதி பி.ப 3 மணி - 6 மணிவரை
அனைவருக்குமான விசேஷித்த கூட்டம்.
★26 ஆம் திகதி முற்பகல் 9.30 மணிக்கு ஞாயிறு பொது ஆராதனை
(வீரசிங்கம் மண்டபத்தில் நடை பெறும்)
★26 ஆம் திகதி பி.ப 3மணி-6மணி வரை அனைவருக்குமான இறுதிக் கூட்டம்
வியாதியஸ்தர்களுக்காக ஜெபிக்கப்படும் - வியாதியஸ்தர்களை அழைத்து வாருங்கள்

பிரவேசம் இலவசம்
யாவரும் வருக
தொடர்புகளுக்கு:-
எக்காளத் தொனி சபை
21, கச்சேரி நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்.
T.P.: 021 222 3632
(46945)

நெஞ்சில் விளக்கேற்றி நினைவுக்கு மாலையிட்டோம்

ஐயாவைப் பிரிந்து வருடமொன்றானது
ஆயினும் ஈரவிழிகள் காயவில்லையே எமக்கு

அன்னை மடியில் 22.11.1929
ஆண்டவன் அடியில் 23.02.2005

திதி: 14.03.2006 பூரணை

நெடியதான நின் நிமிர்வை மறப்பமோ?
நெஞ்சிலாடும் நினைவை மறப்பமோ?
வாடிவு கொண்ட நின் வாழ்வை மறப்பமோ?
வாசல் ஏற்றும் சிரிப்பை மறப்பமோ?
மடியில் தாங்கிய உறவை மறப்பமோ?
மனிதனாகிய தெய்வமே! எங்களால்
முடியவில்லையே; உங்களை மறந்திட
முச்சென உயிர் வாழ்கிறோம் எம்முடன்

நிலவு அற்றதோர் வானமென்றாயினோம்
நீரிலா வெறும் பாலையென்றாயினோம்
அழகு கொண்டு நம்மோடு அருகினில்
ஆடி நின்றவன் போனபின்; எங்களின்
வளவு கூட வோர் பாழ்வெளியானதே
வாசல் யாவிலும் நின்குரல் கேட்குதே
திலகமேந்திய தெய்வமே! மீண்டுமோ
தோளிலே சிறுபிள்ளையாய் வருகவே.

காலம் கரையக் கரைய
ஆழமாகிறது ஐயா உங்கள் நினைவு

14.03.2006 அன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

நினைவுடன்:
அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர், நண்பர்கள்.
(கி.47999)

அமரர்
வேலுப்பிள்ளை கந்தையா ஏரம்பு
[புங்குடுதீவு- 1]
ஓய்வுநிலை அதிபர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதிரி விண்ணப்பப் படிவம்

வடக்கு - கிழக்கு மாகாண பொதுச்சேவையின் உள்ளூராட்சித் திணைக்கள நூலகப் பொறுப்பாளர் தரம் II பதவிக்கு ஆள்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2006

சுட்டெண் ☐
(அலுவலக உபயோகத்திற்கு)

01. முதலெழுத்துக்களுடன் விண்ணப்பதாரியின் பெயர்:
திரு/திருமதி/செல்வி:-
தமிழில் :.....
ஆங்கிலத்தில் (பெரிய எழுத்துக்களில்) :.....

02. முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர்கள்:
தமிழில் :.....
ஆங்கிலத்தில் (பெரிய எழுத்துக்களில்) :.....

03. தபால் முகவரி:
தமிழில் :.....
ஆங்கிலத்தில் (பெரிய எழுத்துக்களில்) :.....

04. பால்: ஆண் M ☐ பெண் F ☐

05. பிறந்ததிகதி:

வருடம்:	மாதம்:	திகதி:
2006.03.20 ஆம் திகதியன்று வயது வருடங்கள்:	மாதங்கள்:	நாள்கள்

06. அடையாள அட்டை இல.: ☐☐☐☐☐☐☐☐☐☐

07. பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம்: தமிழ் T/ சிங்களம் S ☐

08. தெரிவுசெய்யும் பரீட்சை நகர எண்: ☐
(09 ஆவது பந்தியில் குறிப்பிடப்பட்ட பரீட்சை நகர இலக்கத்தைக் குறிப்பிடுக)

09. இனம்: சிங்களவர் ☐ இலங்கைத் தமிழர் ☐ இந்தியத் தமிழர் ☐
முஸ்லிம் ☐ ஏனையவர் ☐

10. நீங்கள் இலங்கைப் பிரஜையா? ஆம்/இல்லை ☐

11.
1.நீங்கள் நிரந்தரமாக வதியும் மாவட்டம்:
2. பிரதேச செயலாளர் பிரிவு:
3. வதியும் கால எல்லை: தொடக்கம் வரை
4. வடக்கு - கிழக்கு மாகாணத்திலிருந்து தற்காலிகமாக இடம்பெயர்ந்து இருப்பின், தங்கள் நிரந்தர வதிவு மாவட்டம்:
5. தற்காலிகமாக இடம்பெயர்ந்து வதியும் மாவட்டம்: மாகாணம்:
இடம்பெயர்ந்தஆண்டு: மாதம்: திகதி:
12. கல்வித் தகைமைகள் (கல்விச் சான்றிதழ் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்)
12.1. க.பொ.த.(சா/த)
1ஆவது அமர்வு:
ஆண்டு: சுட்டெண்

பாடங்கள்	தரம்	பாடங்கள்	தரம்
1.		5.	
2.		6.	
3.		7.	
4.		8.	

2ஆவது அமர்வு
ஆண்டு: சுட்டெண்

பாடங்கள்	தரம்	பாடங்கள்	தரம்
1.		5.	
2.		6.	
3.		7.	
4.		8.	

12.3. ஏனைய தகைமைகள் (பந்தி 4.1 உ இன் படி)

ஆண்டு	பரீட்சையின் பெயர்	சான்றிதழ் வழங்கிய நிறுவனம்	சான்றிதழ் செல்லுபடியாகும் திகதி
01			
02			

13. பணம் செலுத்திய பற்றுச் சீட்டை கழறாதவாறு இங்கு ஒட்டவும்.

பரீட்சைக்கட்டணம் செலுத்தப்பட்ட .....
பிரதேச செயலகத்தின் .....ஆம் இலக்க .....ஆந்திகதிய பற்றுச்சீட்டு இதில் ஒட்டப்பட்டுள்ளது.
இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள விவரங்கள் யாவும் எனது அறிவிற்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரையில் உண்மையானவை என்பதை உறுதிப்படுத்துவதுடன் இப் பரீட்சை விதிகளுக்கு அமைந் தொழுகி நடப்பதற்கும் சம்மதிக்கிறேன். மேலும் இப்பரீட்சை நிபந்தனைகளின்படி நான் தகுதியற்றவரெனக் கண்டுபிடிக்கப்பட்டால் பரீட்சையின் முன்னரோ பரீட்சையின்போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எனது பரீட்சார்த்த தன்மையை இரத்துச் செய்வதற்கு எடுக்கும் முடிவுகளை ஏற்றுக் கொள்வதற்கும் எனது இணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

....
திகதி விண்ணப்பதாரியின் கையொப்பம்.

14. விண்ணப்பப் பத்திரத்திலுள்ள பரீட்சார்த்தியின் கையொப்பம் அரசாங்கப் பாடசாலை அதிபர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, படை தாங்கு சேவையின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர், பொலீஸ் சேவையின் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பதவி வகிக்கும் உத்தியோகத்தர் அல்லது வருடாந்த திரட்டிய வேதனமாக ரூபா 128,160/= இற்கு மேற்பட்ட சம்பளத்தை உடைய அரச சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் உத்தியோகத்தர் ஆகிய ஒருவரால் சான்றுபடுத்தப்பட வேண்டும்.
விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்:
விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கின்ற திரு/திருமதி/செல்வி .... என்பவர் எனக்கு நன்கு தெரிந்தவர் எனவும் ..... ஆந் திகதி அவர் என் முன்னிலையில் கையொப்பமிட்டார் எனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

....
திகதி கையொப்பத்தை உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின் கையொப்பம்.

கையொப்பத்தை உறுதிப்படுத்துகின்ற உத்தியோகத்தரின் முழுப்பெயர்:
பதவி:
முகவரி: (பதவி முத்திரை)

15. (வடக்கு - கிழக்கு மாகாணத்திலிருந்து தற்காலிகமாக வேறு மாகாணத்திற்கு இடம்பெயர்ந்துள்ளவர்களுக்கு)
மேற்படி விண்ணப்பதாரி வடக்கு - கிழக்கு மாகாணத்தை நிரந்தர பிறப்பிடமாக/வதிவிடமாக கொண்டவர் என்பதையும் அவர் ..... திகதி முதல் தற்காலிகமாக இடம்பெயர்ந்து ..... மாகாணத்தில் வசித்து வருகின்றார் என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

....
திகதி பிரதேச செயலாளர்/ கிராம சேவகர் கையொப்பம்

பதவி:
முகவரி:
(பதவி முத்திரை)

16. திணைக்களத் தலைவரின் உறுதியுரை:
இத் திணைக்களத்தில் நிரந்தர உத்தியோகத்தராக கடமையாற்றும் திரு/திருமதி/செல்வி ..... அவர்களின் விண்ணப்பத்தை சிபார்சு செய்து சமர்ப்பிக்கின்றேன். அவர் இப்பதவிக்கு தெரிவு செய்யப்படுமிடத்து விடுவிக்க முடியும் என்பதையும் இவர் தனது சேவைக் காலத்தில் எதுவித ஒழுக்காற்று நடைமுறைக்கும் உட்பட வில்லை என்றும் சகல வேதன ஏற்றங்களையும் பெற்றுள்ளார் என்பதையும் இங்கு அவரால் குறிப்பிடப்பட்ட விவரங்கள் சரியானவை என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

....
திகதி திணைக்களத் தலைவரின் கையொப்பமும் பெயரும்

பதவி:
முகவரி:
(பதவி முத்திரை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னஞ்சிறு விளம்பரங்கள்

காணி விற்பனைக்கு

கொழும்புத்துறை வீதியில் பிள்ளையார் கோயிலுக்கு சமீபமாக 9 பரப்புக்காணி விற் பனைக்குண்டு. தொடர்பு **T.P. 0773618100.** (47114)

அளவெட்டியில் நல்ல சுற்றாடலில் வீடு கட்டக்கூடிய 3 ½ பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: த.தர்மச்சந்திரன் 'அருள கம்' அரச கேசரிப் பிள்ளையார் கோயிலடி, நீர்வேலி வடக்கு, தொ.பே.077 6258191. (47133)

வீடு விற்பனைக்கு

இல.46, கொழும்புத்துறை வீதியில் (சுண்டிக்குளி பாடசாலைக்கு அருகில்) உள்ள 1¼ பரப்புக் காணியுடன் கூடிய வீடு விற் பனைக்குண்டு. தொடர்பு: ஜீவன் தாஸியஸ் **0776314198, 0773249026.** (47116)

கொக்குவிலில் பிரயோசனங்களுடன் கூடிய வீடு வளவு உடன்விற்பனைக்குண்டு. நேரில் தொடர்புகொள்ளவும் தொடர்பிற்கு இல.75/10, செட்டித்தெரு, நல்லூர். (நல் லூர்க்கந்தசாமி, கோயில் தெற்கு வீதி, கிழக்கு மூலை) (47129)

விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள நீரிறைக்கும் இயந்திரங்கள் வில்லியேர்ஸ் (England) MK20, றொபின் MK20 மற்றும் Double Door குளிர்சாதனப்பெட்டி (கடைக்கு உகந்தது) என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: த.தர் மச்சந்திரன் 'அருளகம்' அரசகேசரிப்பிள் ளையார் கோயிலடி, நீர்வேலிவடக்கு தொ.பே.0776258191. (47132)

மணமகள் தேவை

கனடா குடியுரிமையுடைய யாழ்/இந்து கௌரவ குடும்பம், 1974, திருவாதிரை மிதுன ராசி, 48 கிரகபாவம், 5'7" உயரம், எலற்றிக்கல் எஞ்சினியர் மணமகனுக்கு டாக்டர், எஞ்சினி யர், எக்கவுண்டன், விஞ்ஞானப் பட்டதாரி மண மகள் தேவை. சிவரலயா, இல.11, யமுனா வீதி, நல்லூர். **T.P. 0776528641.** (47114)

யாழ் இந்துகௌரவ குடும்ப U.Kயில் RESEARCH SCIENTIST (B.sc-Ph.D) ஆகக் கடமை புரியும் மகம் நட்சத்திர செவ்வாய்க் குற்றமற்ற 32 வயது ஆணுக்கு ஆழகிய டாக்டர் அல்லது எக்கவுண்டர் மண மகள்தேவை. தொடர்பு: விளம்பர இலக்கம் 2813, மே/பா உதயன். (47130)

INVITATION

UDUVIL GIRLS' COLLEGE
invites parents & well wishers
TO
THE ANNUAL INTER HOUSE SPORTS MEET
ON
FRIDAY, FEBRUARY 24th, 2006, 1.15 P.M.
Chief Guest: Rev. Theodore Elsenheimer,
United Church of Christ, U.S.A.

(C/47987) **Principal, Staff & Students.**

ஆறாம் ஆண்டு நினைவலைகள்

மண் மகிழ
உதித்தநாள்
10
–
07
–
1927

மனம் நெகிழ
மறைந்த நாள்
29
–
02
–
2000

தம்பகாமம் பளையைச் சேர்ந்த

அமரர் வேலுப்பிள்ளை சின்னத்தம்பு

திதி: மாசி மாதத்து, அபரபட்சத் தசமி (23-02-2006)

எந்தையே!

நிலவுலகத்து நிழல் சுலைந்து பொய்யானது
நிர்மலமான நீரில் தோற்றிய குமிழ் குலைந்தது
நாளும், நற்செல்வம், நல்லினமை யாவுக்கும்!
நேரும் சுதி? பொய்யே! பொய்யே!
ஆனால் எம்மனதில் நீர் போட்ட
கோலங்கள் மெய்யே! மெய்யே!

(47127)(26.15.45) **-குடும்பத்தினர்.**

விற்பனைக்கு

அரிசி ஆலை உரிமையாளருக்கு

ஸ்ரீம் பொயிலர் விற்பனைக்குண்டு. நாள் ஒன்றுக்கு 100 மூடை நெல்லை நீராவியில் அவிக்கக்கூடிய பாவனையில் உள்ள தரமான பொயிலர் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: T.P.: **021 226 4109**
0776441991

அலுவலக உத்தியோகத்தர்கள் தேவை

கொழும்பை தலைமையகமாகக் கொண்டு யாழ்ப்பாணத்தில் கிளை நிறுவன மாக இயங்கும் தனியார் நிறுவனம் ஒன் றுக்கு கீழ்வரும் உத்தியோகத்தர்கள் தேவை.

1.கணனி தட்டெழுத்து தமிழ், ஆங்கிலம் நன்கு தெரிந்த பெண்கள்.

2.கணக்காளர்கள் ஆண், பெண் இரு பாலரும்-

3.வரவேற்பாளர்கள் (Receptionist), தொலைபேசி இயக்குநர் பெண்கள் தேவை.

உங்கள் விண்ணப்பப்படிவங்களை 26.02.2006 அன்று சுயவிவரக்கோவை யுடன் அனுப்பி வைக்கவும். தொலைபேசி இலக்கத்தையும் தவறாது குறித்து வைக்கவும்.

தொடர்புகளுக்கு:
விளம்பர இல.2812
மே/பா உதயன்.

(P-48003) (18-45-49)

SHANTHIHAM (A.H.C)- JAFFNA

VACANCY - **Research Assistants**

Association for Health and Counseling is seeking for individuals motivated and team players who should, be an active member contributing to its growth and development, possess the ability to work in a computerized environment and demonstrate good interpersonal skills with positive attitude to work in difficult situations, should be a, University Degree (Sociology/Anthropology/psychology or equalant) or a related discipline.
Good command in English and Tamil languages
Should possess valid motor cycle license
Both sexes below 35 years of age are encouraged to apply.
Terms and conditions would be decided at the time of interview
Closing date... 1st March 2006
A pleasant and modern work environment awaits the right candidate.

யோக பயிற்றுநர்.

பின்வரும் தகைமையுடையவர்கள் சாந்திகத்தின் யோக பயிற்றுநர்களாக சேவையாற்றுவதற்குத் தெரிவுசெய்யப்படு வார்கள்.

- அடிப்படை யோக தெரிந்தவர்கள்.
- யாழ்ப்பாணம் மற்றும் அதனை அண்மித்த இடங்களில் வசிப்பவர்கள்.
- இத்தத் துறையில் தொடர்ந்தும் வேலைசெய்ய விரும்புபவர்கள்.
- வயது வரையறை இல்லை.
- ஆர்வமுள்ள இருபாலாரும் கல்வித் தகைமையுடன் ஏனைய அனுபவங் களையும் சேர்த்து விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்ப முடிவுதிகதி : 01-03-2006

விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி.

Application to be mailed to:-
Executive Director
Shanthiham
8/1 Katpaha Vinayager lane,
Kachcheri Nallur Road, Jaffna. (C/48006)

29ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம்	மறைவு
24 - 10 -1932	28-01-2006

அமரர் கதிர்காமு துரைரத்தினம்

கடந்த 28-01-2006 அன்று இறை பதம்அடைந்த அமரர் கதிர்காமு துரைரத் தினம் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (23-02-2006) வியாழக்கிழமை நடைபெற்று, எதிர் வரும் (25-02-2006) சனிக்கிழமை அன்று மு.ப.10.30 மணியளவில் மூ.த.மூர்த்தி (கிளி) அவருடைய இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கி ருத்திய நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன விருந்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

முனியப்பர் கோயிலடி,
கட்டுவன் - மல்லாகம் வீதி,
ஏழாலை.

மூ.த.மூர்த்தி.
(கிளி).

(47120)(26.15.45)

மரண அறிவித்தல்

செல்லப்பா நடராசா

வட்டு.மேற்கு, வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவம் கொண்ட செல்லப்பா நடராசா (மிருதங்க வித்துவான்) 21.02.2006 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் இராஜேஸ்வரியின் அன்புக் கண வரும் ஜெயக்குமார் (பிரான்ஸ்), குமுதினி (பிரான்ஸ்), சுகுமார் (பிரான்ஸ்), சுரேஸ்குமார் (பிரான்ஸ்), ராஜ்குமார், மாலினி, நளினி ஆகியோரின் அன்புத் தந்தையும் சத்தியா (பிரான்ஸ்), மனோகரன் (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனாரும் தேனுஜன், மனோஜ் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.02.2006) வியா ழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக நண்பகல் 12 மணியளவில் வழுக்கையாறு மயானத் திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இராஜேஸ்வரி - (மனைவி)

வட்டு.மேற்கு,
வட்டுக்கோட்டை. (47131)(32.26.15.45) **பிள்ளைகள்.**

31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்தியஅழைப்பும்

திருமதி
சின்னராசா சரஸ்வதி

உதயம்: 07.11.1927
அஸ்தமனம்: 25.01.2006

25.01.2006 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவியின் மறைவுச் செய்திகேட்டு ஓடோடிவந்து அனுதாபம், அஞ்சலி, ஆறுதல் தெரிவித்து இறுதிக்கிரியை களில் கலந்து கொண்டோருக்கும் தொலை பேசிஊடாக ஆறுதல் தெரிவித்தோருக்கும் மற்றும் சகல வழிகளிலும் உதவிய அனை வருக்கும் நன்றியைத் தெரிவிப்பதுடன் நாளை (24.02.2006) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக் கின்றோம்.

குடும்பத்தினர்.
(ராஜா கிரீம் ஹவுஸ்)

37/10, இராமநாதன் வீதி,
தலையாழி ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாராஷ்டிரா மாநிலத்தில் மேலும் 8 பேருக்கு பறவைக்காய்ச்சல்

நவபூர்,பெப்.23

பறவைக் காய்ச்சல் நோய் தாக்கிய அறிகுறியுடன் மகாராஷ்டிராவில் 8 பேர் மருத்துவமனையில் கண்காணிப்பில் வைக்கப்பட்டனர். ஏற்கனவே 3 பேர் சிகிச்சை பெறுகின்றனர்.

மகாராஷ்டிராவில் கோழிப்பண்ணை உரிமையாளர்களுக்கு இதுவரை 20 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டிருக்கிறது.

மகாராஷ்டிராவில் ஒன்றரை லட்சத்துக்கும் மேற்பட்ட கோழிகளும் முட்டைகளும் அழிக்கப்பட்டுவிட்டன. குஜராத்தில் 60 ஆயிரம் கோழிகள் கொல்லப்பட்டுவிட்டன. (ஐ)

காஷ்மீர் முன்னாள் அமைச்சர் உயிர் தப்பினார்

ஸ்ரீநகர்,பெப்.23

தீவிரவாதிகள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் காஷ்மீர் முன்னாள் அமைச்சரும் மக்கள் ஜனநாயகக் கட்சியின் மூத்த தலைவருமான அப்துல் கபார் சோபி உயிர் தப்பினார்.

அனந்தநாக் மாவட்டம், சோனிகாம் நகருக்கு வளர்ச்சிப் பணிகளை ஆய்வு செய்வதற்காக செவ்வாய்க்கிழமை அவர் காரில் சென்றபோது, வழியில் குத்வானி என்ற இடத்தில் இத் தாக்குதல் நடைபெற்றது.

அப்துல் கபார் சோபி காயமின்றித் தப்பினார். மற்றொரு காரில் உடன் சென்ற அரச அதிகாரிகள் மூவர் தீவிரவாதிகளின் துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்தனர். (ஐ)

தமிழ்நாட்டில் மீன்விலை கிடுகிடுவென உயர்வு

கோவை,பெப்.23

தமிழ்நாட்டில் பறவைக் காய்ச்சல் எதிரொலியால் கோவையில் மீன் விலை கிடுகிடுவென உயர்ந்துள்ளது.

கோழி இறைச்சிக்குப் பதில் மீன் நுகர்வு சூடுபிடித்துள்ளது. மீன் விலை என்றும் இல்லாத அளவுக்கு உயர்ந்துள்ளது.

கடந்த 10 நாள்களுக்கு முன் கிலோ 150 ரூபாவுக்கு விற்பனையான மீன் செவ்வாய்க் கிழமை கிலோ 250 ரூபாவுக்கு விற்பனையானது.

மீன்விலை உயர்ந்த அளவுக்கு ஆட்டு இறைச்சி விலை உயரவில்லை என்றாலும் ஆட்டுஇறைச்சி விலை கிலோவுக்கு 10 ரூபா முதல் 30 ரூபாவரை உயர்ந்துள்ளது எனக் கறி வியாபாரிகள் கூறுகின்றனர். (ஐ)

மலேசியாவில் மீண்டும் பறவைக் காய்ச்சல்!

கோலாலம்பூர்,பெப்.23

மலேசியாவிலும் பறவைக் காய்ச்சல் நோய் தாக்கியுள்ளது. தலைநகர் கோலாலம்பூர் அருகே உள்ள புறநகர்ப் பகுதியில் 'எச் 5 என்1' என்னும் பறவைக் காய்ச்சல் வைரஸ் கிருமி தாக்கி 40 கோழிகள் இறந்துவிட்டன.

அதையடுத்து அந்தப் பகுதியில் இருந்த 110 கோழிகள் கொன்றழிக்கப்பட்டன. அங்கிருந்து வேறு பகுதிகளுக்கு கோழிகளை எடுத்துச் செல்வதும் தடைசெய்யப்பட்டுவிட்டது.

வேறு எங்கும் பறவைக் காய்ச்சல் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகத் தகவல் இல்லை. மனிதர்கள் யாரையும் அந்நோய் [illegible] கவும் தகவல் இல்லை. எனவே, அச்சப்படத் தேவையில்லை என்று மலேசிய வேளாண் துறை அமைச்சர் ஸ்ரீ முகையிதீன் யாசின் ஓர் அறிக்கையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை தெரிவித்துள்ளார்.

பறவைக் காய்ச்சல் நோய் பரவுவதைத் தடுக்கவும் உடனடியாக கால்நடை பராமரிப்புத்துறை, சுகாதாரத் துறைகள் மூலமாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்றும் அவர் கூறினார்.

ஏற்கனவே மலேசியாவில் பறவைக் காய்ச்சல் நோய் தாக்கி ஏராளமான கோழிகள் இறந்தன. பின்னர் அந்நோய் கட்டுப்படுத்தப்பட்டது. பறவைக் காய்ச்சல் முற்றிலும் ஒழிக்கப்பட்டுவிட்டது என்று 2005 ஜனவரியில் மலேசியா அறிவித்தது. அதற்குப் பிறகு, இப்போது முதல் முறையாக மீண்டும் பறவைக் காய்ச்சல் தாக்கியுள்ளது என்று அரசு அறிவித்துள்ளது. (ஐ)

அல்கெய்டாவுடன் தொடர்புடைய 16 பேருக்கு மரண தண்டனை

கராச்சிபெப்.23

பாகிஸ்தானில் இராணுவத் தளபதியைக் கொல்ல முயன்றதாகத் தொடரப்பட்ட வழக்கில், அல்கெய்டா அமைப்பிடம் பயிற்சி பெற்ற 16 பேருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. அந்த 16 பேரும் ஜூண்ட் அல்லா' என்ற அமைப்பைச் சேர்ந்தவர்கள்

2004 ஜூன் 10ஆம் திகதி கராச்சி நகரில் ஆஷான் சலீம் ஹயாத் என்ற இராணுவ காரில் சென்றபோது இந்த அமைப்பைச் சேர்ந்தவர்கள் துப்பாக்கிகளால் சரமாரியாகச் சுட்டனர். அதில் 11 பேர் இறந்தனர். தளபதி உயிர் தப்பினார்.

அதையொட்டி நடத்திய தேடுதல் வேட்டையில் 11 தீவிரவாதிகள்தான் சிக்கினர். 5 பேர் இன்னமும் தலைமறைவாகவே இருக்கின்றனர். 16 பேருக்கும் மரண தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது. (ஐ)

கூட்டணிக் கட்சிகளுக்காக தொகுதிகளைக் குறைப்போம்!

தி.மு.க. தலைவர் கருணாநிதி

திருச்சி,பெப்.23

கூட்டணிக் கட்சிகளுக்குப் போதிய இடங்கள் கொடுப்பதற்காகத் தி.மு.க.வும் இடங்களைக் குறைத்துக்கொள்ளும் என்று தி.மு.க. தலைவர் கருணாநிதி கூறியுள்ளார்.

ஜனநாயக முற்போக்குக் கூட்டணியின் குறைந்தபட்ச செயற்றிட்டம் போன்று தி.மு.க.வின் தேர்தல் அறிக்கை அமையும் என்றும் அவர் கூறினார்.

திருச்சியில் எதிர்வரும் மார்ச் 3ஆம், 4ஆம், 5ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள தி.மு.க. மாநில மாநாட்டுப் பணிகளைப் பார்வையிட்ட பின்னர் அவர் மேலும் கூறியதாவது:-

தி.மு.க. தேர்தல் அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது. இப்பணி முடிவடைந்தால் மாநாட்டில் அறிக்கை வெளியிடப்படும் அல்லது பின்னர் வெளியிடப்படும்.

ஜனநாயக முற்போக்குக் கூட்டணிக்கு என்று குறைந்தபட்ச செயற்திட்டம் எதுவும் வெளியிடப்படமாட்டாது. ஆனால், தி.மு.க. தேர்தல் அறிக்கை அதுபோன்று அமையும். கூட்டணியில் உள்ள அனைத்துக் கட்சிகளும் ஏற்றுக்கொள்ளும் வகையில் இந்த அறிக்கை இருக்கும்.

தமிழகத்தில் சுனாமி நிதியில் நடைபெற்ற முறைகேடுகள் குறித்து விசாரணை வேண்டும் எனக் கோரி மத்திய அரசுக்குக் கடிதம் அனுப்பியுள்ளோம்.

போலி வாக்காளர் பதிவுப் பிரச்சினை, தேர்தல் ஆணையமும் தமிழக அரசியல் கட்சிகளும் விளையாடும் சடுகுடு விளையாட்டு போன்றுள்ளது.

ஏற்கனவே 13 லட்சம் போலி வாக்காளர்களை சேர்த்தது குறித்து புகார் தெரிவித்தோம். யாராக இருந்தாலும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரியிருந்தோம். ஆனால், இது கிடப்பில் போடப்பட்டது. தற்போது எழுந்துள்ள போலி வாக்காளர்கள் பிரச்சினை குறித்து புது டில்லியிலிருந்து அதிகாரிகள் அனுப்பப்பட்டுள்ளனர். என்ன நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்பதைப் பார்க்கவேண்டும்.

ஈழத்தமிழர்களுக்கு எப்போதும் எங்கள் இதயத்தில் இடம் உண்டு; அவர்கள் குறித்த கவலை உண்டு.

இடைத்தேர்தலில் எதிர்க்கட்சிகள் தோல்வியுற்றால், பொதுத் தேர்தலில் தோற்கும் எனக் கூற முடியாது. இதற்கு பல முன்னுதாரணங்கள் உள்ளன.

இஸ்லாமியர்களுக்கு இட ஒதுக்கீடு வழங்கும் வகையில் அரசியல் சட்டம் திருத்தப்படவேண்டும் என்பதே தி.மு.கவின் நிலை. இது குறித்து மத்திய அரசைத் தொடர்ந்து வலியுறுத்துவோம். மத்திய அரசின் செயற்பாடுகள் குறித்து கம்யூனிஸ்ட் கட்சிகள் கூறும் கருத்துகள் மத்திய அரசைப் பலவீனப்படுத்தாது; வலுப்படுத்தவே செய்யும்.

2001ஆம் ஆண்டு தேர்தலில் அ.தி.மு.க 140 தொகுதிகளில் போட்டியிட்டது. நாங்கள் ஓரளவுக்கு இடத்தைக் குறைத்துக்கொண்டு கூட்டணிக் கட்சிகளுக்கு இடம்தர வழிவகை செய்வோம் - என்று கருணாநிதி தெரிவித்தார். (ஐ)

நேபாள மன்னரின் சமரச அழைப்பு: அரசியல் கட்சிகள் நம்பத்தயாரில்லை

காத்மண்டு,பெப்.23

நேபாளத்தில் அமைதியும் வளர்ச்சியும் ஏற்பட சமரசம் காண்போம். மீண்டும் அரசியல் நடவடிக்கைகளைத் தொடங்குங்கள் என்று மன்னர் ஞானேந்திரர் விடுத்த அழைப்பை அரசியல் கட்சிகள் நம்பத் தயாராகவில்லை.

'உண்மையிலேயே சமரசம் விரும்பி இப்படி அழைக்கவில்லை. சர்வதேச சமூகத்தை ஏமாற்றவும், தன்னுடைய சர்வாதிகார ஆட்சியின் பிடியை இறுக்கிக்கொள்ளவுமே இப்படி அறிக்கைவிட்டிருக்கிறார் மன்னர்' என்று அரசியல் கட்சிகள் கருதுகின்றன.

'மன்னரின் அழைப்பு மேலோட்டமாக இருக்கிறது. தன்னுடைய எதேச்சாதிகார ஆட்சியை உறுதிப்படுத்திக்கொள்ளவே இப்படி அழைத்துள்ளார்' என்று நேபாள கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலர் மாதவகுமார் நேபாள் கருத்துத் தெரிவித்தார்.

'மாவோயிஸ்டுகளும் 7 கட்சி அரசியல் ணியும் நேபாளத்தில் அமைதியை ஏற்படுத்த 12 அம்சத் திட்டங்களைப் பேசிக் கருத்தொற்றுமையை எட்டியுள்ளனர். மன்னர் அதுபற்றி கருத்து ஏதும் தெரிவிக்கவில்லை.

'மன்னர் தனது அதிகாரப் பதவியை விட்டு விலகத் தயாராக இல்லாமல் இப்படி அர்த்தமற்ற அழைப்புகளை விடுப்பதால் சமரசம் ஏற்பட்டுவிடாது' என்று மாதவகுமார் நேபாள் தெரிவித்தார். மக்கள் ஆட்சியை மன்னர் ஏற்கும்வரை தங்களுடைய போராட்டம் தொடரும் என்றும் குறிப்பிட்டார். ஜனநாயகத்துக்காகப் போராடுகிறவர்களுக்காக அல்ல, மன்னரின் செயலை ஆதரிப்பவர்களுக்குத்தான் அந்த அழைப்பு என்று நேபாளி காங்கிரஸ் (ஜனநாயகம்) பொதுச் செயலர் பிரகாஷ் மான் சிங் குறிப்பிட்டார். இதே கருத்தை வேறு கட்சிகளின் தலைவர்களும் தெரிவித்தனர்.

நேபாள அமைச்சரவைத் தலைவர் பதவியிலிருந்து மன்னர் உடனே ராஜினாமா செய்ய வேண்டும். நேபாள நாட்டு அரசியல் சட்டப்படி அவர் அந்தப் பதவியை வகிக்க இடமே இல்லை என்று அரச குடும்பத்தைச் சேர்ந்தவரும் மூத்த ராஜதந்திரியுமான கேஷர்ஜங் ராய்மாஜி குறிப்பிட்டார். அதே சமயம் சமரசம் காண மன்னர் விடுத்த அழைப்பை அரசியல் கட்சிகள் ஏற்க வேண்டும் என்றார்.

நேபாள இராணுவத்தில் முதல் முறையாக 68 பெண் அதிகாரிகள் பணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். பக்தபூர் என்ற இடத்தில் கடந்த திங்கட்கிழமை இதற்காக நடந்த நிகழ்ச்சியில் 68 பெண் அதிகாரிகளும் 147 ஆண்களும் 2ஆம் லெப்டினென்டுகளாக இராணுவத்தில் சேர்க்கப்பட்டனர். இதே வேளை மக்வான்பூர் மாவட்டத்தில் சரிகேட் என்ற இடத்தில் மாவோயிஸ்டுகள் எடுத்துச்சென்ற குண்டு வெடித்தது. அதை எடுத்துச்சென்ற பெண் தொண்டர் உட்பட 3 பேர் அங்கேயே இறந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணவில்லை

12ஆம் வட்டாரம், புங்குடுதீவைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் கொழும்புத்துறையை வதிவிடமாகக் கொண்டவருமான ஆ.கிருஸ்ணபிள்ளை (வேலுப் பிள்ளை) என்பவரைக் கடந்த ஒரு மாத காலமாகக் காணவில்லை. இவரைக் கண்டவர்கள் கீழ் குறிப்பிட்ட முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

தகவல்: கிருஸ்ணபிள்ளை பத்மநாதன்,
இல.5, உடையார் ஒழுங்கை, பழம் றோட், யாழ்ப்பாணம்.
T.P.: 021 4590248

(47135)(32-17)

மரண அறிவித்தல்கள்

கந்தையா தர்மலிங்கம்

(ஒய்வுபெற்ற MLT)

கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா தர்மலிங்கம் நேற்று (22.02.2006) புதன்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

C.C.T.M லேன்,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில். (47136)(32-17)

தகவல்:
விஜயகுமார் (மருமகன்),
இந்துமதி (மகள்).

முத்துக்குமாரு கனகசபை அருளானந்தம்

இந்துக் கல்லூரி வீதி, வடலியடைப்பைப் பிறப்பிடமாகக் கொண்டிருந்தவரும் தற்போது கனடாவில் வசித்தவருமாகிய க.அருளானந்தம் 21.02.2006 இல் காலமானார்.

அன்னார் யா/பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி ஸ்தாபகர் க.குமரேசு (ஓவசியர்) அவர்களின் பேரனும் காலஞ்சென்ற கனகசபை - அன்னம் தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும் வல்வெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட செல்வநாயகி அம்மாவின் பாசமிகு கணவரும் அருள்யோகன் (கனடா), புவனேந்திரன் (பிரான்ஸ்), மகேந்திரன் (பிரான்ஸ்), விஜி (பிரான்ஸ்), தயா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற பரமேஸ்வரி மற்றும் பரமநாதன், தனபாக்கியலட்சுமி (தனம்), தங்கலட்சுமி ஆகியோரின் அன்பு அண்ணனும் காலஞ்சென்றவர்களான செல்வரத்தினம், இராசரத்தினம், K.இராசரத்தினம் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.02.2006) வெள்ளிக்கிழமை கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அருள்யோகன்,
கனடா.
T.P.: 416264082 (47141)(32-17)

தகவல்:
க.பரமநாதன் (சகோதரர்),
க.கந்தசாமி.

'ஞானச்சுடர்' சஞ்சிகை வெளியீடு

வடமராட்சி,பெப்.23

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் மாதாந்த வெளியீடான 'ஞானச்சுடர் ஆத்மீக சஞ்சிகையின் மாசி மாத இதழ் வெயியீட்டுவிழா நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெறும்.

சஞ்சிகையின் வெளியீட்டுரையை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி ஆசிரியர் துரை கணேசமூர்த்தியும், வெளியீட்டுரையை வசாவிளான் மத்திய மகா வித்தியாலய ஆசிரியர் செ.பரமேஸ்வரனும் நிகழ்த்துவார்கள். (த-173)

வீதி திருத்தம்

வடமராட்சி,பெப்.23

கடந்த 20 வருடங்களுக்கு மேலாக திருத்தப்படாதிருந்த குடத்தனை - அம்பன் வீதி பல இலட்சம் ரூபா செலவில் திருத்தப்பட்டு வருகின்றது.

பருத்தித்துறை - மருதங்கேணி பிரதான வீதியில் இடை நடுவில் உள்ள இவ் வீதியின் 7ஆவது மைல் கல் தொடக்கம் 9ஆவது மைல் கல் வரையிலான வீதியே இவ்வாறு வீதி அபிவிருத்தித் திணைக்களத்தினால் திருத்தப்பட்டு வருகிறது. (த-173)

DAIDO

எங்கள்டம் தாராளமாக Daido, Yamato, Honda, Yamaha, Bajaj, Suzuki, மற்றும் எல்லா சீன தயாரிப்புகளுக்கு பொருத்தும் உதிரிப்பாகங்கள் வேண்டிய அளவில் கிடைக்கும்

Koyo
DAIDO உதிரிப்பாகங்கள் YAMATO

செலென்டிப் மோட்டர் என்டர்பிறைஸ் (பிரைவேட்) லிமிட்டெட்
60B, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை கொழும்பு- 10
தொலைபேசி: 01-2341580-1, 2438779
பெக்ஸ்: 01- 2454608, 2438425
E-mail: zme@sit.lk

துயர் பகிர்கின்றோம்

போதகர் M.M. இன்பரூபன்

(சீயோன் தேவாலயம், யாழ்ப்பாணம்)

அவர்கள் (19.02.2006) இல் காலமாகிய செய்திகேட்டு அதிர்ந்து போயுள்ளோம். அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன், எமது கண்ணீரையும் காணிக்கையாக்குகின்றோம்.

மயிலிட்டித்துறை,
கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்,
எரிஞ்சம்மன் கோயிலடி, வியாபாரி மூலை,
பருத்தித்துறை.

(47143)(32-17)

21 ஆண்டு கால இணையற்ற பயிற்சியகம்

கலாலயா

பயிற்சியகம்
மணிக்கூண்டு வீதி, யாழ்ப்பாணம்.
(பெருமாள் கோயிலுக்கு அருகில்)

இந்த ஆண்டிற்கான 2ஆவது பிரிவு ஆரம்பமாகிறது

மகளிருக்கான துரித ஒரு மாத/3 மாதப் பயிற்சிகள்

- கேக் ஐஸிங் (24 வகையான கேக் அமைப்புகளில் சகலவிதமான ஐஸிங் முறைகள்) மற்றும் மாச்சீனி மலர்கள் செய்தல்.
- உணவு தயாரித்தல் (மேலைத்தேச, கீழைத்தேச உணவுகள், சிற்றுண்டிகள்)
- கூந்தல் அலங்காரம் (20 இற்கும் மேற்பட்ட கொண்டைகள் போடுதல்)
- Fabric Painting (துணிகளில், சேலையில், கண்ணாடியில் வர்ணந்தீட்டுதல்) ✱ பூவேலை ✱ கைவேலை
- அடிப்படைத் தையல் தெரிந்தவர்களுக்கான சாறிபிளவுஸ் (Saree blouse) வெட்டித்தைக்கும் முறை
- 6 மாத கால உடை தயாரித்தல் (தையற்கலை) பயிற்சி (குழந்தைகள், சிறுவர், மகளிருக்கான ஆடைகள் தைத்தல், பூப்போடுதல்)

3 நாள்களுக்கான அடிப்படை FACIAL முக அழகுக்கலையும், மணப்பெண்களை அலங்கரிக்கும் முறையும் வித்தியாசமான முறைகளில் 4 விதமாக சேலை அணியும் வகுப்புகளும் நடைபெறவுள்ளன.

புதிய கிழமை நாள் வகுப்புகள் ஆரம்பம் : 01.03.2006
புதிய சனி - ஞாயிறு வகுப்புகள் ஆரம்பம் : 04.03.2006

மேலும் விவரங்களை பிற்பகல் 2.30 மணி வரை நேரில் அறிந்துகொள்ளலாம். இயக்குநர்.

மரண அறிவித்தல்

போதகர் M.M. இன்பரூபன்

(சீயோன் தேவாலயம், யாழ்ப்பாணம்)

கொழும்பைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சீயோன் சபையின் சிரேஷ்ட உதவிப் போதகரான கர்த்தரின் திராட்சைத் தோட்டத்தின் பணியாளன் போதகர் M.M. இன்பரூபன் அவர்கள் 19.02.2006 ஞாயிற்றுக்கிழமை பரலோகத்தின் பரமனிடம் பரமேறிச் சென்றார்.

அன்னார் கிறிஸ்ரின் சியாமளாவின் அன்புக் கணவரும் கெட்ரூரா, டெபோரா ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற S.J.A. மார்டீன்- திருமதி C.F மார்டீன் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற எட்வின் மரியாம்பிள்ளை-திருமதி சந்திரா மரியாம்பிள்ளை தம்பதியரின் மருமகனும் மரீனா, இதயரூபன், இன்ரிகா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ரதனி - ஜெகன், அன்ரன் - மஞ்சு, ரவி - கோகிலா, சுரேஷ்-பிரதீஷா, மித்திரன் - காயத்ரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

இவரின் நல்லடக்க ஆராதனை நாளை (24.02.2006) வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, மு.ப.11 மணிக்கு இறுதி அஞ்சலிக்காக சீயோன் தேவாலயத்திற்கு (24, இராமையாச் செட்டியார் ஒழுங்கை, யாழ்ப்பாணம், பழைய O.P.D. முன்பாக) எடுத்துச் செல்லப்பட்டு, பின்னர் நல்லடக்கம் கானான் சேமக்காலையில் (இராஜ வீதி, கோப்பாய்) நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தயவாய் ஏற்றுக் கொள்ளவும்.

129, பிரதான வீதி,
யாழ்ப்பாணம். (47139)(42-32-17)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம்
11.11.1927

மறைவு
26.01.2006

அமரர் கு.வி.மகாலிங்கம்

கனடாவில் கடந்த 26.01.2006 வியாழன் அன்று சிவபதமெய்திய எங்கள் தந்தையின் மறைவுச் செய்திகேட்டு நேரிலும் தொலைபேசி மூலமும்அனுதாபந் தெரிவித்தோருக்கு எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நாளை (24.02.2006) வெள்ளிக்கிழமை பிற்பகல் 12.30 மணிக்கு மீசாலை வெள்ளை மாவடிப்பிள்ளையார் ஆலயத்தில் நடைபெறவுள்ள ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சாவகச்சேரி வடக்கு,
மீசாலை. (47142) (39-32-17)

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

விளையாட்டுத்துறையை மேம்படுத்த கிளிநொச்சியில் கல்லூரி அமைக்க ஏற்பாடு

லண்டன் தமிழ்ப் பாடசாலைகளின் விளையாட்டுச் சங்கத்தின் உதவியுடன்

யாழ்ப்பாணம்,பெப்.23

தமிழர் தாயகத்தில் விளையாட்டுத் துறையை மேம்படுத்தும் நோக்கோடு கிளி நொச்சியில் விளையாட்டுக் கல்லூரி ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளைத் தமிழ்ப் பாட சாலைகள் விளையாட்டுச் சங்கம் - ஐக்கிய இராச்சியம் முன்னெடுத்து வருகின்றது.

தமிழீழப் பிரதேசத்தில் விளையாட்டுத் துறையை மேம்படுத்த வேண்டும் என்பது விளையாட்டு வீரர்களினதும் நிர்வாகிகளின தும் நீண்டகாலக் கனவு. இதற்கு விளை யாட்டு வீரர்களுக்குப் போதிய பயிற்சிகளும் ஆலோசனைகளும் வழங்கப்படவேண்டிய தேவையுள்ளது.

இத்தேவையை நிறைவுசெய்யும் வகை யில் தமிழீழத்தில் அதாவது கிளிநொச்சி யில் விளையாட்டுக் கல்லூரி ஒன்று அமைக் கத் திட்டமிடப்பட்டுள்ளது.

கல்லூரி அமைப்பது தொடர்பான ஊட கத்துறை மாநாடொன்றைத் தமிழ்ப் பாட சாலைகள் விளையாட்டுச் சங்கம் - ஐக்கிய இராச்சியம் நடத்தவுள்ளது.

இம்மாநாடு நாளைமறுதினம் சனிக் கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு லண்டனில் நடைபெறவுள்ளது. (3-202)

சென்.ஜோன்ஸ் – சென்.பற்றிக்ஸ் வருடாந்த மோதல் இன்றுமுதல்

குருநகர்,பெப்.23

யாழ். சென்.பற்றிக்ஸ் கல்லூரிக்கும் யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரிக்கும் இடை யிலான வருடாந்த கிரிக்கெட் போட்டி நாளை வெள்ளிக்கிழமையும் மறுநாளும் யாழ். சென்.பற்றிக்ஸ் கல்லூரியின் ஆயர் தியோகுப்பிள்ளை விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது. (3-51)

மெய்வன்மைப் போட்டிகள்

கரவெட்டி,பெப்.23

வடமராட்சி மத்தி பெண்கள் பாடசாலை யின் இல்லங்களுக்கு இடையேயான மெய் வன்மைப்போட்டிகள் எதிர்வரும் சனிக் கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன.

பாடசாலை அதிபர் திருமதி வி.சிவகுமா ரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக முகாமைத் துவ பீடத் தலைவர் திருமதி தேவரஞ்சினி சிவாஸ்கரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (3-70-203)

*** *** ***

நல்லூர்,பெப்.23

நெடுந்தீவு மேற்கு மங்கையர்க்கரசி வித்தியாலயத்தின் வருடாந்த மெய்வன் மைப் போட்டிகள் எதிர்வரும் சனிக்கிழமை பி.ப. 2.30 மணிக்கு பாடசாலை அதிபர் கோ. பத்மநாதன் தலைமையில் நடைபெறும்.

நெடுந்தீவு மேற்கு வ.கந்தையா, க. கோவிந்தபிள்ளை, க.பாலசுந்தரம், இ.குமார சாமி ஆகியோரால் வழங்கப்பட்ட காணி யில் அமைக்கப்பட்ட புதிய விளையாட்டு மைதானத்தில் முதல் தடவையாக நடை பெறவுள்ள இப்போட்டியில் பிரதம விருந் தினராக நெடுந்தீவு பலநோக்குக் கூட் டுறவுச் சங்கத் தலைவர் சு.கோபாலசிங் கமும் கௌரவ விருந்தினராக நெடுந்தீவு கோட்டக் கல்வி அதிகாரி க.அரசரத்தின மும் கலந்துகொள்வர். (3-111)

*** *** ***

யாழ்ப்பாணம்,பெப்.23

கரணவாய் மகா வித்தியாலயத்தின் இல் லங்களுக்கு இடையேயான வருடாந்த மெய் வன்மைப் போட்டிகள் நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்குப் பாட சாலை மைதானத்தில் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்விற்குப் பிரதம விருந்தினராக வடமராட்சி மின்சாரசபை அத்தியட்சகர் பி. ராமலிங்கமூர்த்தியும் சிறப்பு விருந்தினராக கரவெட்டி வட்டாரக் கல்வி அதிகாரி கே. அம்பலவாணரும் கலந்துகொள்வர். (3-203)

உதைபந்தாட்டப் பயிற்சிக்கு யாழ்ப்பாணத்திலிருந்து இருவர்

யாழ்ப்பாணம்,பெப்.23

ஆசிய உதைபந்தாட்ட சம்மேளனத்தின் '5ஆவது பி - பிரிவு' சான்றிதழ் பயிற்சி நெறிக்கு யாழ். மாவட்டத்திலிருந்து 2 பயிற்சியாளர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ள னர்.

பருத்தித்துறை வீக்கைச் சேர்ந்த பயிற்சி யாளர்களான பி.முகுந்தன், லக்ஸ்மிஅனுர காந்தன் ஆகிய இருவருமே இப்பயிற்சி நெறிக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் 17ஆம் திகதி தொடக்கம் மே மாதம் 7ஆம் திகதிவரை இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் தேசிய உதைபந்தாட்டப் பயிற்சி நிலையத் தில் மேற்படி சான்றிதழ் பயிற்சி நடைபெற வுள்ளது.

(3-190-202)

சிறுவர் விளையாட்டுக் கழகங்களுக்கு சீருடைகள் வழங்கப்பட்டன

கிளிநொச்சி,பெப்.23

வடமராட்சி கிழக்கில் ஆழிப்பேரலை யால் பாதிக்கப்பட்ட இடைத்தங்கல் முகாம் களில் உள்ள 17 சிறுவர் விளையாட்டுக் கழ கங்களுக்குச் சீருடைகள் வழங்கப்பட்டுள்ளன.

வடமராட்சிப் பொதுவிளையாட்டு மைதா னத்தில் அண்மையில் எஸ்.றொசாரியோ தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வடமராட்சி கிழக்கு இளையோர் செயற் பாட்டு நிறுவன இணைப்பாளர் ரங்கன், இளையோர் செயற்பாட்டு நிறுவனப் பணிப் பாளர் விஜி, வடமராட்சி கிழக்கு காவல் பணிமனைப் பொறுப்பாளர் சசிக்குமார் ஆகி யோர் விளையாட்டுக் கழகங்களுக்கான சீருடைகளை வழங்கிக்கௌரவித்தனர்.

இந்த விளையாட்டுக் கழகங்கள் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் நிதியுதவியுடன் இளையோர் செயற்பாட்டு நிறுவனத்தால் கடந்த வருடம் அமைத்துக்கொடுக்கப்பட் டிருந்தன. (3-203)

உடுவில் தெற்கு நிலா சனசமூக நிலையத்தின் 4ஆம் ஆண்டு நிறைவுவிழாவும் மெய் வன்மைப்போட்டியும் கடந்த மாதம் 14ஆக் திகதி நிலைய முன்றிலில் இடம்பெற்றன. நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட தேசிய சேமிப்பு வங்கியின் மானிப்பாய் கிளை முகாமையாளர் சச்சிதானந்தம் உரை நிகழ்த்துவதைப் படத்தில் காணலாம். (3-13)

நல்லூர் பிரதேச விளையாட்டுவிழா அணி ஒழுங்கு நாளை நடைபெறும்

யாழ்ப்பாணம்,பெப்.23

நல்லூர் பிரதேச செயலக பிரிவின் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையேயான விளையாட்டுப் போட்டிக்கான அணி ஒழுங்கு தெரிவு நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் நல்லூர் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற வுள்ளது.

இதுவரையில் விண்ணப்பங்களை ஒப். படைக்காத கழகங்கள் நாளை வெள்ளிக் கிழமைக்கு முன்னர் தமது விண்ணப்பங் களை நல்லூர் பிரதேச செயலகத்தில் ஒப் படைக்குமாறும் -

நாளை நடைபெறும் அணி ஒழுங்கு தெரிவிற்குத் தங்களது கழகத்தின் ஒரு பிரதி நிதியை அனுப்பிவைக்குமாறும் - விளை யாட்டு உத்தியோகத்தர் எஸ்.விஜிதரன் கேட் டுள்ளார். (3-190)

ஸ்ரான்லியை வென்றது சென்.பற்றிக்ஸ் அணி

யாழ்ப்பாணம்,பெப்.23

யாழ். மாவட்டப் பாடசாலைகளின் 19 வயது அணிகளுக்கு இடையில் நடைபெற்று வரும் சிநேகபூர்வ கிரிக்கெட் போட்டித் தொடரில் சென். பற்றிக்ஸ் கல்லூரியும் ஸ்ரான் லிக் கல்லூரியும் மோதிய ஆட்டத்தில் சென். பற்றிக்ஸ் கல்லூரி 140 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென்.பற் றிக்ஸ் கல்லூரி அணி சகல விக்கெட்டுக்களை யும் இழந்து 108 ஓட்டங்களைப் பெற்றது.

எம்.கே.மனோஜ் 23 ஓட்டங்களையும் ஆர்.பி.றெக்ஸ்ஸன் 26 ஓட்டங்களையும் கொலின் ஆட்டம் இழக்காமல் 13 ஓட்டங் களையும் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

சுரேஸ் 23 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுகளையும் யதீஸ் 28 ஓட்டங் களைக் கொடுத்து 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஸ்ரான்லிக் கல்லூரி அணி சகல விக்கெட்டுகளையும் இழந்து 125 ஓட்டங்களைப் பெற்றது.

சியாம்சன் 62 ஓட்டங்களையும் சுரேஸ் தன் 18 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

கொலின் 26 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுகளையும் ஜக்சன் 24 ஓட்டங் களைக் கொடுத்து 4 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர். 2ஆவது இன்னிங்ஸில் துடுப் பெடுத்தாடிய சென். பற்றிக்ஸ் கல்லூரி 6 விக் கெட்டுகளை இழந்து 237 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை இடைநிறுத்தியது.

ஜெயந்திரன் 65 ஓட்டங்களையும் லுட் சன் 51 ஓட்டங்களையும் மனோஜ் 29 ஓட் டங்களையும் ஜனன்ராஜ் 28 ஓட்டங்களை யும் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

சியாம்சன் 50 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார். 2ஆவது இன் னிங்ஸில் துடுப்பெடுத் தாடிய ஸ்ரான்லிக் கல்லூரி அணி சகல விக்கெட்டுகளையும் இழந்து 80 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

கிருஸ்ணா 27 ஓட்டங்களையும் யதீஸ் 17 ஓட்டங்களையும் பெற்றனர்.

விதுபாலா 10 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுக்களையும் றெக்னே 32 ஓட் டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களை யும் வீழ்த்தினர். (3-190)

உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி முடிவு

யாழ்ப்பாணம்,பெப்.23

யாழ். கல்வி வலயத்துக்குட்பட்ட பாட சாலைகளின் 17, 19 வயது அணிகளுக்கு இடையில் நடத்தப்பட்ட உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் முடிவுகள் வெளியாகி யுள்ளன.

வெற்றிபெற்ற அணிகளின் விவரம் வருமாறு:-

17 வயதுப் பிரிவு

சென்.பற்றிக்ஸ் கல்லூரி, சென்.ஜேம்ஸ் மகா வித்தியாலயம், யாழ். மத்திய கல்லூரி.

19 வயதுப் பிரிவு

யாழ். மத்திய கல்லூரி, நாவாந்துறை றோமன் கத்தோலிக்க பாடசாலை, கோப் பாய் கிறிஸ்தவக் கல்லூரி. (3-190)

ஹொக்கிப் போட்டி

யாழ்ப்பாணம்,பெப்.23

வடக்கு -கிழக்கு மாகாண விளையாட் டுத் திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ். மாவட்டச் செயலக விளையாட்டவை நடத்தும் மாவட்ட மட்டத்திலான ஹொக் கிப் போட்டிகள் நாளை மறுதினம் சனிக் கிழமை காலை 8.30 மணிமுதல் வடம ராட்சி திக்கம் மைதானத்தில் இடம்பெற வுள்ளன என போட்டிக் குழுவினர் தெரி வித்துள்ளனர். (3-190)

கிரிக்கெட் ஆட்டம்

யாழ்ப்பாணம்,பெப்.23

யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் யாழ். மத் திய கல்லூரிக்கும் இடையேயான - 19 வயதிற்குட்பட்டோருக்கான - சிநேகர்பூர்வ கிரிக்கெட் ஆட்டம் எதிர்வரும் சனி, ஞாயிறு தினங்களில் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.(3-190)

றோஸ் இல்லம் முதலிடம் பெற்றது

குருநகர்,பெப்.23

சென். ஜோண் பொஸ்கோ வித்தியால யத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியில் றோஸ் இல்லம் 170 புள்ளி களைப் பெற்று முதலாமிடத்தைப் பெற்றது.

பாடசாலையின் திறந்த வெளியரங்க முன்றிலில் அதிபர் அருட்சகோதரி எம்.ஜீவந்தி தலைமையில் போட்டிகள் நடைபெற்றன.

இந்த நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சத்தியசீலன், அவரது துணைவியார் விரி வுரையாளர் திருமதி அனுசியா சத்திய சீலன் ஆகியோர் பிரதம விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர்.

யாழ். ஆயரின் நிதிப் பொறுப்பாளர் வண.பிதா றெஜி இராஜேஸ்வரன் அடி களார் சிறப்பு விருந்தினராகவும் பேராத னைப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரை யாளர் எஸ். சாந்தன் கௌரவவிருந்தின ராகவும் கலந்துகொண்டனர்.

இவ்விளையாட்டுப் போட்டியில் 2ஆம் இடத்தை 118 புள்ளிகளைப் பெற்று சிவப்பு, மஞ்சள் ஆகிய இரு இல்லங்களும் பெற்றுக்கொண்டன. 111 புள்ளிகளைப் பெற்ற பச்சை இல்லம் கடைசி நிலைக்குத் தள்ளப்பட்டது. தரம் ஒன்று தொடக்கம் தரம் 5 வரையான ஆரம்ப வகுப்புகளை மட்டும் கொண்ட இவ்வித்தியாலய விளை யாட்டுப் போட்டியில் தரம் ஒன்று வகுப்பு மாணவர்களும் இம்முறை நடைபெற்ற போட்டியில் கலந்துகொள்ள அனுமதிக்கப் பட்டனர். தரம் 2 இலிருந்து தரம் 5 வரையான மாணவர்களே இல்ல மெய்வன் மைப் போட்டியில் கலந்துகொள்வது குறிப் பிடத்தக்கது. (3-51)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

World Vision

World Vision is an International, Christian humanitarian, relief and development agency working in more than 100 countries in the World. We are a "Partnership" of more than 100 national entities and are in consultative status category II with the United Nations Economic & Social Council.

World Vision in Sri Lanka requires immediate engagement of suitable qualified candidates for the following positions.

Senior Engineers/Water and Sanitation Engineers (Jaffna/Mullaitivu)

The purpose of above position is to assist the development of water and sanita tion program at the district level and connecting it back at Zonal and National Office level. The district engineer will be deployed in the district and work with dist rict teams and local government to identify, implement, monitor and evaluate the Water & Sanitation needs /projects.

Must possess Degree in Civil Engineering/Public Health Engineering/Enviro nmental Science/Water Supply and Sanitation and have 3-5 years' experience in the development and relief arena, preferably within International NGO and AID agencies. Experience in project design, implementation, monitoring, evaluation and report writing.

Technical Officers/Assistants (Mullaitivu)

To implement the Shelter & infrastructure projects in the District under the guidance /supervision of the Senior Engineer and District Team Manager.

- Degree or Diploma in Civil Engineering
- Minimum 2 years of experience in Civil works projects

Health & Nutrition Officer (Jaffna), Health & Nutrition Monitors (Jaffna/Mullaitivu)

To work with the Health/Nutrition Coordinators in the implementation of the health and nutrition program in the district. The position requires an individual who is intimately familiar with the district, understands and has relations with the MOH system and authorities, is familiar with any district level MOH activities which are underway.

- Requires a degree in Nutrition or any other relevant field
- Ability to work in a team environment, Strong organizational and management skills
- Language skills in oral and written English
- Ability to oversee a large field based operation
- Sensitivity to the particular needs of women and small children
- Ability to foresee potential problems related to program operations and find solutions without needing direct guida nce from Health/Nutrition Team Leader.
- Understanding of Primary Health Care
- Holder of class D driver's license is an added advantage.

Supplementary Feeding Program Coordinator (Mullaitivu)

Supplementary Feeding is, the activities and processes, which aim to increase attendance and enrollment of pre-school children, and increase access to pre-school health services for tsunami-affected pre-school children. World Vision roles in this program activity includes provision of mid-morning meals at pre-schools, provision of cooking/eating utensils, provision of kitchens, food storage rooms, expansion of health-nutrition surveillance at school, provision of health inputs to school children, Health-Nutrition promotion program, and establishing vegetable gardens.

The purpose of this position is to implement all Supplementary Feeding components including community mobilization, community planning, proper targeting of beneficiary, preparation of activities in a timely manner, including approvals, training of teachers, procurement, storage, implementation, reporting, monitoring and impact assessment.

School Feeding Monitors (Jaffna/Mullaitivu)

To implement all School Feeding components including community mobilization, community planning, proper targetin g of beneficiary, implementation, reporting, monitoring and impact assessment. This position must ensure activities adhere strictly to the School Feeding Guidelines and World Vision values and policies.

Stakeholder Representative (Mullaitivu)

This position is essentially a champion for community needs and rights; to be a representative voice for the community in the design and implementation of the projects in the shelter, water & sanitation and infrastructure at a district level. To provide government/interagency liaison and coordination/representation support to the World Vision program at the district level. This position will consult with civil society and work closely with the national liaison coordinator to ensure grassroots' needs contribute to the national strategic approach of WV programs.

- University Degree in relevant field preferably in sociology, social work
- Community development understanding
- 3-5 years relief field experience
- Strong experience in community consultation, government relations, mainly district and provincial level Children's

Program Coordinator (Jaffna/Kilinochchi)

This position will Strengthen technical capacity on the field and ensure that a well-rounded Child Rights program is effectively implemented within the Zone keeping keep in mind program goals and to ensure co-ordination of World Vision's work with other agencies at a local level.

Knowledge, Skills and Abilities

Professional qualification in Social Work, Psychology, Community Development or related disciplines

- 2 - 5 years or more work experience in child rights, child protection, social work or community development or other related fields
- Good team player, ability to play a support role and also lead
- Passionate and committed about children's issues and field work
- Cross-cultural sensitivity, flexible, emotional maturity and physical stamina.
- Strong interpersonal skills.
- Able and willing to travel
- Knowledge of and adherence to the Child Protection, Red Cross and NGO Code of Conduct.
- Comply with World Vision's child protection policy and behavior protocols

Admin &Logistics Coordinator (Mullaitivu), Admin. Assistant (Jaffna/ Mullaitivu)

A very organized mature individual with experience in managing an office. Supervising other Admin. & Logistics staff. Be able to do multi tasks and make administrative decisions. He/She should ensure that all of the administrative requirements are met with very little disruption. Keeping track of all communications and providing operational support, Represents the program office on admin issues, To monitor, organize and supervise the transport, vehicle maintenance, purchasing, warehousing, and distribution of commodities to the target areas. To monitor the receipt of reports/documentation on the status and disposition of commodities from point of origin to end use, security, and other logistics. Ability to lead, plan and organize. Proven ability in relating with communities and local governmental authorities. Able to work in a harsh and demanding environment, as required. Able to travel extensively.

Keeping track of all communications. To develop and maintain effective information system, attendance, leave records, personal files, correspondences, giving IT support to the office etc. Experience in computer-networking, troubleshooting etc. Good team player, ability to play a support role and also to lead

Knowledge, Skills and Abilities for all positions

All candidates should also have at least 1 years' previous experience in a related field, ideally working with communities' and extremely trustworthy, as confirmed by reference checks.

Ability to perform field assignments and willingness to travel for long period of time in difficult terrain, harsh and demanding conditions. Candidates should also be willing to live and work in very difficult and security-risk areas.

Working Knowledge of Microsoft Word, Excel, Power Point & e-mail. Good interpersonal skills and cross-cultural sensitivity. Able to speak and write with a high standard of English and the local language.

World Vision Lanka offers attractive remuneration package, based on individual competence and skills. If you are a person who meets the above requirements and are willing to work with the poor and the oppressed, sometimes in difficult conditions, Please apply within a week of this advertisement with your CV, Contact No., Names and addresses of three non-related referees (of which one must be either your current employer or immediate past employer) to:

DIRECTOR-HUMAN RESOURCES DEVELOPMENT,
LANKA TSUNAMI RESPONSE TEAM
371, R A De Mel Mawatha, Colombo –03

OR for Jaffna Positions

World Vision

World Vision Lanka Tsunami Response Team
Human Resources Department (NorthernZone),
227, 3rd Cross Street, Jaffna. Fax : 0212229605

OR for Mullaitivu Positions

World Vision Lanka Tsunami Response Team
Neddunkerney Road, Mulliyavallai, Mullaitivu.

All offers of employment are made contingent upon the successful comple tion of all applicable background checks, including criminal record checks.

World Vision is committed to the protection of children and does not employ staff whose background is not suitable for working with children.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐ.தே.கவின் பொதுச் செயலாளராக எஸ்.பியைக் கொண்டுவர முயற்சி

கொழும்பு,பெப்.23

நீதிமன்ற அவமதிப்புக் குற்றத்திற்காகச் சிறைவாசம் அனுபவித்து இப்போது விடுதலையாகியிருக்கும் எஸ்.பி. திஸநாயக்கவை ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பதவிக்கு நியமிக்க தீவிர நடவடிக்கைகள் கட்சிக்குள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அறியவருகின்றது.

கட்சியின் அதிருப்திக் குழுவே இந்த நடவடிக்கையை முன்னெடுத்துச் செல்வதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அதிருப்திக் குழுவின் முக்கியஸ்தரும், எஸ்.பி. திஸநாயக்கவின் நெருங்கிய நண்பருமான ராஜித சேனாரத்னவே இந்த யோசனையை அதிருப்திக் குழுவிற்குள் கொண்டுவந்தார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

எஸ்.பி. திஸநாயக்க சிறைவாசம் அனுபவித்தபோது அவரது நாடாளுமன்ற உறுப்பினர் பதவி பறிபோனது அந்த வெற்றிடத்திற்கு ரேணுகா ஹேரத் நியமிக்கப்பட்டார். இப்போது எஸ்.பி. நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இழந்த நிலையில் இருக்கிறார் என்பதால் அவருக்குக் குறைந்தது கட்சியின் பொதுச்செயலாளர் பதவியையேனும் வழங்குவது மிகவும் பொருத்தமானதாக இருக்கும் என ராஜித தெரிவித்தார்.

இந்த யோசனையை ஏற்றுக்கொண்ட அதிருப்திக் குழுவினர் இதை நடைமுறைப் படுத்தும் செயலில் இறங்கியுள்ளனர். அடுத்த வாரமளவில் கட்சியின் உயர்மட்டக் குழுவிற்கு இந்த யோசனை உத்தியோகபூர்வமாகத் தெரிவிக்கப்பட ஏற்பாடாகி வருகின்றது.

இதை அறிந்த கட்சியின் உயர்மட்டம் இது தொடர்பாக மந்திராலோசனை நடத்தி வருவதாக அறியமுடிகின்றது. இருப்பினும் இந்த நிலையில் எஸ்.பி. திஸநாயக்கவுக்கு பொதுச்செயலாளர் பதவி வழங்கப்படலாம் என்றே கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (எ-க)

வேட்பு மனு நிராகரிப்பை எதிர்த்து வழக்கு தாக்கல்

வத்தேகம,பெப்.23

வத்தேகம நகரசபை தேர்தலுக்கான வேட்பு மனுவை சுயேச்சையாகச் சமர்ப்பித்த என். எம்.ஏவாகமகே என்பவர் தனது மனு நிராகரிக்கப்பட்டதை ஆட்சேபித்து கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுவொன்றை தாக்கல் செய்துள்ளார்.

தேர்தல்கள் ஆணையாளர், கண்டி தெரிவத்தாட்சி அலுவலகர் உட்பட ஒன்பது பேர் இந்த மனுவில் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

சுயேச்சையாகத் தாக்கல் செய்யப்பட்ட தனது மனு எவ்வித காரணங்களுமின்றி நிராகரிக்கப்பட்டுள்ளதாகவும் அதனை ஏற்றுக் கொள்ள சம்பந்தப்பட்டவர்களுக்கு உத்தரவிடுமாறும் அவர் தனது மனுவில் கோரிக்கை விடுத்துள்ளார். (எ-க)

ஐந்து தமிழ் .....

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்டிருப்பது யாழ். குடாநாடு ஆகும். அங்கு பல கிராமங்களிலிருந்து பொதுமக்கள் முற்றாக வெளியேற்றப்பட்டுள்ளனர். ஆயிரக்கணக்கான வீடுகள் பலவந்தமாக அபகரிக்கப்பட்டுள்ளன. மக்கள் தமது வயல் நிலங்களுக்கோ, மீன்பிடிக் கரையோரங்களுக்கோ, பாடசாலைகளுக்கோ, வழிபாட்டிடங்களுக்கோ செல்லமுடியாது தடுக்கப்பட்டுள்ளனர். மக்களின் சமூக, கலாசார வாழ்வைச் சிதைத்ததன் மூலம் ஆக்கிரமிப்புப் படைகளினால் தமிழ் மக்களுக்கு மிகப் பெரும் அநீதி இழைக்கப்பட்டிருக்கிறது.

'உயர் பாதுகாப்பு வலயத்தினால் ஏற்பட்ட மனித இழப்பு' என்ற தலைப்பிலான ஆவணம் ஒன்றை நாங்கள் இங்கு உங்களுக்குச் சமர்ப்பிக்கின்றோம். அது தமிழர் பிரதேசத்தில் சிங்கள இராணுவ ஆக்கிரமிப்பு தமிழ் மக்களின் வாழ்வில் ஏற்படுத்திய பாதிப்புக்களையும், விளைவுகளையும் விளக்கமான தகவல்களுடன் தெளிவுபடுத்துகின்றது.

உயர்பாதுகாப்பு வலயம் பற்றிய எமது புள்ளிவிவரங்களின்படி 28 ஆயிரத்து 830 வீடுகளில் இருந்து வீட்டு உரிமையாளர்கள் பலவந்தமாக வெளியேற்றப்பட்டுள்ளனர். ஏறத்தாழ 13 ஆயிரம் ஏக்கர் வளமான பண்ணைக் காணி பயன்படுத்த முடியாது தடுக்கப்பட்டுள்ளது.

அதி உயர் பாதுகாப்பு வலயங்கள் காரணமாக 20 ஆயிரம் குடும்பங்கள் அநாதைகளாக்கப்பட்டன. பாதிக்கப்பட்டோர் கடந்த ஒரு தசாப்த காலத்துக்கு மேலாக அகதி முகாம்களிலும், நலன்புரி நிலையங்களிலுமே தமது வாழ்க்கையைக் கழித்து வருகின்றனர்.

இவ்வாறு பலாத்காரமாக அதி உயர் பாதுகாப்பு வலயங்களின் பெயரால் ஆக்கிரமிக்கப்பட்ட பொதுச் சொத்துகளின் பரப்பளவு யாழ்ப்பாண நிலப்பரப்பில் 30 சதவீதமாகும். இங்கு வாழ்ந்து வந்த மக்களும் மீண்டும் தமது வீடுகளுக்கும், காணிகளுக்கும் செல்லமுடியாதபடி தடுக்கப்பட்டுள்ளனர். இதுவும் ஒரு அப்பட்டமான மனித உரிமை மீறல் செயலே.

தேசிய பாதுகாப்பு என்ற போர்வையில் அரசு மக்களை இவ்வாறு பலாத்காரமாக வெளியேற்றிய செயலை ஐ.நாவின் பல்வேறு மனித உரிமை அமைப்புகளும் மனித உரிமைகளை மீறும் செயல்கள் என்றே வன்மையாகக் கண்டித்திருந்தன. இவ்வாறு வாழ்விடங்களிலிருந்து மக்கள் வெளியேற்றப்படும் செயலை ஐ.நாவின் மனித உரிமைகள் சாதனங்கள், மக்களின் அரசியல், பொருளாதார, சமூக மற்றும் கலாசார விழுமியங்களுக்கும், உரிமைகளுக்கும் பெரும் தீங்கை விளைவிக்கும் குற்றச்செயல்களாகவே கருதுகின்றன.

பல்லாயிரக் கணக்கான குடும்பங்களின் இடம்பெயர்வுகளும், அகதி முகாம்களில் அவர்கள் அனுபவிக்கும் பரிதாபமான வாழ்க்கை முறையும் மனிதாபிமானத்திற்கு விடுக்கப்பட்ட சவால்களாகவே உள்ளன. ஆனாலும், பாதுகாப்புக் காரணங்களை அடிப்படையாக வைத்து இலங்கை அரசும், அதன் இராணுவ அதிகார பீடமும் இந்த மக்கள் அவர்களின் சொந்த இடங்களுக்கு திரும்பும் உரிமையை வழங்காது மறுத்து வருகின்றன. பாதுகாப்பு என்ற போர்வையில், இந்தப் பெரிய மனிதாபிமானப் பிரச்சினையை இலங்கை அரசு தொடர்ந்தும் அசட்டை செய்து பாராமுகமாக இருந்து விடக்கூடாது என்பதை இங்கு சுட்டிக் காட்ட விரும்புகிறோம். அதி உயர் பாதுகாப்பு வலயப் பிரச்சினைக்கு மேலும் காலம் தாழ்த்தாது தீர்வு காணப்பட வேண்டும். இதன் மூலம் இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்துவதற்கு வசதி செய்யப்பட வேண்டும். தமிழ்ப் பகுதிகளில் வாழ்கின்ற மக்களின் வாழ்க்கை இயல்புநிலைக்குத் திரும்புவதற்கும், அமைதியை நிலைநாட்டுவதற்கும் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டியது மிகப் பிரதானமானதாகும்.

யுத்த நிறுத்த உடன்படிக்கையின் செம்மையான அமுலுக்கு வேண்டிய ஒரு சில முக்கிய விடயங்களை இந்த அறிக்கை மூலம் சுருக்கமாகத் தொட்டுக் காட்டியிருக்கின்றேன்.

அடுத்து நாங்கள் கவனம் செலுத்த வேண்டிய அதி முக்கிய விடயம் மீன்பிடித் தொழிலை செய்வதற்கு விதிக்கப்பட்டிருக்கும் கடும் கட்டுப்பாடுகளும் அதன் விளைவாக மக்கள் படும் பாரிய கஷ்டங்களுமாகும். தமிழ் மீனவர் சமுதாயம் அனுபவிக்கும் கஷ்டங்கள் பற்றி விளக்கமாகச் சில தகவல்களை ஆவணங்கள் மூலம் நாங்கள் இங்கு முன்வைத்திருக்கிறோம். எமது பேச்சின் போது மீன்பிடிக்கட்டுப்பாட்டு விடயங்களை நாங்கள் ஆராய எண்ணியிருக்கிறோம்.

அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் எமது அரசியல்துறை உறுப்பினர்கள் சுதந்திரமாக நடமாடக் கூடிய விடயத்தைப் பற்றியே அடுத்து நான் இங்கு தெரிவிக்க விரும்புகிறேன்.

துணை ஆயுதக் குழுக்களின் வன்செயல் நடவடிக்கைகளின் விளைவாக, அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளிலிருந்து தமது அரசியல் துறை உறுப்பினர்களை விடுதலைப் புலிகளின் தலைமை விலக்கிக் கொண்டமையை நீங்கள் அறிவீர்கள். இந்த துணை ஆயுதப்படையினர் நிராயுதபாணிகளான எமது உறுப்பினர்களைத் தாக்கினார்கள். எமது அரசியல் அலுவலகங்கள் மீது குண்டுகளை வீசித் தாக்கினார்கள். அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் எமது அரசியல் துறையினர் செயல்பட வேண்டுமானால், துணை ஆயுதக் குழுக்களிடமிருந்து ஆயுதங்கள் களையப்பட்டு, தமிழ் பகுதிகளில் இயல்பு வாழ்க்கை திரும்ப வேண்டும்.

இறுதியாக நான் ஒன்றைச் சொல்லிவைக்க விரும்புகிறேன். அதாவது, யுத்த நிறுத்த உடன்படிக்கை பாரியளவில் மீறப்பட்டுள்ளது. இதற்கான பொறுப்பு முரண்பாட்டில் சம்பந்தப்பட்டிருக்கும் எமது இரு தரப்பாருடன், தமிழ்த் துணை ஆயுதக் குழுக்களுக்கும் உடையதாகும். இருந்தபோதும், நாங்கள் இரு சாராரும் ஒருவருக்கு ஒருவர் மாறிமாறி யுத்த நிறுத்த உடன்படிக்கையின் துஷ்பிரயோகங்கள் குறித்து குற்றச்சாட்டுகளைச் சுமத்தி ஒருவருக்கு ஒருவர் எரிச்சலூட்டிக் கொண்டிருப்பதால் அர்த்தமுள்ள பயன் எதுவும் கிடைத்துவிடப் போவதில்லை. அது எம் மத்தியிலுள்ள நல்லெண்ணச் சூழலுக்கு விஷம் பாய்ச்சியதாகிவிடும். மாறாக யுத்த நிறுத்த உடன்படிக்கையை ஸ்திரப்படுத்தி வலிமைப்படுத்த வேண்டும். அதற்கு ஆக்கபூர்வமான பேச்சுகளில் ஈடுபடுவதே புத்தி சாலித்தனமான செயலாகும்.

யுத்த நிறுத்த உடன்படிக்கையைப் பலப்படுத்துவதோடு சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்வதற்கு வேண்டிய அமைதியையும், இயல்பு நிலைமைகளையும் ஸ்திரப்படுத்தவேண்டும். இதுவே உகந்த நடைமுறைச் சாத்தியமான வழியாகும் என்ற என் கருத்துக்கு நீங்களும் உடன்படுவீர்கள் என்றே நான் நம்புகிறேன். [illegible] தனது நீண்ட உரையில் கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரண அறிவித்தல்கள்

திருமதி ஆறுமுகம் அன்னம்மா

புங்குடுதீவு, ஐந்தாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் முதலாம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஆறுமுகம் அன்னம்மா அவர்கள் நேற்றுமுன்தினம் (21.02.2006) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகத்தின் (ஆறுமுகம் தேநீர்ச்சாலை, சாவகச்சேரி) அன்பு மனைவியும் காலஞ்சென்ற தெய்வேந்திரம் மற்றும் சாரதாதேவி, சரஸ்வதி, திலகவதி, சிவலோகநாதன் (லண்டன்), சிவயோகவதி, சோமகலாவல்லி (பிரான்ஸ்), கேதீஸ்வரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.02.2006) வியாழக்கிழமை பி.ப. 4 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கா.நித்தியானந்தன்
(சித்திவிநாயகர் காஞ்சியம் பாழ்.) (47154) (54-16-49)
143 , சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். தகவல்: குடும்பத்தினர்.

கிருஷ்ணபிள்ளை சிறிமுருகன்

இமையாணன் மேற்கு, தூப்புலத்தைப் பிறப்பிடமாகவும் சுவிற்ஸர்லாந்தை வசிப்பிடமாகவும் கொண்ட கிருஷ்ணபிள்ளை சிறிமுருகன் அவர்கள் நேற்றுமுன்தினம் (21.02.2006 செவ்வாய்க்கிழமை சுவிற்ஸர்லாந்தில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கிருஷ்ணபிள்ளை -பவளத்தின்அன்பு மகனும் செல்வராணியின் அன்புக் கணவரும் மிதுலனின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற இராசம்மா மற்றும் புவனேஸ்வரி, மல்லியக் கண்டு (பவா) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்ற இராசர் அண்ணாச்சாமி மற்றும் பூரணம் ஆகியோரின் பாசமிகு மருமகனும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இமையாணன் மேற்கு, தூப்புலம்,உடுப்பிட்டி. (47148) (54-16-49) தகவல்: குடும்பத்தினர்.

தர்மலிங்கம் பிரதாபன்

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாவும் பெருங்குளம் சந்தி, சாவகச்சேரியை நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட தர்மலிங்கம் பிரதாபன் (20.02.2006) திங்கட்கிழமை இந்தியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம்-மீனாட்சி தம்பதியரின் மகனும் காலஞ்சென்ற யோகரத்தினம் -கனகம்மா தம்பதியரின் மருமகனும் நேசமலரின் கணவரும் லிங்கராஜ், விஜயராஜ் (லண்டன்), விமல்ராஜ், மோகன்ராஜ் (இந்தியா) ஆகியோரின் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.02.2006) வியாழக்கிழமை இந்தியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

48, புரூடிலேன், அரியாலை. (47155) (54-16-49) தகவல்: மு. சிவநாதன் (சிவம்)
T.P. 021 222 8279

திருமதி தங்கம்மா துரைசிங்கம்

சுன்னாகம் தெற்கைப் பிறப்பிடமாகவும் மட்டுவில் மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட தங்கம்மா துரைசிங்கம் அவர்கள் நேற்று (22.02.2006) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இளையதம்பி -சேதுப்பிள்ளை தம்பதியரின் மகளும் காலஞ்சென்ற துரைசிங்கத்தின் மனைவியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

சிவன் கோயிலடி, மட்டுவில் மத்தி, சாவகச்சேரி. (47146) (54-16-49) தகவல்: குடும்பத்தினர்.

31ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு 21-11-1920 இறப்பு 24-01-2006

அமரர்

நாகமுத்து நாகலிங்கம்

தந்தையின் மந்திரத்தால்
தரணியில் வாழ்ந்தோம் அப்பா!
உண்மையில் அன்பு கொண்டு
ஏற்றிய ஒளி விளக்காய் வாழ்ந்தீர்கள்
அப்பா எங்கே போனீர்கள்?

406, K. K. S. வீதி, யாழ்ப்பாணம். (47150) (54-16-49) தகவல்: மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.

கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

மண்ணில் 09.10.1940 விண்ணில் 24.01.2006

அமரர்

கந்தையா மகேஸ்வரன்

24.01.2006 அன்று சிவபதம் அடைந்த எங்கள் அன்புத் தந்தையின் அந்தியேட்டி கிரியை நிகழ்வுகள் இன்று (23.02.2006) வியாழக்கிழமை நண்பகல் 11.30 மணிக்கும் பி.ப. 3 மணிக்கும் இடையில் பம்பலப்பிட்டி ஆறாவது தொடர்மாடி சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறும்.அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் மரண செய்தி கேட்டு உடன் வந்து உதவியவர்களுக்கும், இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டு மலர்வளையங்கள், மலர்மாலைகள் சாத்தியும் தொலைபேசியிலும், தொலைநகலிலும் தபாலிலும் நேரிலும் வந்து துயரில் பங்கு கொண்டவர்களுக்கும் உதவி- ஒத்துழைப்புகள் வழங்கிய அனைவருக்கும் எமது இதயம் கனிந்த நன்றிகளை நவில்கின்றோம்.

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

25/3, விஜயசேகர வீதி, தெகிவளை, 0119208526, 0777879742 (F-48027) (54-16-49) தகவல்: மனைவி, மக்கள், சகோதரர்கள், மைத்துனர்கள், மைத்துனிகள், பெறாமக்கள்.

யுத்தநிறுத்த உடன்படிக்கையை புலிகள் போர் நடவடிக்கைக்கே பயன்படுத்தினர்

ஆரம்ப உரையில் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா குற்றச்சாட்டு

யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் வடக்கு - கிழக்குப் பகுதியில் விடுதலைப் புலிகளும் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர் எனினும் அதைத் தங்களது போர் நடவடிக்கைகளுக்காகவே பயன்படுத்தினர். அரசியல் பிரமுகர்களின் படுகொலைகளை நிகழ்த்தினர்.

- இவ்வாறு குற்றஞ்சாட்டினார் அரச சமாதானக் குழுவின் தலைமைப் பேச்சாளர் அமைச்சர் நிமால்சிறிபால டி சில்வா. நேற்று ஜெனீவாப் பேச்சு ஆரம்பமானதும் ஆரம்ப ஆற்றிய உரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான பேச்சுகளில் இது ஒரு முக்கிய மான கட்டம். அர்த்தமுள்ள யுத்தநிறுத்த ஒப்பந் தத்தின் அடிப்படையில் இலங்கையின் அனைத்து இனத்தவருக்கும் பயனளிக்கக்கூடிய அடிப் படையில் இப்பேச்சு அமைய வேண்டும்.

கௌரவமான அமைதி என்ற கொள்கையை முன்வைத்து, எமது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவு செய்யப்பட்டுள்ளார். ஸ்ரீ லங்காவின் பிரத மராக இருந்தவரான ரணில் விக்கிரம்சிங்கவுக் கும் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுக்கும் இடையே 2002ஆம் ஆண்டு எமது அரசமைப்புக்கும் சட்டத்திற்கும் முரணான யுத்த நிறுத்த ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. இது ஸ்ரீ லங்கா குடியரசின் இறையாண்மைக் கும், பிரதேச ஒற்றுமைக்கும் சேதம் ஏற்படுத் தக் கூடியது. தற்போதுள்ள பிரச்சினைக்குப் பேச்சுகளின் மூலம் தீர்வுகாண இந்த யுத்த நிறுத்த ஒப்பந்தம் ஒரு முதல்கட்ட நடவடிக்கையாக இருக்கும் என்று நாம் கருதுகிறோம்.

எமது அரச தலைவர் பொறுப்பேற்ற நாள் முதல் பல்வேறு சந்தர்ப்பங்களில் பேச்சுக்கு வருமாறு விடுதலைப் புலிகளுக்கு அழைப்பு விடுத்துள்ளார். பேச்சுத் தொடர்பில் அனைத் துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டி ஒரு இணக்கப் பாட்டை உருவாக்கியுள்ளோம். எமது வர லாற்றில் இத்தகைய இணக்கப்பாடு காணப் படுவது இதுவே முதன்முறையாகும். நாங்கள் எமது மக்களின் முழுமையான ஆதரவுடன் ஜெனீவாவுக்கு வந்துள்ளோம்.

இனப்பிரச்சினைக்கு கௌரவமான தீர்வு என்பதை முன்வைத்து 2005ஆம் ஆண்டு நவம் பர் மாதம் 17ஆம் திகதி எமது ஜனாதிபதியாக மஹிந்த ராஜபக்ஷ தெரிவு செய்யப்பட்டார். அவரது எண்ணங்களைப் பிரதிபலிக்கும் 'மஹிந்த சிந்தனை'யானது, தமிழீழ விடுதலைப் புலி களுடன் நேரடிப் பேச்சு நடத்துவதை வலி யுறுத்துகிறது. தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவருடன் நேரடிப் பேச்சுகளை நடத்தக் கூட அவர் தயாராக இருக்கிறார் என அறிவித்தார்.

ஆத்திரமூட்டும் செயற்பாடுகள் பல நிகழ்த் தப்பட்டபோதும் எமது அரச தலைவர் அமைதி முயற்சிகளில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டு, பெரும் பொறுமையைக் கடைப்பிடித்தார். இந்தப் பொறு மையானது எமது பலவீனம் அல்ல. அமைதியின் மீதான எமது ஈடுபாட்டை வெளிப்படுத்துவ தாக அமைந்தது. ஆத்திரமூட்டல் நடவடிக்கைகள் தொடரும் நிலையில், தொடர்ந்து உயிரிழப் புகள் ஏற்படும் நிலையில் யுத்த நிறுத்தம் என்பது அர்த்தமற்றதாகச் சீர்குலைந்துவிடும். இந்த நிலையில் உரிய தீர்வைக் காண்பதற்கு எமது தலைவர் புதிய அணுகுமுறையை மேற்கொள் கிறார். எமது அரசு பேச்சுகளை நடத்தவும் கேட் கவும் புதிதாகச் சிந்திக்கவும் முற்படுகிறது.

ஆசியாவில் நீண்டகாலம் ஜனநாயகம் நிலைத் திருக்கும் நாடு ஸ்ரீ லங்கா. கடந்த 65 ஆண்டு காலத்துக்கும் மேலாக எமது மக்கள் தமது பிரதி நிதிகளை அனைத்து இனக் குழுக்களிலிருந் தும் தெரிவு செய்துவருகின்றனர்.

சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள், மலாயர், பறங்கியர் உட்பட அனைத்து இன மக்களுக் கும் அனைத்துவிதமான உரிமைகளும் வழங் கப்பட்டிருக்கின்றன. எந்த ஒரு இனத்தவரும் தமது பிரதிநிதியைத் தெரிவு செய்யும் உரி மையை எமது அரசுமறுத்தது இல்லை.

2005ஆம் ஆண்டு ஸ்ரீ லங்கா ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்ற நாள் வருத்தத்திற்குரியது. குறிப்பிட்ட சில மாவட்டங்களில் பொதுமக் களை வாக்களிக்க விடாமல் தமிழீழ விடுதலைப் புலிகள் தடுத்தனர். கடந்த ஏப்ரல் 2004ஆம் ஆண்டுத் தேர்தலின் போதும் பல இடங்க ளில் தேர்தல் முறைகேடுகள் நடந்தன என்பதைச் சர்வதேச சமூகத்தின் கண்காணிப்பாளர்கள் உறுதிப்படுத்தினர். இவை அனைத்தும் ஜன நாயகத்தை நிராகரிக்கும் விடுதலைப் புலிக ளின் செயற்பாடுகள். இந்நிலையில் அர்த்தமுள்ள யுத்தநிறுத்த ஒப்பந்தத்தைக் கடைப்பிடிக்கப் பட வேண்டுமானால், வடக்குப் பிரதேச மக்கள் ஜனநாயகச் செயற்பாடுகளைச் சுதந்திரமாக மேற்கொள்ளவேண்டும். இலங்கையின் வட பகுதியான கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட் டங்களில் விடுதலைப் புலிகளினால் அனைத்து இன மக்களினதும் அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டுள்ளன.

யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் வடக்கு - கிழக்குப் பகுதியில் விடுதலைப் புலி களும் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்ட போதும் அதைத் தங்களது போர் நடவடிக்கை ளுக்காகவே பயன்படுத்தினர். அரசியல் பிர முகர்களின் படுகொலைகளை நிகழ்த்தினர்.

யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் முன்னுரையி லேயே போர் நடவடிக்கைகளை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்றுதான் வலியுறுத் தப்பட்டுள்ளது. ஆனால் எமக்குக் கிடைத்திருக் கும் ஆதாரங்கள் அடிப்படையில் தங்களது இரா ணுவ பலத்தை அதிகரித்துக் கொள்ளவே இந்த ஒப்பந்தத்தை விடுதலைப் புலிகள் பயன்படுத் தியுள்ளனர். இத்தகைய செயற்பாட்டைப் புலி கள் கைவிடவேண்டும் என்று அரசு, சர்வதேச சமூகம், கண்காணிப்புக் குழு என்பன வலி யுறுத்தியபோதும் அதை அவர்கள் நிராகரித் தனர். இதனால் பாரிய அளவிலான யுத்த நிறுத்த ஒப்பந்த மீறல்கள் நிகழ்த்தப்பட்டு யுத்த நிறுத்த ஒப்பந்தம் முறிவடையும் நிலைக்கு வந்தது.

கடந்த மாதம்வரை விடுதலைப் புலிகளி னால் மொத்தம் 3,519 யுத்த நிறுத்த மீறல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று கண்காணிப் புக் குழு தெரிவித்துள்ளது. ஸ்ரீலங்கா அரசால் 163 மீறல்கள் மேற்கொள்ளப்பட்டதாகக் கண் காணிப்புக் குழு தெரிவித்துள்ளது. ஆக 96 சத வீத ஒப்பந்த மீறல்களை விடுதலைப் புலிகளே மேற்கொண்டுள்ளனர். படுகொலைகள், சிறார் படைச் சேர்ப்பு, கடத்தல்கள், இளைஞர்களைக் கடத்துதல், தற்கொலைத் தாக்குதல்கள், படை யினரைப் படுகொலை செய்தல், பொதுமக்கள் மாணவர்கள் அரசியல் பணியாளர்களைச் சித் திரவதை செய்தல் மற்றும் சொத்துக்களுக்குச் சேதம் விளைவித்தல், என்ற வகையில் புலி களின் யுத்த நிறுத்த மீறல்கள் உள்ளன.

இந்தச் செயற்பாடுகளினால் யுத்த நிறுத்த ஒப் பந்தம் சீர்குலைந்து, வடக்கு- கிழக்கில் இயல்பு நிலைமை திரும்புவதில் தடை ஏற்பட்டது.

இந்த நிலையில் விடுதலைப் புலிகளினால் படுகொலை செய்யப்பட்ட லக்ஷ்மன் கதிர்கா மருக்கு நாம் வணக்கம் செலுத்துகின்றோம்.

இந்தச் சூழலில் முஸ்லிம் சமூகத்தினர் பற் றியும் நாம் சில கவலைகளைப் பகிர்ந்து கொள் கிறோம். விடுதலைப் புலிகளால் வடபகுதியிலி ருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டனர். அவர்கள் தமது வீடுகளுக்கு மீளத் திரும்ப இந்த ஒப்பந்தம் வகை செய்யவேண்டும் என்று விரும்புகின்றனர். கிழக்குப் பிரதேசத்தில் அவர் களது பாதுகாப்பும் பாரிய ஆபத்தில் உள்ளது. ஆகையால் இந்தப் பேச்சுக்களில் முஸ்லிம் களின் பிரச்சினைகளும் கவனத்தில் கொள்ளப் படவேண்டும். விடுதலைப் புலிகளின் படைய ணியில் 5,368 சிறார்கள் இருக்கின்றனர் என்று யுனிசெவ் அறிக்கை தெரிவிக்கிறது. யுத்த நிறுத்த ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்தது முதல் ஜன வரி 30ஆம் திகதி வரை சிறார் படை தொடர்பிலான 2,011 யுத்த நிறுத்த ஒப்பந்த மீறல்களை விடு தலைப் புலிகள் மேற்கொண்டுள்ளனர். ஒட்டு மொத்த மீறல்களில் இது 55 சதவீதமாகும்.

இன்றைய பேச்சுக்கள் ஒரு புதிய தொடக்கம். இந்தப் பேச்சுக்கள் முன்னெடுக்கப்பட்டு இலக் குகள் அடையப்படும் என்று நம்பிக்கை கொள் கின்றோம். வன்முறையற்ற பாதையில் உள்ளார்ந்த ஈடுபாட்டுடன் போர் நடவடிக்கைகள் தவிர்ந்த நிகழ்ச்சித் திட்டத்தை விடுதலைப் புலிகள் முன் னெடுக்க வேண்டும் - என்றார் அமைச்சர். (எ-க)

உடன்படிக்கை அமுலாக்கத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கியது. அதற்கு முன்னதாக காலை 9 மணியள வில், ஊடகவியலாளர் மாநாடு நடைபெற் றது. பேச்சு நடைபெறும் ஜெனீவா கோட்டை வளாகத்தில் இடம்பெற்ற இந்த மாநாட்டில் பேச்சுகளில் பங்கேற்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் மற்றும் அரச பிரதிநிதிகளின் விவரங் கள் ஊடகவியலாளர்களுக்குக் கையளிக்கப்பட்டன.

இரு தரப்புப் பிரதிநிதிகளையும் நோர்வே சிறப்புத் தூதர் எரிக் சொல்ஹெய்ம் ஊடகவிய லாளர் மாநாட்டுக்கு அழைத்து வந்தார். அவ ரும் சுவிஸ் வெளிவிவகார அமைச்சின் அதி காரி மார்ஸ்வெலும் ஊடகவியலாளர் மாநாட் டில் சிறப்புரையாற்றினர்.

மாநாட்டின் இறுதியில் தமிழீழ விடுத லைப் புலிகளின் பேச்சுக் குழுத் தலைவரான மதியுரை ளர் அன்ரன் பாலசிங்கமும், ஸ்ரீலங்கா அரச குழு வின் தலைவரான அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவும் கைலாகு கொடுத்தனர். பின்னர் நோர்வே சிறப்புத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் நோர்வே முன்னாள் வெளி விவகார அமைச்சர் விடார் ஹொல்கின் ஆகியோருக்கும் அவர்கள் இருவரும் கைலாகு கொடுத்தனர்.

ஊடகவியலாளர் மாநாடு முடிந்ததும் பேச் சுகள் நடைபெறும் இடம் நோக்கி பேச்சுக் குழு வினரும் அவர்களுடன் நோர்வே, சுவிஸ் குழு வினரும் சென்றனர். ஊடகவியலாளர் மாநாட்டில் தமிழீழ மற் றும் ஸ்ரீலங்கா அரச குழுக்களின் தலைவர்களான அன்ரன் பாலசிங்கம், நிமால் சிறிபால டி சில்வா ஆகியோரது உரைகளும் இடம்பெறக்கூடும் என்று எதிர்பார்க்கப்பட் டது. ஆனால், உரைகள் இடம்பெறவில்லை.

சொல்ஹெய்ம் தனதுரையில் இந்தப் பேச் சுகளை அமெரிக்கா, இந்தியா உட்பட உலகநாடு கள் அனைத்தும் ஆவலோடு எதிர் பார்த்துக் கொண்டிருக்கின்றன என்று கூறினார்.

"ஜெனீவாப் பேச்சுகளுக்கு அரச தலை வர் மஹிந்த ராஜபக்ஷவும், விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனும் இணங்கியதையடுத்து, சில காலமாக அதிகரித்து வந்த வன்முறைகள் நின்றுவிட்டன என்று விசேடமாகக் குறிப்பிட்ட சொல்ஹெய்ம் இது மிகச் சிறந்த அறிகுறி என் றும் தெரிவித்தார். அது நல்ல திருப்பம் என்றும் கூறினார். (எ-க-14)

உடன்படிக்கை அமுலாக்கம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாற்றினார். அவரைத் தொடர்ந்து அரச பேச்சுக் குழுவின் தலைவர் நிமால் சிறி பால டி சில்வா உரையாற்ற வந்தார். சம்பிரதாயப்படிதாமே உரை யாற்றவேண்டு மெனினும் விடுதலைப்புலிகளின் தலைமைப் பேச்சாளர் அன்ரன் பாலசிங்கம் முத லில் பேசத் தாம் இடமளிக்கிறார் என்று கூறி அவ ரைப் பேச அழைத்தார் அமைச்சர் சிறிபால டி சில்வா.

அதையடுத்து அன்ரன் பாலசிங்கம் தனது 24 பக்கங்களடங்கிய உரையை ஆற்றினார்.

இது தொடர்பான ஏற்பாடுகள் நேற்று முன் தினம் இரவே எட்டப்பட்டிருந்தன. இந்த விட யத்தில் ஆரம்பத்தில் இழுபறி நிலை இருந்தது. எனினும், இரவு 7.00 மணியளவில் எரிக் சொல் ஹெய்ம் இரு தரப்பினரை யும் சந்தித்து உரை யாடியமையை அடுத்து இணக்கம் எட்டப்பட் டது. அதன்படியே சொல் ஹெய்முக்குப் பின் உரையாற்றிய அமைச்சர், பாலசிங்கத்தை உரை யாற்ற அழைத்தார். பாலசிங்கத்தின் உரை நிறை வடைந்ததும் தனது ஆரம்ப உரையை நிகழ்த் தினார் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா. 'மஹிந்த சிந்தனை' உட்படப் பல விடயங்கள் குறித்து சுமார் அரைமணிநேரம் அவர் உரை யாற்றினார். அதன் பின்னர் பேச்சு ஆரம்பமானது. உடன்படிக்கையை நடைமுறைப்படுத்துவது குறித்தே பேச முடியும் என்று புலிகள் திட்ட வட்டமாகக் கூறினர். ஆரம்பத்தில் இதற்கு அரச குழுவினர் உடன்படவில்லை. உடன்படிக் கையில் பல ஓட்டை, உடைசல்கள் இருப்பதனால் அதனைத் திருத்தி அமைத்த பின்பே அதை நடை முறைப்படுத்துவது பற்றிப் பேசலாம் என்று தெரிவித்தனர். அதனை ஏற்கப் புலிகள் அடியோடு மறுத்து விட்டனர். எல்லாவற்றை யும் விரிவாக ஆராய்ந்த பின்பே அரசு ஒப்பந் தத்தில் கைச்சாத்திட்டது என்று தெரிவித்த பாலசிங்கம், முதலில் இருக்கும் உடன்படிக் கையைச் செம்மையாக நடைமுறைப்படுத்திய பின்னர் அதில் திருத்தங்களை மேற்கொள்ள லாம் என்று கூறினார்.

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபா கர னும் அதையே தன்னுடனான சந்திப்பின் போது வலியுறுத்திக் கூறியிருந்தார் எனத் தெரி வித்த சொல்ஹெய்ம், அவ்வாறு செய்வதே சிறந்தது என்றும் சிபாரிசு செய்தார். இவற்றையடுத்து உடன்படிக்கையைச் செம்மையாக நடைமுறைப் படுத்துவது பற்றிப் பேச அரச தரப்புக்கு குழு இணங்கியது. மதிய போசன நேரத்தின்போது இந்த இணக்கம் எட்டப்பட்டது.

மதிய உணவின் பின்னர் இது தொடர்பான பேச்சு நடைபெறவிருந்தது. (எ-க)

விட்டுக்கொடுக்கும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தரப்புகளும் இணங்குவதாகக் கடந்த மாதம் 25ஆம் திகதி அறிவிக்கப்பட்டதன் பின்னர் வன் முறைச் சம்பவங்கள் குறைவடைந்துள்ளமையை யும் அந்த அறிக்கை வரவேற்றுள்ளது. "இது இரு தரப்புகளும் தமது வாக்குறுதிகளில் முழு அள விலான ஈடுபாட்டையும் சிரத்தையையும் எடுத் துக்கொண்டன என்பதற்கான அறிகுறி" - என்றும் அறிக்கை கூறியது. சமாதான முயற்சிகளுக்காக நோர்வே ஆற்றிவரும் அனுசரணைப்பணி மிக மிக முக்கியமான உதவி எனத் தெரிவித்துள்ள இணைத்தலைமை நாடுகள், நோர்வேயின் பணிக்குத் தமது முழு ஆதரவையும் - உதவி யையும் - வழங்கத் தயார் என்றும் தெரிவித் துள்ளன. (எ-க)

இனப்பிரச்சினைக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விவகாரப் பணிப்பாளர் ஏர்ஸ் சிஸ்விலர் இவ் வாறு தெரிவித்தார். தனது ஆரம்ப உரையில் அவர் தெரிவித்ததாவது:-

இலங்கையில் வன்முறைகள் அதிகரித்து வந்த சமயத்தில், போர் நிறுத்தப் புரிந்துணர்வு உடன்படிக்கையின் அமுலாக்கத்தை ஸ்திரப் படுத்துவதற்கான பேச்சுக்களை நடத்த இலங்கை அரசும், விடுதலைப் புலிகளும் முன்வந்தமை எமக்கு மகிழ்ச்சியை அளித்துள்ளது.

சமாதான நடவடிக்கைக்கு ஓய்வு ஒளிச்ச லின்றி ஆதரவு - உறுதுணை - வழங்கிவரும் அனுசரணையாளர்களான நோர்வே அரசினர், குறிப்பாக அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் மற் றும் இலங்கைக் கண்காணிப்புக் குழுவினர் ஆகியோருக்கும் எமது பாராட்டுதல்களையும் நன்றிகளையும் தெரிவித்துக்கொள்ள நான் விரும்புகின்றேன்.

இந்தப் பேச்சுகளை நடத்துவது என இரு தரப்பினரும் எடுத்த முடிவு அவர்கள் மத்தி யில் நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் நட வடிக்கைகளை ஊக்கப்படுத்தியுள்ளது. அதன் பிரதிபலிப்பு, ஜனவரி மாத இறுதியில் இருந்து ஸ்ரீலங்காவில் வன்முறைகளின் எண்ணிக்கை வீழ்ச்சி அடைந்துள்ளன. மேலும் நம்பிக்கை தரும் விடயங்கள் கடந்த சில நாள்களில் இடம்பெற்றுள்ளன. எ வரும் இரு நாள் களிலும் நம்பிக்கை மேலும் கட்டியெழுப்பப் படும் என்று நாம் எதிர்பார்க்கலாம். இது போர் நிறுத்தப் புரிந்துணர்வு உடன்படிக்கையை அமுல்படுத்தும் விடயத்தில் மிக உறுதியான அடித்தளமாகும். இது இலங்கை அரசினதும் புலிகளினதும் முதலாவதும் முதன்மையான துமான பொறுப்புமாகும்.

இந்தச் சமயத்தில், சமாதான முயற்சிகள் ஒரு புது வாழ்வு பெற்றுள்ளது என்று நான் நினைக்கின்றேன். கடந்த நான்கு ஆண்டு களை நாங்கள் உற்றுநோக்கினால், போர் நிறுத்த உடன்படிக்கை யின் அமுலாக்கல் காரணமாக ஸ்ரீலங்காவின் சாதாரண மக்களுக்கு நல்ல வாழ்க்கை கிடைத் துள்ளது என்பதைக் காணலாம்.

இந்த இடத்தில், சமா தான நடவடிக்கை களில் மனித உரிமை களுக்குப் போதிய மரி யாதை செலுத்தப்பட வேண்டும் என்பதை யும் நான் குறிப்பாகச் சுட்டிக்காட்டுகின்றேன்.

சமாதான முயற்சிகள், மனித உரிமைகள் மற்றும் அபிவிருத்தி என்பவற்றுடன் முரண் பாடுகளுக்குப் பின்னான நிலைமை, ஆழிப் பேரலைக்குப் பின்னான மீள்கட்டுமானம் என்பவற்றிற்கு சுவிற்ஸர்லாந்து வழங்கும் உதவித் திட்டங்களின் கீழேயே இந்த ஜெனீ வாப் பேச்சும் ஒழுங்கு படுத்தப்பட்டுள்ளது. இலங்கையின் முரண்பாடுகளுக்குத் தீர்வு காணும் விடயத்தில் பக்கம் சாராது உதவிகளை வழங்கும் சுவிற்ஸர்லாந்தின் நோக்கத்துட னேயே இவை மேற்கொள்ளப்படுகின்றன.

நான்கு வருடங்களுக்கு முன்னர் சரியாக இதே நாளில் போர் நிறுத்த உடன்படிக்கை கைச்சாதிடப்பட்டது. அதேசமயம் போர்ச் சூழலில் இருந்ததைவிட மேம்பட்டதான ஒரு வாழ்க்கையை அந்தக் காலப்பகுதி ஸ்ரீ லங்கா மக்களுக்கு வழங்கியது. ஆனால், இன்று போரும் இல்லை; சமாதானமும் இல்லை என்ற நிலையே ஸ்ரீலங்காவில் நிலவுகின் றது. நான் ஒரு கேள்வியைக் கேட்க விரும் புகின்றேன். இப்போதிருந்து இன்னும் நான்கு வருடங்களின் பின் 2010ஆம் ஆண் டில் என்ன நடக்கும் என்பதே அந்தக் கேள்வி? அப்போது முடிவாயிருக்கும்.

இலங்கையின் சாதாரண சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் தமது வாழ்வில் "பயங்க ளில் இருந்து விடுதலை பெற்ற" சுதந்திரத் தையும் சமாதானத்தையும் பெற்று தமது வாழ்வை பல் இன, பல மத, பல கலாசாரம் கொண்ட இலங்கையைக் கட்டியெழுப்புவ தற்கான மனித பாதுகாப்பை அனைவரும் இணைந்து உறுதிப்படுத்துவதற்கு இது ஒரு மிக முக்கிய தருணம்.

தேவைப்படும் போதெல்லாம் சமரதான முயற்சிகளுக்கு உதவிகளை வழங்க சுவிற் ஸர்லாந்து தயாராகவே இருக்கின்றது. - என் றார் அவர். (எ-க)

மரண அறிவித்தல்

திருமதி கார்த்திகேசு தனலட்சுமி

அந்திரான் வாய்க்கால், வட்டு. கிழக்கு, சித்தன்கேணியைச் சேர்ந்த திருமதி கார்த்திகேசு தனலட்சுமி அவர்கள் நேற்று (22.02.2006) புதன்கிழமை காலமானார். அன்னார் சுப்பிரமணியம் கார்த்திகேசுவின் பாசமிகு மனைவி ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.02.2006) வியாழக் கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூத வுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு மயானத்திற்கு எடுத் துச்செல் லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அந்திரான்வாய்க்கால், வட்டு. கிழக்கு, சித்தன்கேணி. (அ-48030)(30-15-12) கணவர்.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 23.02.2006இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org